www.tamilarangam.net


# சரிநிகர்

இதழ்- 91 பெப்.08-பெப்.21. 1996 விலை-7.00




# அடுத்தது தென்மராட்சி? வடமராட்சி?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தீர்வை ஏற்குமாறு இந்தியா வற்புறுத்தல்!

அரசு முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைத் திட்டத்தினைச் சிறு திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளுமாறு இந்திய அரசு தமிழ்க் கட்சிகளிடம் கோரியுள்ளது.

இது தொடர்பாக இந்திய அரசின் பிரதிநிதியாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் செயற்படுவதுடன் இதுவரை அவர் தமிழ்க் கட்சிகள் ஆறின் தலைவர்களைச் சந்தித்துள்ளார்.

ஈ.பீ.டீ.பீ., ஈ.பீ.ஆர்.எல்.எவ்., ஈரோஸ், புளொட், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் யோசனைகள் பற்றிய இந்திய அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய தூதுவர் அது பற்றித் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளின் கருத்துக்களை எடுத்துக் கொண்டு தற்போது இந்தியா சென்றுள்ளார்.

இந்திய அரசு இப் பிரச்சினையினுள் தலையிட்டிருப்பது இலங்கை அரசின் கோரிக்கைக்கிணங்கவே எனவும் அறியக் கிடைத்துள்ளது.

அதேபோல் அதிகாரப் பகிர்வு யோசனைகள் தொடர்பான முடிவுகள் எடுக்கையில் ஒரே கொள்கையில் நின்று செயற்படவும், ஒற்றுமையுடன் முடிவுகளெடுக்கவும் தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஐந்தும் தீர்மானித்துள்ளன.

இதன் பலனாக யாழ்ப்பாண மாவட்ட ஈ.பீ.டீ.பீ. பாராளுமன்ற உறுப்பினர்களின் நியமனம் பற்றி மனுத் தாக்கல் செய்த வழக்கும் ஈ.பீ.ஆர்.எல்.எவ். இயக்கத்தினால் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இதே சமயம் ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மை இனக் கட்சிகள் அனைத்துடனும் அதிகாரப் பகிர்வு யோசனைகள் பற்றிக் கலந்துரையாடத் தற்போது ஆரம்பித்துள்ளது.

இதுவரை ஐ.தே.க., தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

அதேபோல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அரசியல் தீர்வு யோசனைகளுக்கு ஐ.தே.க.வை வென்றெடுக்கும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளார். அதன் முதற்படியாக அஷ்ரஃப் ஐ.தே.க.த் தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹவைச் சந்தித்துள்ளார்.

(லக்பிம - 19960211)

## இந்தியாவின் நேசக்கரம்!

முல்லைத்தீவிற்கு அப்பால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆயுதக் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தாம் பாரிய பங்காற்றியதாக இந்தியக் கடற்படை தெரிவித்துள்ளது என ரைம்ஸ் ஒப் இந்தியாவின் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

இந்தியக் கடற்படை அத் தாக்குதலில் பங்குபற்றவில்லையென்ற இலங்கை - இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளின் மறுப்புகளின் மத்தியிலேயே இத் தகவல் வெளிவந்துள்ளது.

மூன்று பெரிய படகுகளைக் கொண்ட ஒரு இந்திய சிறு கப்பற் படையே இத் தாக்குதலில் ஈடுபட்டது. இக் கப்பற்படையில் ஒரு தலைமை வகையைச் சேர்ந்த சிறு நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கப்பலும் (Leader Class Frigate), ஒரு ஏவுகணை வழித்துணைக் கப்பலும் (Missile Corvette-INS Kirpan), ஒரு ஆழ் கடல் நோக்கிய தற்காப்புப் படகும் (Seaward Defence Boat - SDB- 57) உள்ளடங்கியிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கக் கப்பலுக்கும், இலங்கை கடற்படைக்குமிடையே நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டின் இடை நடுவே ஆழ்கடல் நோக்கிய தற்காப்புப் படகின்(SDB) முக்கிய பகுதி சேதமானதால் அது சென்னைத் துறைமுகத்திற்குத் திரும்பிச் சென்றதாக அப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி 12ஆந் திகதி இலங்கை அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற குறிப்பான உளவுத் தகவல் ஒன்றின் மீது டெல்லியிலிருந்து கிடைத்த உத்தரவின் பேரில் இத் தாக்குதல் வழி நடத்தப்பட்டதென விசாகப்பட்டினத்தைத் தளமாகக் கொண்ட கிழக்குக் கடற்படைத் தலைமை தெரிவித்துள்ளது.

அச் சிறு கப்பற் படை சென்னையிலிருந்து செல்கையில், கிழக்குப் பக்கமாக ஓரிடத்திலிருந்து வந்தது என நம்பப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கக் கப்பலைக் கண்டு பிடித்தது. அத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கக் கப்பலில் அண்ணளவாக 4000 தொன் ஆயுதங்கள், ஆயுத உபகரணங்கள், வெடி மருந்துகள் என்பன இருந்ததாக மதிப்பிடப்படுவதாக அப் பத்திரிகை கூறுகிறது.

இலங்கைக் கடல் வலயத்திற்கு வெளியே கண்டு பிடிக்கப்பட்ட அக்கப்பல் இந்தியக் கடற்படையினரின் கண்காணிப்புடன் இலங்கைக் கடற் பரப்பினுள் கொண்டு வரப்பட்டு இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்பட்டதாகவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த சண்டே ரைம்ஸ்18021996)

## புதிய அரசியல் கட்சிகள் எதுவும் வேண்டாம்!

இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பேதங்களைத் தோற்றுவிக்கும் கட்சி அரசியல் காரணமாக நடைபெறும் அழிவுகளைப் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவூட்டும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தச் சுயாதீன நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இக் குறுகிய அரசியல் கருத்துக் காரணமாகக் குடும்பங்களுக்கிடையே பேதங்கள், பணிவற்ற தன்மை, ஒற்றுமையின்மை ஆகியன நாசகார நடவடிக்கைகள் நடைபெறக் காரணமாகியுள்ளதாகச் சுயாதீன நிறுவனம் வேண்டுகோளை வெளியிட்டுத் தெரிவித்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள கட்சி முறையைக் கண்டிக்கும் சுயாதீன நிறுவனம் புதிய அரசியல் கட்சிகள் அமைக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கிறது.

ஐக்கிய கிறீஸ்தவ கொங்கிரஸ் என்ற பெயரில் புதிய கட்சியொன்று அமைக்கச் செய்யப்படுவதானது, கிறீஸ்தவ தர்மத்தின் அடிப்படை இலக்குகளை மீறியுள்ளது எனத் தெரிவிக்கும் சுயாதீன நிறுவனம், இயேசுக் கிறீஸ்துநாதரைப் பொதுமக்களின் வாக்குகளைப் பெற உபயோகிப்பதையும் கண்டிக்கிறது.

1948 முதல் பார்க்கும்போது பல்வேறு அரசியல் கட்சிகள் அமைக்கப்பட்டிருப்பதுடன், அவை வலதுசாரி, இடதுசாரிக் கொள்கைகள் மீது கவனஞ் செலுத்தியுள்ளன.

இக் கட்சிகளில் சில கட்சிகள் நாட்டினுள் நிலவும் பல் இனச் சமூகத்தை உறுதியற்ற நிலைமையொன்றிற்குட்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளன.

இவ்வாறான கட்சிகள் அநேகமாக அரசாங்கத்தை அமைப்பதற்காகத் தமது பலத்தைக் காட்டிய விதம் தெளிவானதாகும்.

நாட்டின் சமாதானம், ஒருமைப்பாடு, செளபாக்கியம் ஆகியவற்றை நாம் விரும்புகிறோம். அதேபோல் மக்கள் அனைத்து அரசியல் கட்சிகளிலுமிருந்து விடுபட வேண்டுமென நாம் கூறுகிறோம்.

(திவயின - 19960215)

## அதிகாரப் பகிர்வுப் பிரச்சாரம்!

இனங்களுக்கிடையே சமத்துவத்திற்கும் ஜனநாயகத்திற்குமான கம்பஹா மாவட்ட அமைப்புக் கூட்டமைப்பின் கூட்டம் பெப்ரவரி மாதம் 10ம் திகதி ஜனாவபோத கேந்திர நிலையத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஏழு அமைப்புகள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன. அவை அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்போடு செயற்படுவதென்பதே அவ் வமைப்புகளின் பொது நோக்கமாகும்.

இந் நோக்கங்களை வென்றெடுக்கும் முகமாக மக்கள் மத்தியில் இந் நோக்கங்களை எடுத்துச் செல்லும் பொருட்டு தேர்தல் தொகுதி மட்டத்தில் செயற் குழுக்களைக் கட்டியெழுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளினூடாகச் சுயாதீனமான செயலூக்கம் உள்ளவர்களை அவ்வமைப்புகளில் இணைத்துக் கொள்வதெனவும், நல் ஆதரவுள்ள வேறு அமைப்புகளையும் இணைத்துக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் சுவரொட்டி இயக்கமொன்றை 21ந் திகதி நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புலிகளைத் தடை செய்யும் அவசியம் இல்லை!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதா? இல்லையா? என்பது தொடர்பாக ஒரேயடியான முடிவு எதனையும் எடுக்க முடியாததால் அரசு பெரும் அரசியல் நெருக்கடியினுள் சிக்கியுள்ளது.

அரசு இதுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காததன் காரணம், அதிகாரப் பரவலாக்கல் யோசனைத் திட்டம் பற்றி அவர்களுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்த முடியுமென்ற எதிர்பார்ப்புடனாகும்.

கடந்த வாரம் நிகழ்ந்த அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறியத்தரும் பத்திரிகையாளர் கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யாதது ஏன்? எனப் பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு நீதிமன்ற, அரசியலமைப்புத்துறை அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் வழங்கிய பதிலில் இவ்விடயம் தெரியவந்தது.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வாரம் இந் நாட்டிலுள்ள வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளிடமும், அரச தூதுவர்கள் சபைப் பிரதிநிதிகளிடமும் தத்தமது நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு இடங் கொடுக்க வேண்டாமெனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையினுள் தடை செய்யப்படாத அரசியல் இயக்கமொன்றின் செயற்பாடுகளைத் தாம் எவ்வாறு கட்டுப்படுத்துவது என இக் கலந்துரையாடலின் போது வெளிநாட்டுத் தூதுவராலய அதிகாரிகள் வெளிநாட்டு அமைச்சரிடம் கேள்வியெழுப்பியுள்ளனர்.

பயங்கரவாத இயக்க நடவடிக்கைகளுக்கு இடங்கொடுப்பதில்லை என்ற சர்வதேச இணக்கப்பாட்டின்படி செயற்படுவதானால் முதலில் அவ்வியக்கம் அந்நாட்டில் தடை செய்யப்பட வேண்டுமென்பது இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகர் உட்பட்ட அநேக தூதரக அதிகாரிகளின் கருத்தாகவுள்ளது.

அமைச்சரவை முடிவை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளின் இந் நிலைப்பாடு பற்றிக் குறிப்பிட்டுப் பத்திரிகையாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பதிலளித்தும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வது தொடர்பான பிரச்சினையொன்று எழவில்லை என்பது அவரது பதிலாக அமைந்தது. பெரிய பிரித்தானியா, அயர்லாந்தின் கெரில்லா இயக்கமான ஐ.ஆர்.ஏ. இயக்கத்தைத் தடைசெய்யவில்லை எனவும் அவர் கூறினார்.

அரசு இச் சந்தர்ப்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அதிகாரப் பகிர்வு யோசனைகளை முன் வைக்காவிடினும் ஜனாதிபதி மூன்று நிபந்தனைகளின் கீழ் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இன்னும் தயாராக இருப்பதால், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் அவசியம் இதுவரை எழவில்லை எனவும் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

(லக்பிம - 19960211)

## 18,000 பொலிஸார் ஓய்வு!

இலங்கைப் பொலிசிலிருந்து பதினெட்டாயிரம் பேர் ஓய்வு பெற்றுச் செல்ல விண்ணப்பித்துள்ளதாகப் பொலீஸ் தலைமையகத் தகவல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அண்மையில் பொலீஸ் திணைக்களத்தினுள் செய்யப்பட்ட இடமாற்றங்கள் காரணமாக இவர்கள் பதவி விலகிச் செல்ல விண்ணப்பித்துள்ளதாகவும் அத் தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கிறது. நீண்ட காலம் ஒரே கோட்டத்தினுள் இருந்த அதிகாரிகள் கடந்த சில தினங்களிற்கு முன் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

விண்ணப்பித்துள்ளவர்களுடன் சிலர் வட-கிழக்குப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களாக இருக்கின்றனர். ஏனைய பிதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களும் இவர்களுள் அடங்குவர்.

இவ்வளவு மிகப் பாரிய எண்ணிக்கையினர் பொலிசிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்ல விண்ணப்பித்துள்ள முதற் சந்தர்ப்பம் இது வெனவும் பொலீஸ் தலைமையகத்தின் தகவல் வட்டாரம் தெரிவித்தது.

(யுக்திய - 19960211)

## பொலிஸாரின் ஆயுத வேட்டை!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொழும்புப் பிரதேசப் பொறுப்பாளராகச் செயற்படுவர் புவிகந்தராஜா எனப்படும் நியூட்டன் ஆவார். அவரின் மேற்பார்வையின் கீழ்த் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குச் சொந்தமான வெடி மருந்துப் பொருட்கள் உட்பட ஆயுத உபகரணங்கள், 4 களஞ்சியங்கள் கொழும்பு நகரிலும், அதனைச் சுற்றியுள்ள சன நெருக்கடி மிக்க பிரதேசங்கள் சிலவற்றிலும் இருப்பதாக இரகசிய பொலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

புலித் தலைவர்களின் ஆலோசனையின் மீது தலைநகரத்திலும், அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் வன்முறை நடவடிக்கைகளுக்காக ஆயுத உபகரணங்கள் உட்பட வெடி மருந்துகளை விநியோகிப்பது இவ் ஆயுதக் களஞ்சியங்கள் நான்கிலிருந்தே எனவும் அவ்வாறு விநியோகிக்கப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் புவிகந்தராஜா அவ்விடங்களிலிருந்து அனைத்து நடவடிக்கைகளையும் நெறிப்படுத்துவதாகவும் தகவல் வெளிவந்துள்ளதாகச் சிரேஷ்ட இரகசியப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவற்றில் ஆயுதக் களஞ்சியங்கள் இரண்டு மிகப் பெரியனவிலானவை எனவும் நிலத்துக்கடியில் அக் களஞ்சியங்கள் இரண்டும் அமைந்திருக்கலாம் எனவும் இரகசியப் பொலிஸ் நம்புகிறது.

புலிகள் இயக்கத்திற்குரிய இவ் ஆயுதக் களஞ்சியங்கள் இரண்டு தொடர்பான இரகசியப் பொலிசிற்குக் கடந்த சில தினங்களுக்கு முன்பு கிடைத்த தகவல்கள் சிலவற்றின் மீது தலைநகரத்தின் இரண்டு இடங்கள் மீது இரகசிய பொலிஸ் குழுக்கள் இரண்டு சோதனைகளை நடத்தியுள்ளன. ஆனாலும் அவ் இடங்களில் அவ்வாறான ஆயுதக் களஞ்சியங்கள் தொடர்பான தகவல்கள் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் அச் சிரேஷ்ட இரகசிய பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

அவ் வெடி மருந்துகளும், ஆயுத உபகரணங்களும் வருடக் கணக்காக அரிசி, புகையிலை போன்ற பொருட்களினுள்ளே மறைத்து வைக்கப்பட்டு வட பகுதியிலிருந்து லொறிகளினூடாக மிகச் சூட்சுமமான விதத்தில் கொண்டுவரப்பட்டுச் சேர்த்து வைக்கப்பட்டவை என இரகசியப் பொலிஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இதே சமயம் கொழும்புப் புலித் தலைவராகச் செயற்படும் புவிகந்தராஜாவைக் கைது செய்வதற்கு விஷேட இரகசிய பொலிஸ் குழுக்கள் பல தற்போது விரிவான விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(லங்காதீப-19960215)

## பிள்ளைகள் பாட பெற்றோர் மறுப்பு!

இம் முறை சுதந்திர தின அரச வைபவத்தின் வாழ்த்துப் பாடலைப் (ஜய மஹல் பாடல்) பாடப் பொறுப்பேற்ற கொழும்பு மகளிர் கல்லூரிப் பிள்ளைகள் அதில் கலந்து கொள்வதைப் பெற்றோர் மறுத்ததால் அவ் வைபவத்தின் வாழ்த்துப் பாடலைப் பெண் இராணுவத்தினரை வைத்தே பாடுவித்தனர்.

பாடசாலை மாணவிகள் வாழ்த்துப் பாடலைப் பாட வரமாட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட சில மணித்தியாலங்களின் பின் இப் பெண் இராணுவத்தினர் அவசர அவசரமாகவே அதற்காகத் தயார் படுத்தப்பட்டனர்.

குண்டுத் தாக்குதல் காரணமாக எழுந்த பதற்ற நிலை காரணமாகப் பெற்றோர் இம் முறை சுதந்திர தின அரச வைபவ நடவடிக்கைகளுக்குப் பிள்ளைகளை அனுப்ப மறுத்திருந்தனர்.

(யுக்திய - 19960211)

## இன்ரநெற் ஊடாக ஏவுகணை உதவி!

தமிழீழ விடுதலைப் புலிப் பயங்கரவாதிகள் முதன் முறையாகச் சர்வதேசத் தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை (INTERNET) ஊடாக ஏவுகணைகள் பெற்றுக்கொள்ள நிதி உதவி கோரியுள்ளதாக இலங்கை அரசிற்குத் தெரியவந்துள்ளதாக அரசின் உத்தியோக பூர்வ தகவல் வட்டாரங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

''இது மிகவும் பாரதூரமான சம்பவம். திருட்டுத்தனமாக ஏவுகணைகளைப் பெற்றுக் கொண்ட புலிகள் தற்போது வெளிப்படையாகவே ஏவுகணைகளைப் பெற்றுக்கொள்ளச் சர்வதேச ரீதியாக உதவி கோரியுள்ளனர்'' எனச் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

''இது ஏவுகணைகளைப் பெற்றுக்கொள்வதற்காகச் செய்யப்படும் அவசர கோரிக்கையாகும். உங்கள் உதவியைத் தாமதமின்றிப் புலிகள் இயக்கம் எதிர்பார்க்கிறது'' என இப்புலிகளின் வேண்டுகோள் கடந்த சில தினங்களுக்கு முன் உலகம் பூராவும் இன்ரநெற் ஊடாக பரப்பப்பட்டுள்ளது.

இச் சர்வதேச கணினித் தகவல் தொடர்புப் பரிவர்த்தனையினூடாகத் தமக்கு ஏவுகணைகளைப் பெற்றுக் கொள்ளும் செய்தியை அனுப்புவதற்காகக் கனடாவிலுள்ள கால்ரன் (Carlton) பல்கலைக்கழக இன்ரநெற் கணினி பரிவர்த்தனையையே புலிகள் பாவித்துள்ளதாக இலங்கை அரசிற்குத் தெரியவந்துள்ளதாக அத் தகவல் வட்டாரம் மேலும் தெரிவித்துள்ளது.

(திவயின - 19960215)

DAILY NEWS
MIDWEEK MIRROR
THE ISLAND
THE SUNDAY TIMES, SUNDAY
THE SUNDAY OBSERVER
Express
THE SUNDAY LEADER



தொகுப்பு : சி. வீவேக்

www.tamilarangam.net



# கிளிவெட்டி-குமாரபுரம்:
# கண்ணீரிலும் இரத்தத்திலும் கரைகிறது!

**“என் கவிதை தொடங்குகிறது. கண்ணீரிலும் இரத்தத்திலும் கரைகிற நம் வாழ்க்கையில் இருந்து”**

என கவிஞர் சேரன் எழுதிய கவிதை இதை எழுதத் தொடங்குகையில் ஞாபகம் வருகிறது.

எங்களது வாழ்க்கை கண்ணீரிலும் கரைகிறது; இரத்தத்திலும் கரைகிறது.

எங்கள் காலத்தில் மானிட உணர்வுகளுக்கும் வாழ்க்கைக்கும் பெறுமதியில்லாது போய்விட்டது. தினமும் யாராவது பலர் சுடப்படுகின்றனர். தினமும் பலர் கைது செய்யப்படுகின்றனர். தினமும் பலர் சித்திரவதை செய்யப்படுகின்றனர். இரவையும் பகலையும் அச்சமுடன் தான் கழிக்கவேண்டியிருக்கிறது.

ஏன்!

மனிர்களை மனிதர் நேசிக்கிற; ஒருனை ஒருவன் அடிமைப்படுத்தாத; ஒருவனின் இரத்தத்தை ஒருவன் குடிக்காத வாழ்க்கையைப் பற்றி எங்களால் சிந்திக்க முடியவில்லை.

இத்தனின் சித்தாந்தத்தையோ மகாத்மா காந்தியின் அஹிம்சா தத்துவத்தையோர் இன்னும் இயேசுவானவரின் ''உன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் காட்டு'' என்கிற தத்துவத்தையோ நான் போதிக்க முனைவதாக எண்ணுவீர்களோ!

கடல் ஓயாது இரைகிறது. கந்தக பூமி பனியில் குளிர வீதி வெறிச்சோடிக்கிடக்கிறது. எனக்கு உறக்கம் வரவில்லை. துயரமும் ஏக்கமும் மனதை அந்தகாரப்படுத்துகின்றன. உங்களிடம் அதை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த திங்கள் இரவு (ஜனவரி 12ம் திகதி) மீண்டும் ஒரு கொடுமையான இரவைச் சந்[illegible]தன்.

ஏனஎன்று சொல்கிறேன்.

பகலில் வெண்மை அடங்கிக்கொண்டிருந்த ஒரு கிராமம். வேலைக்குப் போன குடிகள் இன்னமும் சிறிது நேரத்தில் திரும்பிவிடுவார்கள்.

அம்மா புல்லுக்கட்டோடும், அப்பா பனஞ்சிராயோடும் திரும்பிவந்து விடுவார்கள்.

சின்னத்தங்கையோ சின்ன அக்காவின் மடிக்குள் இருக்கிறாள். சின்னக்காவின் அக்காவோ குசினிக்குடிக்குள்.

தாத்தா சுருட்டு சுருட்டுகிறார்.

பறவைகள் கூடு திரும்புகின்றன.

யாவும் இயல்பாக இருக்கின்றன தானே!

இனி வரப்போவது அதிக நம்பிக்கையில்லாத பனி இரவுதான். அம்மாவும், அப்பாவும், ஏதேனும் தங்களுக்குள் பேசிக் கொள்ள, பிள்ளைகள் சாம்ராச்சியம் அந்த சின்ன குடிலுக்குள். சின்னவன் அண்ண[illegible] பள்ளிக்கூட கொப்பியில் கோலம் போடுவான். அண்ணன் குழறுவான். சின்னத்தங்கைக்கோ இரவுகளில் இடைவிட்டு கேட்கும் படீர் சத்தங்களில் கடும்பயம்தான். தாத்தா ஏதேனும் சொல்லி சமாளித்து விடுவார் தானே!

குளிர் மூடும் இரவில் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையில் மழலைகள் தூங்கலாம். அச்சிறு குடிலுக்குள்.

எங்கள் அநேக கிழக்குப்புற கிராமங்கள் இப்படித்தானே உள்ளன.

இந்தக்கிராமம் இருக்கும் இடத்தில் இருந்து சற்றுத்தூரம் போவோமே!

முகாம் ஒன்று தெரிகிறது. தூரத்தில் நின்று பார்ப்போம். முட்கம்பி சுருள்களுக்குள் நுழைந்து போகவேண்டியதில்லை. ஒரு கெரில்லா வீரனைப்போல. வாழ்க்கைச் சுருள்களுக்குள் நுழைந்து நுழைந்து களைத்ததே போதும்.

இங்கிருந்தே பார்ப்போம்; காது கொடுத்து. கரகரப்பான போதை நிறைந்த பாடல்களை காற்று அள்ளி வருகிறதா?

அவர்களை எங்களுக்கு பிடிக்காத போதும் அவர்களது மொழி எங்களின் அநேகமானவர்களுக்குப் புரியாத போதும் கடினமான இராணுவ வாழ்க்கைப் பயமும் துயரமும் அதில் நிறைந்திருப்பதாக நாங்கள் உணர முற்படுகிறோம். அங்கிருந்து இருவர் புறப்பட்டு வருகின்றனர்.

நாங்கள் விலகிச் செல்வோம் எந்த நேரம் என்ன நடக்குமோ யாரறிவார்.

காடுகளில் கரைந்துறையும் இன்னொரு வாழ்க்கையின் புதல்வர்களும் இந்தக் கந்தக பூமியில் ஓடியாடித்திரிவது உண்மைதானே!

நடக்கவிருந்தது நடந்தது. புறப்பட்டு வெளியில் வந்தவர்கள் திரும்பவும் போதை தெளிந்து போனார்கள் பிணமாக. ஞாயிறு மாலை (11-2-96) கிளிவெட்டி எனும் கிராமத்தில் குமாரபுரம் பகுதியில் இரண்டு இராணுவத்தினர் கொலையுண்டனர்.

முகாம் பாடல்களை நிறுத்திக்கொண்டது. துப்பாக்கிகளையும் கோடாரிகளையும் எடுத்துக்கொண்டது. அது இருந்த இடத்திலிருந்து புறப்பட்டது குமாரபுரம் நோக்கி. 11ம் திகதி மாலை 5மணியளவில் தொடங்கியது நகர.

குடிசை ஒன்றில் இருந்த சிறுவனுக்கு தூரத்தே தொடங்கி வெடிச்சத்தங்கள் கிட்ட கிட்ட நெருங்கி வருவது கேட்கிறது. அவன் தலைதெறிக்க வெளியில் ஓடி தூர இருந்த கடையொன்றில் புகுந்து கொள்கிறான். இன்னொரு குடிசை; தாத்தாவோ, பேரப்பிள்ளைகளை அனைத்துக் கொள்கிறார். இயல்பற்ற ஏதோ ஒன்று நடக்கப்போவதாக அவர் பதறுகிறார்.

இன்னொரு குடிசை. தன்தூக்கமுடியா வயிறை தூக்கியபடி அம்மா ஒருத்தி கதவு யன்னல்களை மூடுகிறாள். தன் சிறு மகளையும் தன்னுள் அடங்கியுள்ள மழலையையும் பாதுகாக்க அவள் அச்சிறு குடிலுக்குள் இடம் தேடுகிறாள்.

கிராமம் திகில் உறைகிறது.

வீதிகள் தடதடக்கின்றன. கதவுகள் உதைபடுகின்றன.

கபில என்னும் இராணுவ சார்ஜன்ட் கத்துகிறான்; எங்கடை ஆட்கள் இரண்டுபேரை கொட்டி சுட்டது நாங்கள் எல்லாத்தமிழனையும் கொல்லுவோம்.

திறந்த கதவுக்குள் புகுந்து வெட்டு.

திறவாத கதவுக்கு வெடி வை!

சாலறம் தோறும் வெடித்தன சன்னங்கள்.

இது மதுவின் வெறியல்ல. இனவெறி. மணப்பது மதுவாடையல்ல. இனவாடை.

அழிஞ்சிப்பொத்தானை... கொக்கட்டிச் சோலை.., குமாரபுரம். மூன்று வயது சிறுமியொருத்தியின் குண்டிச்சதை, வெட்டில் பறக்கிறது. அம்மாவோ உலகுக்கு வராத மழலையுடன் மண்ணில் சரிந்தாள். அவளின் கீழே உயிர்தப்பி உறைந்து போய் கிடந்தது அவள் சிறு மகள். கன்னம் பிழந்த சிறுவன் கூட கதறவில்லை. மூச்சடைத்து கிடந்தான். சின்னத்தங்கையை அவளின் சின்னஅக்காவை அக்காவின் அக்காவை துளைத்துச் சென்றது சன்னம். வாலிவதம். ஏழுமாமரங்களை துளைத்து செல்கிறது அம்பு. நியாயம் மண்ணில் சரிகிறது. 24மனித உடல்களாக சாட்சி சொல்கின்றன. காயம்பட்ட ஜென்மங்கள்.

புலிகளிடம் சிக்கிய ஜனநாயக தேவியை மீட்க அரச இராணுவம் புரிந்த வதம். வெண்டாமரை கன்றி வேறெதற்கு? தண்டாமரைக்கு தகாது கொலோ!

தர்மலெட்சுமி என்னும் அபலைப்பெண் தன்னை இழந்தாள் ஜனநாயகத்தின் பெயரால். தர்மலட்சுமியின் கூட வந்த சிறுவன் வெடிபட்டோடி பிழைத்து இன்னும் உறங்குகிறான். பிரமை களையாது! திடுக்கிட்டு விழிக்கிறான்.


நிகழ்ந்தவையெல்லாம் மிகை உணர்ச்சியுடன் இனவாதமாகக் கூறுவதாக உங்களில் சிலர் புனித உணர்வுடன் துக்கப்படுகிறீர்கள். நான் என்ன செய்யட்டும்.

அரசு புரிபவைகள் பயங்கரவாதம் அல்ல எனவும் அவை சட்டத்தையும் ஒழுங்கையும் தனது இறையாண்மையையும் தனது ஜனநாயகத்தையும் நிலைநாட்டவுமே செய்வதாக கருதும் புனிதர்கள் இருக்கையில் இவற்றை சொல்லாமல் விடுதல் கூடுமோ!

கடந்த 31ம் காலை கொழும்பு அதிர்கிறது. மக்கள் கிலிகொண்டு ஓடுகின்றனர் திசை கெட்டு. மரணங்கள் எங்களைக் கேட்காமலே கொடூரமாகத் தாக்குகின்றன. காயங்கள் உடலை சின்னாபின்னமாக்குகின்றன. இரத்தம் வலிய வலிய ஓடுகின்றார்கள் மக்கள் அழுதழுது. எழுபது பேருக்கு மேல் மரணமாகின்றனர். 1000க்கு மேற்பட்டவர்கள் காயம்படுகின்றனர். புலிகள் அப்பாவி மக்களின் உயிர்களைப் பற்றிச் சிந்திக்காமல் அரசியல் பொருளாதார இலக்குகளை தெரிவது இதுவா முதற் தடவை.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை தொடங்குகிறது. மேற்சொன்ன அதே காட்சி. யாழ். மருத்துவமனையை நோக்கி 200க்கும் மேற்பட்ட பிணங்களும் 1000க்கும் மேற்பட்ட நடைப் பிணங்களும் இரத்தம் வழியவழி ஓடுகின்றார்கள். கடந்த 10 ஆண்டுகளாக ஓடுகிறோம். வாழ்க்கையை தேடியல்ல. வாழ்க்கையை விட்டு. கொழும்பில் குண்டு வெடித்த அன்று இரவு கிண்ணியாவில் அரச இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 3 முஸ்லிம்கள் இறந்துபோனார்கள். சிறுமிகள் சிதறிய இரும்புத்துகள்களை உடல் எங்கும் சுமந்து மருத்துவமனைக்கு போனார்கள்.

கிராமம் திகிலுறைகிறது.
வீதிகள் தடதடக்கின்றன.
கதவுகள் உதைபடுகின்றன



## ஆமி வந்திருக்கிறோம் கதவைத்திற!

மூதூர்ப் பிரதேசத்தைச் சேர்ந்த கிளிவெட்டிப் பகுதியில் குமாரபுரம் என்ற சிறிய கிராமம் இராணுவ வெறியாட்டத்திற்கு இலக்காகியுள்ளது.

கடந்த 11ந்திகதி ஞாயிற்றுக்கிழமை கிராமத்துள் புகுந்த இராணுவத்தினர் வெறித்தனமாக அப்பாவி கிராமவாசிகளைச் சுட்டுத் தள்ளி தங்களது இராணுவக்கோட்பாட்டுக்கும் வீரத்துக்கும் மீண்டுமொரு வரலாறு படைத்துள்ளனர்.

மாலை ஐந்து மணியளவில் அந்தக் கிராமத்தின் தெரு ஒன்றில் இராணுவத்தினர் இருவரை எதிர்கொண்ட புலிகள் அவர்கள் இருவரையும் சுட்டுக் கொன்றுள்ளனர். புலிகள் காரியம் ஆனதும் சென்றுவிட்டார்கள். 5.30 மணியளவில் குமாரபுரம் கிராமத்துள் புகுந்த இராணுவத்தினர் வழக்கமபோல புலிகள் இல்லையென்பதை உறுதிசெய்து கொண்டு திருப்பித்தாக்க ஆரம்பித்ததில் குழந்தைகள் பெண்கள் உட்பட 24பேர் உடனேயே கொல்லப்பட்டிருக்கிறார்கள். காயமடைந்து இரவிரவாக இரத்தவெள்ளத்தில் கிடந்த பலர் அடுத்தநாள் பிற்பகலிலேயே திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கிளிவெட்டிக் கிராமமும் அதன் சூழஉள்ள பகுதிகளிலும் இராணுவ வெறியாட்டம் நடைபெற்றது. இதுதான் முதல்தடவையல்ல. கடந்த அரசு காலத்தில் கைகள் பின்புறம் கட்டப்பட்டநிலையில் ஆண்கள் வாகனத்திலேற்றிச் செல்லப்பட்டு வரிசையாக நிற்க வைத்து இராணுவம் சுட்டுப்பழகியதில் 35 பேர் கொல்லப்பட்டார்கள். சம்பவத்தில் ஒருவர் உயிர்தப்பி வந்ததாலேயே விபரங்கள் வெளியாகின.

மாலை ஐந்துமணிக்கு வெடிச்சத்தங்கள் கேட்டதும் ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டதை உணர்ந்த நாங்கள் பயத்தினால் வீடுகளுக்குச் சென்று முடங்கிவிட்டோம். 5.30மணியிருக்கும்.... வளைவுகளில் சப்பாத்து சத்தங்கள். ''நாங்கள் ஆமி வந்திருக்கிறோம்; கவவைத்திற!'' என்று அதட்டல்கள் வேறு. வேறுவழியின்றி கதவைத்திறந்தோம். எதிரே நின்ற இராணுவத்தினர் எங்கள் மீது சுட ஆரம்பித்தார்கள்... என்று கூறிய கிராமவாசி ஒருவர் குலுங்கிக் குலுங்கி அழுதார். இவரது ஆறு வயது மகள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டிருக்கிறாள். ''கடந்த வாரம்தான் என்மகளை பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்று சேர்த்தேன்... என்று கூறி கதறினார் அந்தத் தந்தை. அவரது கைக் குழந்தையும் மனைவியும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனது தாயாரை பறிகொடுத்த கோணஸ்வரி (17) தேம்பித் தேம்பி அழுகிறாள். இவளும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளாள்.

இராணுவத்தினர் இரண்டு மணிநேரமாக தங்கள் கோர ஆட்டத்தை நடத்தியுள்ளார்கள். கதவுகள் உடைக்கப்பட்டு பலர் வெளியே இழுத்துச் சுடப்பட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு மணி கோரத்தால் அந்தக் கிராமமே அதிர்ந்து போயிருக்கிறது. அடுத்தநாள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரும் வரை காயப்பட்டவர்கள் தண்ணீர்கூட இன்றி இரத்தவெள்ளத்தில் துவண்டு போயிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலின் போது இரண்டு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒருவர்; குணரத்தின. மற்றவர் அனுரசிறி.

சுதாகர் என்ற பன்னிரண்டு வயது மாணவன் இந்தச் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்திருக்கிறான்.

**கோரவெறியாட்டத்தில் பலியானவர்கள்;-**

1. செல்லத்துரை பாக்கியராசா (32)
2. வினாயகமூர்த்தி சுதாகரன் (13)
3. ஸ்டீபன் பத்மினி (9)
4. விஜயகாந்த் லக்ஷ்மி(43)
5. சிவபாக்கியம் பிரசாந்தினி (06)
6. வடிவேலு நடராசா (35)
7. தங்கவேல் சுமதி (12)
8. அருணாசலம் கமலாதேவி (38)
9. ஆனந்தன் அன்னம்மா (28)
10. சுப்பையா சேதுராசா(70)
11. அமிர்தலிங்கம் ரஜனிகாந் (28)
12. கிட்ணர் கோவிந்தர் (79)
13. பாக்கியராசா வசந்தினி (8)
14. சுப்பிரமணியம் பாக்கியம் (42)
15. அழகுதுரை பரமேஸ்வரி (35)
16. அருமைத்துரை வள்ளிப்பிள்ளை (30)
17. சண்முகநாதன் சுதாகரன் (12)
18. சிவக்கொழுந்து சின்னத்துரை (58)
19. ராமஜெயம் பிள்ளை கமலேஸ்வரன் (13)
20. கனகராஜா சுவாஜிராஜா (24)
21. துரைராஜா கருணாகரன் (20)
22. அருமைத்துரை தனலட்சுமி (16)
23. சுந்தரலிங்கம் பிரபாகரன் (7)
24. சுந்தரலிங்கம் சுபாஜினி(3)

**காயமடைந்து திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள்.**

1. தயாளினி (5)
2. சுதாகரன் (7)
3. நிரோசன் (6)
4. அன்ரனி ஜோசப் (11)
5. சிற்றம்பலம் (36)
6. கிருஸ்ணபிள்ளை (40)
7. சசிகுமார் (15)
8. புனிதா (26)
9. கோணஸ்வரி (17)
10. நாகராசா (45)
11. கிரினா ராணி (30)
12. லட்சுமி (18)
13. புவனேந்திராணி (3)
14. செல்வநாயகி (52)
15. ஏ. தங்கவேல் (55)
16. குவேந்தினி (7)
17. மஞ்சுளா தேவி (14)
18. இன்பமணி (18)
19. யோகராணி (10)
20. சத்தியப்பிரியா (19)
21. தங்கவேல் (42)
22. சித்திபாயிஷா (19)
23. சித்திரவேலாயுதம் (22)
24. பிரசாந்தினி
25. இருபராணி
26. செல்லாச்சியார்

திருமலையிலிருந்து: ஓவேசி + நஞ்சுண்ட கண்டன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலையகம்:

# வீடமைப்புத் திட்டமா? நவீன அடிமைகளின் கொட்டில்களா?

—எலிப்படையூரான்

களுத்துறை மாவட்டத்தின் தெபுவளை அறபலாத்தகந்த தோட்டத்தில் லயன் கூரையை திருத்தியமைத்த தோட்டப்பெண் ஒருவர் களுத்துறை பொலிசாரால் கைது செய்யப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின் தொழிற்சங்கங்களின் தலையீட்டால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நூற்றாண்டு பழைமை வாய்ந்த லயன் காமபராக்களில் கூரைக்கு ஒட்டுபோடக்கூட வக்கற்ற, விருப்பற்ற சிங்கள பேரினவாதத்தின் அவலட்சணத்தில் இதுவும் ஒன்றே. இலட்சம் இலட்சமாய் வீடமைக்கப்பட்ட ஒரு நாட்டில் மலையகத் தமிழினத்தின் தோட்டத் தொழிலாளருக்கு வீடமைக்க வேண்டுமென கனவிலும் நினைக்காத சிங்கள அரசுகள் தொழிலாளர்கள் தமது கடுமையான வறுமைக்கு மத்தியிலும் இருக்கின்ற ஓட்டை லயத்துக்கு ஒட்டுபோட முயலும் போதெல்லாம் வரிந்துக்கட்டிக்கொண்டு சட்டம், ஒழுங்கு பற்றிபேசும் நிர்வாகம், பொலிஸ், அரசாங்கம் என்பன அம்மக்களுக்குரிய மானிட உரிமை மறுக்கப்பட்டுள்ளதை உணர்வதாயில்லை.

இவ்விடயத்தில் புரிந்துணர்வைக் கொண்டதாகக் காட்டிக்கொள்ளுவதாகக் கூறும் 'பொதுசன முன்னணி அரசும்' தோட்டத்துறை பிரதி அமைச்சரும் உருப்படியான எவ்வித திட்டங்களையும் முன்வைக்கவில்லை. மாத்தளை மாவட்டத்தில் கட்டப்பட்ட வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன. தொழிலாளர்கள் வாழ முடியாததாக இருக்கிறது. ஒரு தோட்டத்தில் அமைக்கப்பட்ட 20 வீடுகளில் 3வீடுகள் மட்டுமே தமிழ் தொழிலாளருக்கு கிடைத்துள்ளது. இவ்வீடமைப்புத் திட்டத்திற்காக 1000கோடி ரூபா கடனாக வழங்கவென ஒதுக்கப்பட்டுள்ளதாக தோட்ட வீடமைப்புத்துறை பிரதியமைச்சர் கூறுகின்றார். முன்னர் பல கோடி ரூபா இதற்காக நன்கொடையாக கிடைத்ததாகக் கூறியிருந்தார். இதேவேளை ஊழியர் சேமலாப நிதியத்தில் கடனாக வழங்கப்படும் 20,000/= வுக்கு 15 வருடத்தில் 58,000 மீளளிப்பு செய்யப்பட வேண்டும் என்ற விசித்தரமான கூட்டுறவு வீடமைப்பு திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும் வீட்டு, நில உரித்துடமைப் பற்றி எவ்விதமான திட்டவட்டமான நிலைப்பாடும் இதுவரை இல்லை. இந்நிலையில் கடன்பட்டு கட்டுகின்றவை நவீன கூலிகளின் கொட்டில்களாக மாறுமா? அதற்கான உரிமையாவது கிடைக்குமா என்பது சந்தேகத்திற் கிடமானது மட்டுமல்ல நம்பமுடியாததாகவும் இருக்கின்றது. யட்டியாந்தோட்டை, களுத்துறை பகுதியில் தெபுவளை அறபலாத்கந்த தோட்ட தொழிலாளர் 5பேர்ச்சஸ் காணியைப் பெற மறுத்துள்ளனர். கடன்பட்ட பல தொழிலாளர்கள் வீட்டைக் கட்டி முடிக்க முடியாமல் திண்டாடுகின்றனர். இந்நிலையில் தற்காலிக கொட்டில்கள் அமைப்பதும், லயன்களை விஸ்தரித்து கட்டுவதும் ஓட்டை கூரைகளுக்கு ஒட்டு போடுவதும் தவறு என தடுத்து நிறுத்தும் தார்மீக அரசியல் உரித்துடமை எப்படி வரும்?

அரசாங்கம் தோட்டத்தொழிலாளர்களுக்கு வீடமைக்க உண்மையிலேயே எண்ணம் கொண்டிருந்தால் அதற்காகப் பெறப்பட்ட முழு நிதியையும் நன்கொடையையும் தோட்டத்துறை வீடமைப்பு பிரதியமைச்சரிடம் ஒப்படைக்கத் தயங்குவதேன். இலவசமாக வீடு கட்டிக்கொடுக்க தயங்குவதேன்?

இது இவ்வாறிருக்க தோட்டப்பிரதேசத்தில் தோட்டக் காணிகளின் மலையக தமிழினத்தின் வாழ்வாதாரமையங்களில், அவர்களது தாயகத்தில் சிங்கள மக்களை குடியேற்றவும், தோட்டங்களை பகிர்ந்து கொடுக்கவும் அரசாங்கம் தீவிரமாக முயன்றுவருகிறது. தோட்டம் தோறும் 100 ஏக்கர் காணியில் குடியேற்றம் நடத்த திட்டமிட்டுள்ள அரசாங்கம் கண்டி, மாத்தளை மாவட்டத்தில் உள்ள 56 தோட்டங்களை குடியேற்ற மையங்களாக மாற்ற முனைகிறது. மேலும் உல்லாச விடுதிகள்,கைத்தொழில் பேட்டைகள், ஆடைத் தொழிற்சாலைகள் அபிவிருத்தி திட்டங்கள் என்ற அத்தனை திட்டங்களுக்கும் தோட்டக் காணிகளை சுவீகரிக்கும் அரசாங்கம் இன்னொரு வரலாற்று தவறை அச்சமின்றி செய்து வருகின்றது

கொத்மலை பகுதியில் 1000 குடும்பங்களுக்கு 600ஏக்கர் காணியும், அக்கரபத்தனையில் 25 ஏக்கர் காணியும், நானுஓய டெல்சி தோட்டத்தில் கிழங்கு செய்கைக்கென 25 ஏக்கர் காணியும் புசல்லாவை சோமல்ல, சகங்வீகுவா தோட்டங்களில் தலா 100ஏக்கர் காணியும் சுவீகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதன் எதிர்விளைவாக மலையகத் தமிழரிடையே விரக்தியும், வேலையின்மையும், வறுமையும் அதிகரித்துவருவது தவிர்க்க முடியாததாகும். இச்சூழ்நிலையில் நுவரெலியா, லபுகலை தோட்டத்தில் தரிசு நில காணியில் விவசாயம் செய்ய முயன்ற 61 தோட்ட தமிழ்இளைஞர்கள் பொலிஸ்நிலையம் கொண்டு செல்லப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளதோடு அக்காணிகளை கைவிடவும் கோரப்பட்டுள்ளது என்பது அப்பட்டமான சிங்களமயப்படுத்தலின்றி வேறென்னவாக இருக்க முடியும்?

இத்தனை நெருக்கடிகளுக்கும் மத்தியில் மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர் நசிந்து கொண்டிருக்கும்போது இ.தொ.கா. போராட்டத்திற்கு சகுனம் பார்க்கவும் மலையக மக்கள் முன்னணி தருணம் பார்க்கவும் தொழிற்சங்க கூட்டமைப்பு மௌனம் காக்கவும் முயன்றுகொண்டிருப்பது, மலையகத்தில் தவிர்க்க முடியாதவாறு மூன்றாவது சக்தியின் தேவையை உணர்த்துகிறது.

300 தொழிலாளர்களை கொண்டதான தனியார்துறைத் தோட்டமான வெலிஓயா தோட்டத்தின் 190 ஏக்கர் காணியை விற்க உடைமையாளர்கள் முயல்கின்றனர். இக்காணியில் ஒரு பகுதியை மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த (தலைமைப்பீட) முக்கியஸ்தர் ஒருவர் வாங்கி விற்கும் வேலையிலும், தனது நெருங்கிய உறவினர்களுக்கு வழங்குவதிலும் முன்னிற்பதாகவும் தெரியவருகிறது. இத்தோட்டத்தை பாதுகாப்பதன் மூலம் மட்டுமே அங்குவாழும் தொழிலாளர் குடும்பங்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தமுடியும்.

இப்படியிருக்க, போராடி தோட்டக் காணியை தொழிலாளர்களுக்கு பெற்று கொடுக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்தவர்களே, தோட்டக் காணியை பங்குபோட்டு விற்க முயன்றால் தொழிலாளரைப் பாதுகாப்பது யார்?

இவர்களை பாராளுமன்றத்திற்கும், மாகாணசபைக்கும், அனுப்பிய மக்களை மடையர்கள் என்றா நினைக்கின்றனர்? ●

# சொல்வதைத்தவிர வேறு வழியில்லை

கையாலாகாத்தனமிக்க இராணுவமொன்று தனது தொடர்ச்சியான தோல்விகளை மூடி மறைப்பதறகாக அப்பாவிப் பொதுமக்கள் மீது தனது கொடூரமிக்க பாய்ச்சல்களை கட்டவிழ்த்து விடுவது இலங்கையின் வரலாற்றில் இது முதற்தடவையல்ல. இன்று குமாரபுரம் கிராமம் அவ் வெறியாட்டத்திற்குப் பலியாகிவிட்டது.



வயலும் வரப்பும் நிறைந்த குமாரபுரம் கிராமமே பாவிகள் உன்னை பிணக்காடாக்கினரோ!

இலங்கையில் வடக்கு - கிழக்கில் ஆயுதப போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பிருந்தே இக்கொடூரமிக்க நிகழ்வுகள் அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. தமிழாராய்ச்சி மகாநாட்டு படுகொலை, இன்பம் செல்வம் படுகொலை, புத்தளப்பள்ளிவாசல் படுகொலை, எனச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அரசியல், இராணுவ ரீதியான ஒடுக்குமுறைகள், நசுக்குதல்கள் காரணமாகவே வடக்கு கிழக்கில் இக்கொடுமைகளை எதிர்கொள்ள ஆயுதம் தரிக்கவேண்டிய நிலைக்கு தமிழ்மக்கள் தள்ளப்பட்டனர்.

தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டத்தின் உந்துவிசைகளுள் பிரதான காரணிகளில் ஒன்றான; இம்மனிதாபிமான மற்ற இனப் படுகொலைகளுக்கு அரசியல் தலைமைகள் தமது ஆசீர்வாதங்களுடனான முழு ஆதரவினையும் இராணுவத்திற்கு வழங்கி வந்திருக்கின்றன.

அந்த வகையில்'சூரியகந்த' புதைகுழியை தோண்டித் தோண்டி பதவிக்கு வந்த இன்றைய சந்திரிகாவின் அரசு, இப்போது வடக்கு - கிழக்கில் 'உன்னத சமாதானத்தை' ஏற்படுத்துவதற்கு இனப்படுகொலைகளை மேற்கொள்ள இராணுவத்திற்கு முழு அங்கீகாரம் வழங்கி இருப்பதற்கு உதாரணமாக குமாரபுரம் படுகொலைகளைக் கொள்ளலாமோ?

''சமாதானத்தின் மூலம் சமாதானத்தை அடையமுடியாவிட்டால் யுத்தத்தின் மூலமாவது சமாதானத்தை அடைவோம்'' என்ற அரசாங்கத்தின் கூற்று; குமாரபுரம் கிராமத்தின் இரத்தமும் கண்ணீரும், மரணமும் மலிந்த படுகொலைகளின் ஊடாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

வியட்நாமில் அமெரிக்க இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ''மைலாய்'' படுகொலை, தென்னாபிரிக்கா கறுப்பின மக்களுக்கெதிராக வெள்ளை இன அரசினால் மேற்கொள்ளப்பட்ட ''சுவோட்டா'' படுகொலை, இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளரால் மேற்கொள்ளப்பட்ட ''ஜாலியன் வாலா'' படுகொலை, லெபனான் அகதி முகாமில் இஸ்ரேலினால் நடாத்தப்பட்ட ''ஷப்ரா ஷதில்லா'' படுகொலை, ருவாண்டா'' படுகொலை என உலகமே அதிர்ந்து போன படுகொலைகளுக்கு சமமான படுகொலைகள் இலங்கையிலும் நடந்திருக்கின்றன.

இராணுவத்தின் தமிழ் மக்களுக்கெதிரான படுகொலைகள், புலிகள், ஏனைய ஆயுதக் குழுக்களினால் முஸ்லிம்களுக்கெதிரான படுகொலைகள், முஸ்லிம் காடையர்களினால் தமிழ்மக்களுக்கெதிரான படுகொலைகள் என; ஒவ்வொரு இனமும் மூர்க்கம் கொண்டு அழிக்கப்பட்டிருப்பதை நாம் சந்தித்து இருக்கிறோம்.

அப்பாவி தமிழ் மக்களுக்கெதிராக; இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மைலந்தனை படுகொலை, வந்தாறுமூல்லை படுகொலை, தங்கவேலாயுதபுரம் படுகொலை, மைலம்பவாவெளி படுகொலை, வெலிகடை படுகொலை, மண்டைத்தீவு படுகொலை, கொக்கட்டிச்சோலைப் படுகொலை, குமுதினிப் படகுப்படுகொலை, நவாலி தேவாலய படுகொலை, புல்லர்ஸ்வீதி படுகொலையென அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

அதே போல், புலிகளாலும் ஏனைய ஆயுதக் குழுக்களாலும் முஸ்லிம்கள் மீது நடாத்தப்பட்ட படுகொலைகளான, காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, ஏறாவூர் படுகொலை, கிண்ணியா படுகொலை, புதுக்குடியிருப்பு படுகொலை, அக்கரைப்பற்று வயல்வெளி படுகொலை, பொத்துவில் படுகொலை, காரைதீவு படுகொலை, ஜமாலியபுர தொண்டர் படை படுகொலைகள் என, அப்பாவி முஸ்லிம்கள் மண்ணுக்குள் புதைந்து போயினர்.

முஸ்லிம் காடையர்களினால் அப்பாவித்தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளான அளிக்கம்பை கிராம படுகொலை, காரைதீவு வீரமுனை படுகொலை, ஆறுமுகத்தான் குடியிருப்பு படுகொலையென அப்பாவி மக்கள் மடிந்து போயுள்ளனர்.

அப்பாவி சிங்களப் பொதுமக்கள்மீதான புலிகளின் இனப்படுகொலையென, அநுராதபுரம் படுகொலை, அரந்தலாவைப் படுகொலை, சியாம்பலாண்டுவ படுகொலை, கலாவெவ படுகொலை, அம்பாறை பஸ்நிலையப் படுகொலையென அப்பாவி மக்களின் மரணங்கள் கோரமாக நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

மனித நாகரிகம் வெட்கப்படவேணடிய இந்தக் கறைபடிந்த கோரத்தாண்டவத்தின் ஊடே, குமாரபுரம் கிராமும் பிணக்காடாகி விட்டது. இராணுவம் அப்பாவி மக்களுக்கெதிராக நடாத்திய காட்டுத்தர்பாரின் விளைவாக அக்கிராமத்தைச் சேர்ந்த ஏழை மக்களில் 28 பேர் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டும், 30 பேருக்கு அதிகமானோர் படுகாயமடைந்தும் குமாரபுரம் கிராமம் பேய் அலைந்த பூமியாகிவிட்டது.

தகப்பனும் மகளும் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் போது, வீட்டில் மனைவியினதும் மகளினதும் பிணத்தை புதைப்பதற்கு ஆளில்லாத துயரத்தை எப்படிச் சொல்வது? எப்படி எழுதுவது?

தமிழ்க்கட்சிகள் இக்கொலையை கண்டித்து அறிக்கைகள் விடுவதுடன் தங்களது கடமைகள் முடிந்து விட்டதாக நினைக்கின்றன. அரசும் ஒரு விசாரணைக்கமிஷன் அமைப்பதுடன் தனது தார்மீகக் கடமை சரிவர நிறைவேற்றப்பட்டு விட்டதாக நினைக்கக்கூடும்.

விசாரணைக் கமிஷன்கள் அமைப்பதில் மட்டும், தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் அரசுக்கு, ''சன் சோனி'' விசாரணைக் கமிஷன் தொடக்கம் இன்று வரை அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன்கள் பாதிக்கப்பட்ட, அநீதி இழைக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு எவ்விதமான நிவாரணத்தையும் பெற்றுத் தரவில்லை என்பதுடன் இவ் இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கு எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மாறாக இன்னொரு விசாரணைக் கமிஷன் அமைப்பதற்கு குமாரபுரம் கிராமம் வாய்ப்பு தந்திருக்கிறதென, தனது சாதனைகளாக அரசு கருத இப்படுகொலை வாய்ப்புத்தந்திருக்கிறது.

புல்லர்ஸ் வீதிப் படுகொலைகள் தொடர்பாக கைது செய்யப்பட்ட அதிகாரிகள் உட்பட 22 பேர் நீதிமன்றத்தினால் இப்போது பிணையில் விடப்பட்டிருக்கின்றனர் என்ற செய்தியானது இக்கூற்றை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது.

இனப்படுகொலைகளைப் புரிவதே தனது நோக்கமாகக் கொண்ட இராணுவத்தை வைத்துக்கொண்டு உன்னத சமாதானத்தை கட்டியெழுப்புவோம் என, காதில் பூ சுற்றும் சந்திரிகாவின் அரசை நம்பி புலிகளுக்கெதிராக கற்களை வீசி. ஆர்ப்பாட்டம் செய்து புலிகளை தமிழ் மக்கள் எதிர்த்துக் கொண்டு சந்திரிகாவின் பின்னால் அணி திரள்வார்கள் என இப்போதும் கனவு கண்டு கொண்டிருக்கும் சிங்கள அரசியல் தலைமைகளும், தமிழ் அரசியல் தலைமைகளும், வரலாற்றின் ஊடே பலத்த தோல்வியைத்தான் தழுவுவார்கள் என்பதை குமாரபுரம் படுகொலைகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

குமாரபுரம் படுகொலையானது தமிழ் மக்களை மீண்டுமொறு முறை இந்தத் தேசியத்திலிருந்து அந்நியப்படுத்தி இருக்கிறது என்பதே உண்மையாகும். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென்மராட்சித் தாக்குதல்?
## தீர்வை அமுல்படுத்த
## [illegible]




அரசு தனது அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கையை குடாநாட்டினுள் விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. இது தென்மராட்சியை நோக்கிய ஒரு பெரிய படை நகர்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதை முன்னிட்டே சித்திரை மட்டும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. குடாநாட்டில் இன்னொரு பின்னடைவைக் காணும் புலிகள், ஆத்திரமுற்றுத் தென்பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மீது கைவைத்து அதன் மூலம் இனக்கலவரத்தை தூண்டலாம் என அரசு தரப்பில் கூறப்படுகிறது.

ரிவிரெச இராணுவ நடவடிக்கையினால் செய்து முடிக்கமுடியாமற் போன ஒரு முக்கிய காரியத்தை நிறைவேற்றும் நோக்கிலேயே தென்மராட்சியை நோக்கிய நடவடிக்கை மேற்கொள்ளப்படப்போகிறது.

யாழ் மக்களிற் பெரும்பகுதியினரை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதே ரிவிரெசவின் பிரதான அரசியல் நோக்கம். புலிகளால் ஒரு தனி அரசை இராணுவ ரீதியாக தக்கவைத்துக்கொள்ள முடியாது என உலகிற்கு எடுத்துக் காட்டுவது ரிவிரெசவின் இரண்டாவது அரசியல் குறி.

ரிவிரெசவின் முதலாவது அரசியற் குறிக்கோள் சரிவரவில்லை. இதனால் இரண்டாவது நோக்கத்தின் வெற்றியும் எதிர்பார்த்த அளவு கலகலப்பாக அமையவில்லை.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய கதை சர்வதேச ரீதியாக நிச்சயப்படுத்தப்பட வேண்டுமானால் அங்கு ஏதாவது ஒரு தேர்தல் நடைபெறுகின்ற வேளையில் யாழ் மக்கள் பரவலாகவும் சுயமாகவும், வாக்களித்தனர் என்பது வெளிப்பட வேண்டும். வாக்களிப்பதன் மூலம் ஒரு மக்கட் பிரிவினர் ஒரு நாட்டின் இறைமையில் பங்கு கொள்ளகின்றனர் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது. கடந்த தேர்தலில் யாழ் மக்கள் வாக்களிக்கவில்லை என்பது தமிழீழ இறைமை தொடர்பான புலிகளின் சர்வதேச பிரசாரத்திற்கு வலுவூட்டுவதாக அமையலாயிற்று.

இந்நிலையில் யாழ் குடாநாட்டின் சனத்தொகை செறிவு கூடிய வலிகாமம் பகுதியையும் யாழ்நகரையும் தனது கட்டுபாட்டினுள் கொண்டு வந்துவிட்டால் பிரச்சினையை சமாளிக்கலாம் என எதிர்பார்த்தது அரசு. அது சரிவரவில்லை. ஆகவே தற்போது தென்மராட்சி - வன்னித் தொடர்பைத் துண்டிக்கக்கூடிய ஒரு பெரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால், ஒன்று சாவகச்சேரியில் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் வலிகாமத்துள் செல்வர். அல்லது கிளாலிப் பாதை துண்டிக்கப்படுகையில் புலிகளால் பெரிதாகக் கட்டுப்படுத்தப்பட முடியாத ஒரு நிலையை எய்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனையிறவினூடாக கிளாலியை நோக்கி ஒரு படை நகர்வும், பூநகரியிலிருந்து கேரதீவினூடாக சாவகச்சேரியை நோக்கி ஒரு படை நகர்வும் நடைபெறலாம் எனவும், இதனை முன்னிட்டு தீவுப்பகுதியினூடாக பூநகரியில் மேலதிக துருப்புக்களும் தளபாடங்களும் கொண்டு போய் குவிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்துடன் அரியாலையின் தென்கிழக்காக யாழ் கடலின் நீரேரியினுள் நீண்டிருக்கும் ஒடுங்கிய நிலப்பகுதியிலிருந்து, மறவன் புலப்பகுதியை நோக்கி கேரதீவினூடாக பூநகரியிலிருந்து நகரும் இராணுவத்திற்குத் துணையாகப், படைகள் அனுப்பப்படக்கூடிய சாத்தியமும் உண்டு. அண்மையில், முல்லைத்தீவுக் கடலில் தமது ஆயுதக்கப்பல் அடி பட்ட நிலையில், இப்புதிய இராணுவ நடவடிக்கையைப் புலிகள் பெரிதாக எதிர்க்கமாட்டார்கள்

என்பது அரசின் கணிப்பு. இதன் மூலம் புலியை இராணுவ ரீதியாக முறியடித்து விடலாம் என அரசு எண்ணுகிறதா?

இல்லை

அரசின் திட்டம் இதுதான். நடைபெறப் போகும் படைநகர்வின் மூலம் வன்னி - குடாநாட்டுத் தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்படும். துண்டிக்கப்பட்டால் குடாநாட்டினுள் புலிகள் ஒரு கெரில்லா இயக்கமாக மட்டுமே செயல்பட முடியும். இங்ஙனமாகக் குடாநாட்டினுள் ஒரு கெரில்லா இயக்கமாக மட்டுமே செயல்படக்கூடியதாய் இருக்கையில் புலிகள் தாம் அங்கிருக்கும் மக்களை முழுமையாக தம் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதாக உலகிற்கு அறுதியிட்டுக் கூறிட முடியாது. யாழ். தீபகற்பத்தின் பல பகுதிகளில் இராணுவத்தினர் இல்லாது போனால்கூட.

இந்நிலை தோன்றி விட்டால் காரியம் கிட்டத்தட்ட வெற்றி என நினைக்கிறது அரசு.

ஏன்?

தீர்வுப்பொதி சட்டமாக்கப்பட்டால் புலிகள் தம் இருப்பிற்கான அரசியல் நியாயத்தை நிச்சயமாக இழந்துவிடுவர். இழந்தால் அவர்கள் மீது சர்வதேச நெருக்குதல் தோன்றும். அத்துடன் தமிழகத்திலும் ஆதரவு வீழ்ந்துவிடும். இதனால், புலிகள் அரசியற் பலவீனமடைந்து சுருங்கி விடுவர் என்பது இலங்கை - இந்திய கூட்டுத் திட்டமிடலாளரின் எண்ணம். இது சரிவர வேண்டுமாயின் தீர்வுப்பொதி சட்டமாக வேண்டும். அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளும், பொதியை அலங்கரிப்பதற்காக ஒரு தேசிய சர்வஜன வாக்கெடுப்பில் ஐம்பது சதவீதத்திற்கு அதிகமான வாக்குகளும் தேவை. இதில் பாராளுமன்றத்தில் தேவையான மூன்றில் இரண்டை இந்திய அரசு ஐ.தே.க.மீது ஒரு கடும் அழுத்தத்தைச் செலுத்தி அல்லது மிரட்டி பெற்றுத்தந்துவிடும் என அரச தரப்பு முக்கியஸ்தர் சிலர் அறுதியிட்டுக் கூறுகின்றனர். (தமிழ் கட்சிகள் சிலவற்றை இந்தியத் தூதுவர் அழைத்து பொதியை விமர்சித்து அறிக்கைவிடாதீர்கள் எனக்கூறிய விடயமும் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் செய்தியாக வெளியாகியுள்ளது)

எனவே பொதியை நடைமுறைப்படுத்துவதில் இருக்கப்போகும் ஒரே ஒரு முட்டுக்கட்டை சர்வஜனவாக்கெடுப்பு. இவ்வாக்கெடுப்பில் வடகிழக்கில் உள்ள பெரும் பாலான தமிழ் மக்கள் பங்கெடுக்காத சூழ்நிலையில், தெற்கில் பொதிக்கு எதிராக பெரும்பான்மை வாக்குகள் விழுமானால் தமிழருக்குத் தமிழீழமே என்பது தவிர்க்கமுடியாத அரசியல் நிதர்சனமாகிவிடும்.

இது தவிர்க்கப்பட வேண்டுமானால் வடகிழக்கில் மிக அதிக பட்சத் தமிழ் வாக்குகள் மொத்தமாக பொதிக்கு ஆதரவாக விழ (வைக்கப்பட) வேண்டும். இங்குதான் தென்மராட்சியை நோககிய படைநகர்வின் நோக்கம் முக்கியம் பெறுகிறது.

படைநகர்வின் போது குடாநாட்டின் வன்னியுடனான தொடர்பு முற்றாக் துண்டிக்கப்பட்டால் தென்மராட்சி, வடமராட்சி வலிகாமம் பகுதிகளில் மொத்தமாகக் குறைந்த பட்சம் இரண்டரை இலட்சம் மக்களாவது 'மாட்டுப்படுவர்' என எதிர்பார்க்கப்படுகிறது.

குடாநாட்டிலினுள் கெரில்லா இயக்கமாக மட்டுமே செயல்படக்கூடிய ஒரு நிலையை புதிய படைநகர்வு ஏற்படுத்தும் போது அங்கு நடைபெறக்கூடிய ஒரு வாக்கெடுப்பில் மக்கள் அறவே கலந்து கொள்ளவில்லையெனக் கூறமுடியாது. அங்ஙனம் கூறினாலும் எடுபடாது.

இந்நிலையில் குடாநாட்டில் வாக்கெடுப்பை நடத்தி அங்கு குறைந்த பட்சம் நான்கு லட்சம் வாக்குகள் விழச்செய்யலாம் என்பது இலங்கை - இந்தியக் கூட்டுக் கணக்கு. நான்கு இலட்சத்தில் 3,900,00 மட்டிலாவது அசல் கள்ளவாக்குகளாக இருக்கும் என்பது வேறுவிடயம். வன்னியிலும் கிழக்கிலுமாக இன்னுமொரு மூன்றுஇலட்சம். அத்துடன் முஸ்லிம், மலையக வாக்குகள் மூன்று இலட்சம், மொத்தமாக பொதிக்கு ஆதரவாக 10 இலட்சம் வாக்குகள் கிடைப்பதைஉறுதி செய்துவிட்டால், தெற்கில் கிடைக்கக்கூடியசிங்கள வாக்குகளையும் சேர்த்து சர்வஜன வாக்கெடுப்பில் 50%க்கும் அதிகமாகப் பெற்று விடலாம் எனத்திடமாக நம்புகின்றனர் இலங்கை - இந்திய கூட்டுத் திட்டமிடலாளர்கள்.

இந்த அரசியல் நோக்கினை மனதிற் கொண்டே யாழ்ப்பாணத்தில் இந்தியப் பின் துணையுடன் கூடிய அடுத்த படைநகர்வு இடம் பெறப்போகிறது என்பதிற் சந்தேகமில்லை. ●

# புலிகளின் ஆயுதக் கப்பல் தகர்ப்பு:
## இந்தியப்படை பின்னணியில்?

கடந்த 14ம் திகதி புலிகள் இயக்கத்திற்கு வந்ததாகக் கூறப்படும் ஆயுதக் கப்பல் இலங்கை படையினரால் அழித்து நிர்மூலமாக்கப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது தெரிந்ததே. ஆனால் இச் சம்பவத்துக்குப் பின்னால் இந்தியாவின் பங்களிப்பு பாரியதாக இருந்தது பற்றி பலர் அறிந்திருக்க நியாயமில்லை.

ஆரம்பத்திலிருந்தே இந்தியா இலங்கை அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினையை அணுகும் முறை பற்றி மிகுந்த அவதானம் செலுத்தி வந்துள்ளது இனப்பிரச்சினையில்; இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய அணுகுமுறை டெல்லியை திருப்தி கொள்ளச் செய்திருப்பதாக பல செயதிகளிலிருந்து தெரியவருகிறது.

கடந்த கால இலங்கை வரலாற்றில் யு.என்.பி. ஆட்சியைவிட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சியை இந்தியா எப்போதுமே விரும்பி வந்துள்ளதை பலர் அறிவர். ஐ.தே.க அரசாங்கங்களில் இறுதியாக வந்த பிரேமதாச அரசின்ஆட்சிக் காலத்தில் இந்திய – இலங்கை உறவில் திருப்திகரமான உறவு ஆரம்பத்தில் இருக்கவில்லை என இராஜதந்திரிகள் கூறுவர். குறிப்பாக பிரேமதாச இந்திய படையினரை வெளியேறுவதற்கு விடுத்த காலஎல்லை எச்சரிக்கை, இந்தியாவுக்கு எதிரியாகிப் போன புலிகளுடன் பிரேமதாச 14 மாத கால பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்தமை, பிரபாகரனை இந்தியா தரும்படி கேட்டிருந்த போது இது அண்ணன் தம்பி பிரச்சினை என கூறி உதாசீனப்படுத்தியமை உட்பட பல நடவடிக்கைகள் இந்தியாவுக்கு ஆத்திரத்தை ஊட்டியிருந்தன. ஆயினும், பிரேமதாச கூட தனது இறுதிக் காலங்களில் இந்தியாவுடனான உறவின் அவசியத்தை உணர்ந்து செயற்பட்டார் இந்தியாவை திருப்திப்படுத்துவதில் அவர் அதிக பிரயத்தனம் மேற்கொண்டார். அதன் நிமித்தம் இந்தியாவில் வடமாநிலமொன்றிலுள்ள புத்தகயாவில் வீடுகள் அமைத்துக் கொடுத்து தன் மீதான கறையைத் துடைக்க மிகுந்த பிரயத்தனம் எடுத்தார். பிரேமதாச படுகொலை செய்யப்பட்டிருந்த போது இந்தியாவில் ஒரு வாரகால துக்கதினம் அனுஷ்டிக்குமளவிற்கு; பிரேமதாச தனது கறையை துடைப்பதில் வெற்றிகண்டிருந்தார் என அரசியலாளர்கள் கூறுவர். டி.பி.விஜேதுங்க காலத்தில் பிரேமதாசவின் இறுதிக் காலத்திய உறவு தொடர்ந்து பேணப்பட்டதாகச் சொல்லலாம்.

அதன் பிறகு; சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வருமென இந்தியா எதிர்ப்பார்த்திருந்த போதும் புலிகளுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தியபோது அதை ஒருவித சந்தேக கண்ணுடனேயே இந்தியா நோக்கியதாகவும் விமர்சகர்கள் குறிப்பிடுவர்.

**என்.எஸ்.குமரன்**

எவ்வாறாயினும் பேச்சுவார்த்தையின் இறுதிக்கட்டத்தின் போதும் அதன் பின்னரும், இலங்கை அரசாங்கம் பற்றி, இந்தியாவின் நம்பிக்கை வலுக்கொண்டதாகக் கூறலாம்.

இந்தியாவில் மத்திய ஆளும் கட்சிக்கு ஏற்பட்ட நெருக்குதல் காரணமாகவும் எதிர் வரும் தேர்தலுக்கான தந்திரோபாய வியூகங்களுக்காகவும் ராஜிவ் காந்தி பிரச்சினையைத் தூக்கிப்பிடித்த டில்லி அரசாங்கம் இலங்கையின் கரங்களைப் பற்றிப் பிடித்தது. 'எதிரிக்கெதிரி நண்பன்' எனும் அரசியல் தந்திரோபாயத்திற்கிணங்க இந்தியாவும் இலங்கையும் கூட்டாளிகளாயினர். இந்தியா, ராஜிவ் வழக்குக்காக பிரபாகரன், பொட்டம்மான், அகிலா ஆகிய மூவரையும் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டிருந்தபோது, இலங்கை அதனை மறுக்கவில்லை. ஆனால் முடியாத காரியத்தை முடிப்பதாக வாக்குறுதியளிக்கவுமில்லை. பாக்கு நீரிணை உள்ளிட்ட இந்து மகா கடலின் கடற்படையின் கூட்டு ரோந்து நடவடிக்கைக்கான மறைமுக உடன்பாட்டையும் செய்து கொண்டன. சந்திரிகாவின் இந்திய விஜயம், நரசிம்மராவுடனான பேச்சுவார்த்தை என்பனவற்றைத் தொடர்ந்து 3வது ஈழப்போருக்கான ஆயுத தளபாட உதவிகளையும் இந்தியா அளித்தது. ரிவிரெச இராணுவ நடவடிக்கையில் இந்திய படையினரும் ஈடுபடுத்தப்பட்டனர் என்கிற கதையும் கூட இக்காலத்தில் பரவலாக பேசப்பட்டன.



இந்நிலையில் தான் அண்மையில் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு அரசாங்கத்தின் அரசியற் தீர்வு யோசனைகள் தொடர்பாக அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுவரும் இழுபறி பற்றியும்; அப்படியான முரண்பாடுகள் இருந்த போதும் ஜனாதிபதி சந்திரிகா தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பது தொடர்பாகவும் அறிக்கைகள் கிடைத்திருந்தன. ஜனாதிபதி சந்திரிகாவின் உறுதியான நிலைப்பாடு தொடர்பாக இந்தியா திருப்தி அடைவதாக உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த இந்திய இராஜதந்திரி ஒருவரும் குறிப்பிட்டிருந்தார். இதன் பிரதிபலனாகவே இந்திய அரசு மேலும் தனது ஆதரவை வெளிக்காட்டும் பொருட்டு புலிகள் இயக்கத்தின் ஆயுதக் கப்பலை காட்டிக் கொடுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

→ 9

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# யுத்த முனைப்புகளும் சமாதானத் தீர்வும்!

''ஏப்பிரல் புது வருடத்திற்கு முன்பதாக புலிகளை அடக்கிவிடு வோம்'' என்று அறிவித்துள்ளார் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்தவத்த அவர்கள்.

வடக்கே வலிகாமம் பகுதியிலிருந்து புலிகளை முற்றாக விரட்டிய தில் வெற்றிபெற்ற அமைச்சர் அவர்கள், அடுத்ததாக வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வன்னிப்பகுதிகளை நோக்கி தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் 'இரகசியத் திட்டத்தை' நடைமுறைப்படுத்த தயாராகி விட்டார் என்பதையே இந்தச் சூளுரை காட்டுகிறது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, அங்கே சிங்கக்கொடியை நாட்டிவிட்டதை அடுத்து ஏற்பட்ட வெறும் புகழ் அலைக்குள் அமிழ்ந்திப் போய்விட்ட அரசாங்கமும், அமைச்சரும் யுத்தமூலம் இலகுவாகவே பிரச்சினையை தீர்த்து விட முடியும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்பதை ரிவிரெச நடவடிக்கைகளை அடுத்து கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'ரிவிரண' நடவடிக்கை எடுத்துக்காட்டியது. ஆனால், எதிர்பார்க்கப்பட்டது போல அது அவ்வளவு வெற்றியளித்ததாக தெரியவில்லை. கிழக்கில் புலிகளை அடக்குவதற்கான நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்கு இன்றுள்ள படைபலப் பற்றாக்குறை ஒரு பிரதான காரணமாக இருப்பதால் அமைச்சரின் கவனம் மீண்டும் வடக்கு நோக்கி திரும்பியுள்ளது.

வடக்கிலே வலிகாமம் பகுதியில் நிலைகொண்டுள்ள படைகள் தென்மராட்சி நோக்கி முன்னேறுவதன் மூலமும், ஆனையிறவிலிருந்து ஒரு படைப்பிரிவு வடக்கு நோக்கி போவதன் மூலமுமாக தென்மராட்சியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்பதுவும், இதற்கு அத்துணை பெரும் படை தேவையில்லை - இருப்பவற்றுடனேயே சமாளித்து விடலாம் - என்பதும் அமைச்சரின் கணிப்பீடாக இருப்பதாக தெரியவருகிறது.

உண்மையில் அமைச்சர் எதிர்பார்ப்பது போலவே, புலிகள் வலிகாமப் பாணியில் இங்கும் பின்வாங்கும் தந்திரோபாயத்தை கடைப்பிடிப்பார்களாக இருந்தால், தென்மராட்சியைக் கைப்பற்றுவதும் வடமராட்சியைக் கைப்பற்றுவதும் சாத்தியமானவைகளே. ஏற்கெனவே புலிகள் தென்மராட்சி வடமராட்சிப் பகுதி மக்களையும் வெளியேறுமாறு கேட்டுள்ளார்களென்பதால், இப்பகுதி நோக்கிய படையெடுப்புக்கு புலிகள் தரப்பிலிருந்து அவ்வளவு எதிர்ப்பு இருக்கப் போவதில்லை என்று எதிர்பார்ப்பதில் தப்பில்லை. ஒரு கால் வடமராட்சி தென்மராட்சி இரண்டையுமே கைப்பற்றி விட்டால், குடாநாடு பூராகவும் தமது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும்; அதன் பிறகு புலிகளைக் கையாள்வது மிகவும் இலகுவானது என்பதே அமைச்சரின் மேற்கண்ட உரையின் பின்னால் உள்ள தர்க்கமாகும்.

குடாநாட்டை முற்றாக புலிகளிடமிருந்து விடுவித்துவிட்டால், ஏற்கெனவே புலிகள் மீது அதிருப்தியுற்றிருக்கும் மக்களை குடாநாட்டுக்கு திருப்பி அழைப்பது இலகுவானது என்பதும் அரசாங்க தரப்பின் அபிப்பிராயங்களாக உள்ளன.

ஆனால், இவையெல்லாம் இராணுவ விவகாரம் சம்பந்தப்பட்ட விடயங்கள். இவற்றிற்கும், இந்த நாட்டின் இனப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படுவதற்கும் இடையில் என்ன சம்பந்தம் இருக்கிறது? புலிகளை அடக்குவது அல்லது முற்றாக ஒழிப்பது என்பதில் வெற்றி பெற்று விட்டால், இனப்பிரச்சினை தீர்ந்து விடுமா? புலிகளை அழிப்பதற்காக நடந்த நடவடிக்கைகளால், இன்னும் நடக்கவுள்ள நடவடிக்கைகளால் உருவாகவுள்ள புதிய சிக்கலை தீர்த்துக்கொள்வது எப்படி? எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சொல்வது போல பெருகி வரும் அகதிகள் பிரச்சினைக்கான தீர்வு என்ன? இவையெல்லாம் இனப்பிரச்சினை தீர்வில் பாதிப்பினை ஏற்படுத்தப் போவதில்லையா? - போன்ற கேள்விகள் இப்போது பெரிதாக எழுந்து விட்டுள்ளன.

யுத்தத்தின் மூலமாக அமைதியை ஏற்படுத்திவிடலாம் என்ற அபிப்பிராயம் வலுவாக ஏற்பட்டது, புலிகளுடனான பேச்சுவார்த்தை உடைந்த பிற்பாடு என்று எடுத்துக் கொள்வோமானால், அதன் பின்னரான கடந்த 10 மாதங்களாக நடந்து கொண்டிருக்கும் யுத்தம் இனங்களுக்கிடையே ஐக்கியத்திற்கோ அல்லது சமாதானத்திற்கோ சாதகமாக ஏதாவது விடயங்களை சாதித்திருக்கிறதா?

பேச்சுவார்த்தை முறிவடைந்த பின்னரான அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளும் புலிகளை இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் முடமாக்குவதில் குறிவைக்கப்பட்டிருந்தன. இனப் பிரச்சினைக்காக முன்வைக்கப்பட்ட சமாதானத் தீர்வு யோசனைகள், அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் ஒரு அங்கமாக குறுக்கப்பட்டுவிட்டன. எதிர்க்கட்சித் தலைவர் சொல்வது போல இவை இரண்டும் இரண்டு வெவ்வேறு முக்கியமான விடயங்கள் என்பதை அரசாங்கம் மறந்து விட்டது போலத் தெரிகிறது. புலிகளைத் தாக்குவது என்ற பெயரில் நடந்த யுத்த நடவடிக்கைகள் இலட்சக்கணக்கில் மக்களை அகதிகள் ஆக்கியுள்ளது; பொருளாதாரத் தடை, பொருட்களை எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடு, பணம் எடுத்துச் செல்வதற்கான உச்ச வரம்பு என்பனவற்றால் மக்களுக்கு அரசாங்கத்தின் மீதிருந்த நம்பிக்கை மேலும் உடைந்துள்ளது. இது தவிர வடக்கு கிழக்கிற்கு வெளியே புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் நடைபெறும் விசாரணைகள், கைதுகள், சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் என்பன மேலும் மேலும் தமிழ் மக்கள் மத்தியில் தவிர்க்கமுடியாத படி எரிச்சல் உணர்வையும், அதிருப்தியையும், ஏற்படுத்தி வருகின்றன. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அல்ல இவை என்று சொல்லிக் கொண்ட போதும், இனவாத அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ள ஆயுதப் படையினரின் நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ் மக்களை இம்சைப் படுத்துகிற, அவமானப்படுத்துகிற, ஒவ்வொரு கணமும் அச்சத்துடன் திரியவைக்கிற தன்மை கொண்டவையாகவே உள்ளன.

ஆக, அரசாங்கத்தின் 'யுத்தம் மூலம் சமாதானம்' என்ற திட்டம் சமாதானத்திற்கான வாய்ப்பினை முற்று முழுதாகவே இல்லாமல் செய்து வருகிறது என்பதுதான் உண்மை. கொழும்பில் மத்திய வங்கி தாக்கப்பட்டபோதும், கொலன்னாவை தாக்கப்பட்டபோதும், அரசாங்கம் தீவிர விழிப்புடன் இருந்திராவிட்டால், தமிழ் மக்கள் அடித்துவிரட்டப்பட்டு விடுவார்கள் என்ற நிலையே நிலவியது. கடந்த வாரம் திருகோணமலையில், ஆயுதப்படையினர் கிளிவெட்டி குமாரபுரத்தில் நடத்திய தாக்குதல்கள் இந்த நிலைமையினை தெளிவாகக் காட்டுகின்றன. ஏற்கெனவே ஆண்களே இல்லாத,







கணவனை இழந்த பெண்களை குடும்பத்தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களை அதிகமாகக் கொண்ட அந்தக் கிராமம் மீண்டும் ஒரு முறை தாக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்ட இராணுவத்தினர் யாரென்றோ, இனப்பிரச்சினையின் கோரம் என்ன வென்றோ தெரியாத பச்சிளம் சிறார்கள் கூட இந்த வெறிக்கு பலியாகியுள்ளனர். இவையெல்லாம் வெறும் ஒரு சில தனிப்பட்ட இனவெறிபிடித்த இராணுவத்தினரின் நடவடிக்கைகள் அல்ல. மாறாக இந்த யுத்தம் தொடங்கிய பின் அரசாங்கத்தாலும், அதன் வெண்தாமரை இயக்கத்தினராலும் ஊட்டி வளர்க்கப்பட்டு வரும் சிங்கள இனவாத ரீதியிலான உணர்வலைகளின் ஒரு வெளிப்பாடாகும். இந்தப் போக்கின் தொடர்ச்சி நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதில் அல்ல, அதை இன்னும் ஒரு படி ஆழமாக்கி விடுவதில்தான் கொண்டு போய்விடும் என்பதில் ஐயமில்லை.

உதாரணமாக தற்போது கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நடைபெற்று வரும் நடவடிக்கைகள். 'பௌத்த மடாலயங்களைக் கூட சோதனையிடுகிறோம்; பௌத்த குருமாரை விசாரிக்கிறோம் நாம் இந்துக்கோவில்களையும் கிறிஸ்தவ மத வ்ழிபாட்டுத் தலங்களையும் கூட சோதனைக்கு உட்படுத்துவோம். எம்மைப் பொறுத்தவரை மத, இன வேறுபாடு கிடையாது. சந்தேகம் இருந்தால் எல்லோரையும் சோதனையிடுவோம்; விசாரிப்போம்'என்பன போன்ற பொலிசாரின் அறிவிப்புக்கள், காரணங்கள் இல்லாமலேயே வெறும் சந்தேகத்தின் பேரில் மாதக் கணக்காகத் தடுப்புக்காவலில் தமிழ் இளைஞர்களைப் போட்டு வைத்திருத்தல், ஒரு தமிழர் பிடிபட்டுவிட்டால் - அதுவும் சந்தேகத்தின் பேரில் - அவரது வயதைச் சேர்ந்த அனைவருமே புலிகளாக்கப்படுவது, நம்பமுடியாத இடங்களில் எல்லாம் ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்டதாக (உதாரணம்: பிளாஸ்டிக் பொம்மைக்குள் ரொக்கெட் லோஞ்சர், கிரனைட் குண்டுகள் இருப்பது) அறிவிப்பது என்பதெல்லாம் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ் மக்கள் வாழ்வது பாதுகாப்பற்றது என்ற ஒரு அபிப்பிராயத்தையே பிற இனத்தவர் மத்தியில் பரப்பி வருகிறது. (இப்போதே வாடகைக்கு தங்கியிருக்கும் பல தமிழ் குடும்பங்களை வீடுகளை காலிசெய்யுமாறு வீட்டுச் சொந்தக்காரர்கள் கேட்கத் தொடங்கி விட்டார்கள்) சந்தேகத்தின் பேரில் நடாத்தப்படும் தேடல்கள், விசாரணைகள் பற்றிய பொறுப்பற்ற அறிக்கைகள் இதனை மேலும் மோசமான நிலைக்குத் தள்ளி விடுகிறது. சுருக்கமாகச் சொன்னால், யுத்தம் கொழும்புக்கு நகர்ந்துவிட்டது; அது இங்குள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்கி விட்டுள்ளது. வடக்கு கிழக்கில் ஷெல் அடி, குண்டு வீச்சுக்குப் பயந்து அமைதியான வாழ்க்கையை விரும்பி இங்கு வந்த பலருக்கு இங்கும் யுத்த சூழல் உருவாகியுள்ளமை அவர்களது வாழ்வில் நிச்சயமின்மையை உருவாக்கியுள்ளது. பாடசாலை மூடப்படுவது, வீதிகள் மூடப்படுவது, வீதிகள் தோறும் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவது என்பன யுத்தத்தின் ஆரம்பகால அறிகுறிகளின் தீவிரமான வளர்ச்சியை காட்டுகின்றன.

இவையெல்லாம், சமாதானத்திற்கான, அமைதிக்கான நிலைமைகள் வளர்ந்து வருவதை காட்டுவதாக நம்பினால் அவர்கள் ஒன்றில் வடிகட்டிய முட்டாள்களாக இருக்க வேண்டும். அல்லது பொய்சொல்பவர்களாக இருக்கவேண்டும்.

இலங்கை அரசாங்கம், புதுவருடத்திற்குள் புலிகளை அடக்குவதை ஒருபுறம் வைத்துவிட்டு, இந்தப் பத்துமாதத்திய சாதனைகளை மீள ஒரு தடவை மதிப்பிடுவது பயன்மிக்கதாக இருக்கும். அரசாங்கம் சமாதானப் பணியில் ஈடுபடுவதாக இன்னமும் நம்பிக்கொண்டு இருக்கும் சமாதான விரும்பிகளும் கூட ஒரு தடவை இதைச் செய்வது நல்லது புலிகள் மீதான வெறுப்புணர்வு, அரசாங்கத்தின் எல்லா நடவடிக்கைகளையும் நியாயப்படுத்திவிட வல்ல பலமான ஒரு தளமாக அதிகநாள்

இருக்கப்போவதில்லை!

அரசாங்கம் இப்போது தீர்மானிக்க வேண்டியது இதுதான்:

நாட்டை பிளவுபடுத்துவதா?, அல்லது

ஐக்கியத்தைப் பேணுவதா?

ஆம். இன்றைய போக்குகள் கொண்டுபோய் விடப்போகின்ற இடம் நிச்சயமாக ஐக்கியம் அல்ல, பிளவுதான் என்பதை அரசாங்கம் உடனடியாகப் புரிந்து கொள்வது அவசியம்.

இதை அரசாங்கத்திடம் 'யார் போய்ச் சொல்லுவார்?'

நிருமையப்பான்:

www.tamilarangam.net



# மட்டு வைத்தியசாலை:
## களஞ்சியத்திலிருந்து காலியாகும் மருந்துகள்!

கிழக்கின் பெரிய பொது வைத்தியசாலையான மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு, நிர்வாகச் சீர்கேடு, மருந்தகப் பொறுப்பாளர் உள்ளக மருந்தகப் பொறுப்பாளர் தலைமை மருந்தாளர் ஆகியோரின் எல்லை மீறி தொடரும் ஊழல், மோசடி நடவடிக்கைகள் பற்றி அங்கு கடமைபுரியும் டொக்டர்கள், ஏனைய தரங்களில் பணிபுரிபவர்கள் சரிநிகருடன் தொடர்பு கொண்டு வழங்கிய விடயங்களையே நாம் இங்கு தருகிறோம்.

ஒக்டோபர் 95க்குப்பின் அரசினால் இவ்வைத்தியசாலைக்கு முக்கிய மருந்துப் பொருட்கள் எதுவும் அனுப்பப்படவில்லை. இது பற்றி இங்குள்ள உறுப்பினர்கள், சுகாதார அமைச்சுக்குப் பலதடவைகள் முறையிட்டும் இதுவரை எந்தப் பலனும் இல்லை. இதனால் பல நூற்றுக்கணக்கான நோயாளிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகளுக்கான பெனடோல் சிரப், பிரிட்டன் சிரப், கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கும் பிளெயின் அமொக்ஸ்லின், பெதடின், சின செப், மற்றும் கையுறை, டிட்டோல், துணிவகைகள் போன்ற சாதாரண பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வெட்டுக்காயங்கள் போன்ற கடும் வலிகளுக்கு வழங்கவேண்டிய பெதடின், ஷெல் குண்டு தாக்குதலினால் அகப்பட்டு வருவோருக்கு அவசியம் வழங்கவேண்டிய சினசெத் போன்ற மருந்துகள் இல்லாமையால் பலர் உயிரிழக்கவும் சிலர் தங்கள் அவையவங்களை இழக்கவும் வேண்டிய சூழ்நிலையும் தொடர்ந்து நிலவுவதாகவும் தெரியவருகின்றது.

ஆனால் பெதடின், சினசெப் போன்ற மருந்துப்பொருட்கள் அம்பாறை உட்பட வடகிழக்குக்கு வெளியேயுள்ள வைத்தியசாலைகளில் தேவைக்கதிகமாக உள்ளதெனவும் குறிப்பிட்டார் ஒரு டொக்டர்.

மருந்துத் தட்டுப்பாடு மேலும் தொடருமெனில் தொடரும் போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு இங்கு கொண்டு வரப்படும் பல நோயாளிகள் தங்கள். அவையங்களையும், உயிர்களையும் தொடர்ச்சியாக இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படலாம். கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் ஆகியோர் வெவ்வேறு புதிய நோய்களுக்கு உட்படலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதை விட இவ் வைத்தியசாலையின் இயக்குனர் கவனயீனத்துடன் செயல்படுவதுதான் இவ்வைத்தியசாலை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணமெனவும் கூறப்படுகிறது.

ஒருவருடத்துக்கு மேலாக இவ்வைத்தியசாலையில் மருந்துப் பொருட்களுக்கான கமிட்டி கூட்டப்படவில்லை. அதைவிட காலையில் ஒன்பது மணிக்கு வந்து திரும்பவும் பன்னிரண்டு மணிக்கு முதல் சென்று பின்னர் இரண்டு மணிக்கு வந்து மூன்றரைக்கு செல்வதுதான் இவரின் வேலையாக உள்ளது. பெரியளவில் நடைபெறும் ஊழல் மோசடிகள், நிர்வாகச் சீர்கேடுகள் என்பவற்றுக்கு இவரின் அசமந்த போக்கே பிரதான காரணியாக தென்படுகிறது என்கின்றனர் அங்கு பணிபுரிவோர்.

எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வைத்தியசாலையை விற்று ஏப்பம் விடும் பேர்வழிகளில் மருந்தகப் பொறுப்பாளர், உள்ளக மருந்தகப் பொறுப்பாளர், தலைமை மருந்தாளர் ஆகியோரே பிரதான பங்காளிகளாவர்.

ஒக்டோபர் 95க்கு முன்னர் கடைசியாக வந்த நான்கு கலன் ஒலிவ்ஒயில் யூரின் கெதர், வெள்ரெளின், அமெக்சிலீன், ஸ்பிரே அன்ரி வெய்ற்ஸ் ஆகிய பெறுமதி மிக்க மருந்துகள் உட்பட பல மருந்துப்பொருட்கள் களஞ்சியத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டு மட்டக்களப்பு தனியார் நகர் மருந்தகம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இத்தனியார் மருந்தகத்துக்கான ஏக போக விநியோகஸ்தர்கள் இம் மூவருமே என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மருந்துகள் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு (ஒக்டோபர் 95) சில நாட்களிலேயே வெளிநோயாளர் பகுதியில் இல் மருந்துகள் இல்லை வெளியே எடுங்கள் எனக் கூறப்பட்டதாம். இதுபற்றி சில டொக்டர்கள் தலைமை மருந்தாளர்,உள்ளக மருந்தகப் பொறுப்பாளர் ஆகியோரிடம் கேட்டபோது மருந்து முடிந்து விட்டது அதைப்பற்றி எங்களிடம் கேட்க வேண்டாம் இயக்குனரிடம் போய்ச்சொல்லுங்கள் என்றார்களாம்.



கொழும்புக்கு மருந்துப்பொருட்களை ஏற்றி வருவதற்கு இவ் இருவரும் தொடர்ந்து வந்ததாகவும் இவர்கள் இதுவரை பல லட்சக்கணக்கான ரூபாய் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின்றன.

அரச மருந்தக கூட்டுத்தாபனத்தில் மருந்துப் பொருட்களை ஏற்றும் போது காலாவதியான பல மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு அங்குள்ள அதிகாரிகளிடம் பல லட்சக்கணக்கான ரூபாய் கமிசனை பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

94ல் காலாவதியான மருந்துப் பொருட்களைப் பெற்ற அல்லது மருந்துப் பொருட்களை விற்றதற்குரிய 14 லட்சங்களுக்குரிய காசோலை இவ்வைத்தியசாலையில் பணிபுரியும் டொக்டர் ஒருவரின் (கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள) தம்பியின் கடையில் கொடுத்து மாற்றப்பட்டதாகவும் அறியமுடிகிறது. ஆனால் இந்த டொக்டருக்கும் இம் மோசடிக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

மருந்தகப் பொறுப்பாளரும்,உள்ளக மருந்தகப் பொறுப்பாளரும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தில் மருந்துப் பொருட்களை ஏற்றிய பின்னர் பெறுமதிமிக்க பல மருந்துப் பொருட்களை கொழும்பிலும் பொலநறுவையிலும் தாங்கள் வாடிக்கையாகக் கொடுக்கும் கடைகளில் விற்றுவிட்டு காசோலையுடன் தான் மட்டக்களப்பு திரும்புவதாகவும் மட்டக்களப்பிலுள்ள தனியார் நகர் மருந்தகத்துக்கான கொடுப்பனவுகளை களஞ்சியத்திலிருந்து (பதிவுசெய்ததன் பிறகு) கொடுப்பதாகவும் தெரிகிறது. இதற்கு இங்குள்ள சில தாதிகள் உதவுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நோயாளிகளுக்கு உணவு வழங்குவதற்கு கொண்டு வரும் உணவுப்பொருட்களில் அரைவாசி பின்பக்கமாக சில மணித்தியாலங்களுக்குள் மாயமாய் மறைந்து விடுமாம். வைத்தியசாலை சுற்றாடலில் (குறிப்பாக பின்பக்கம்) உள்ளவர்களால் டியூப்லைட், சுவிச் என்பனவும் களவாடப்பட்டு விடுகிறது. வாட்டுக்கு போகும் வழியில் உள்ள அனைத்து டியூப் லைட்களும் போட்ட அடுத்த நாளே இல்லாமல் போய் விடுவதுண்டு. வாட்டுக்குப் போகும் வழி எப்போதும் இரவுநேரங்களில் இருள் மயமாகவே இருக்கிறது.

டொக்டர் விவேகாநந்தராஜாவின் செல்லையா வாட், டாக்டர் அருளானந்த ராஜாவின் கல்முனை U. V நேர்ஸிங் ஹோம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் எக்ஸ்ரே மெசின் கூலர், C.E.G. மொனிட்டர் உட்பட பல உபகரணங்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையிலிருந்து ஜீவநாயகம் என்பவரால் எடுத்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஜீவநாயகம் (Surgical Pharmasist)மட்டக்களப்பு வைத்தியசாலையில் இடம் பெற்ற பல ஊழல் மோசடி நடவடிக்கைகளின் பிதாமகர் ஆவார். பின்னர் இவர் ஓடிட்டரால் கையும் மெய்யுமாக பிடிபட்டு வேலைநீக்கப்பட்டவர். இவரின் நடவடிக்கைகளில் அதிருப்தியுற்ற மட்டக்களப்பு மாவட்ட பிரிகேடியர் இவரை வைத்தியசாலைப்பக்கம் செல்லக்கூடாதென எச்சரித்திருந்தார்.

ஆனால் ஜீவநாயகம் இப்போதும் காலையில் ஏழுமணிக்கு வைத்தியசாலைக்கு வந்துவிடுவார். இவருக்கு உயர் மட்டங்களில் உள்ள டொக்டர் சிலரின் ஆசியும் உண்டு. நோராட் நிறுவனத்தால் சத்திரசிகிச்சைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கூலரில் முக்கிய பகுதியொன்றை கழட்டி வெளியே விற்றதன் மூலம் இவ்வைத்தியசாலைக்கு மகத்தான சேவையொன்றை செய்தவரும் இவரே! பின்னர் இந்தப் பாகம் நோராட் நிறுவனத்தினாலேயே பூட்டிக்கொடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வைத்தியசாலையில் அண்மையில் நடந்த இன்னொரு சம்பவம். மருந்து வழங்கும் பிரிவில் கடமையாற்றும் ஒரு பெண் ஊழியர் தான் ஒவ்வொருநாளும் ஒன்று இரண்டாக கொண்டு போய்ச் சேர்த்த அமெக்ஸிலின் குளிசைகளை வீட்டிலிருந்து வேலைக்கு வரும் போது மட்டக்களப்பு நகரில் உள்ள பாமசி ஒன்றிற்கு கொடுப்பதற்கு கொண்டு வரும் போது ஊறணி தடைமுகாமில் பிடிபட்டார்.

இவர் உண்மையாகவே இம்மாத்திரைகளை விற்பதற்காகவே கொண்டுவந்திருக்கிறார் என்பதை பொலிஸாரும் விசாரணைகள் மூலம் தெரிந்துகொண்டனர். ஆனால் மட்டக்களப்பு பிரிகேடியர் இது குறித்து தலைமை மருந்தசளருடன் தொடர்பு கொண்ட போது இப் பெண் புலிகளுக்கு கொடுக்கவே இவற்றை எடுத்து வந்ததாக தகவல் கிடைத்ததை அடுத்து இவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மருந்தகப் பொறுப்பாளர்,உள்ளக மருந்தகப் பொறுப்பாளர் ஆகியோர் காலாவதியான மருந்துகளை எடுக்காமலும், கொழும்பிலும் பொலநறுவையிலும் தங்கள் வாடிக்கை மருந்துப் பொருட்கள் விநியோகிக்கும் கடைகளுக்கு விநியோகிக்காமல் தடுப்பதெனில் இனிமேல் மருந்துபொருட்கள் வாங்க கொழும்பு செல்லும்போது ஏனைய வடகிழக்கு வைத்திசாலையில் பயன்படுத்தப்படும் நடைமுறைகளைப் போன்று டொக்டரும் மருந்துப் பொருட்களுக்கான கமிட்டியைச் சேர்ந்தஒருவரும் கட்டாயம் செல்ல வேண்டும். இல்லையேல் இவர்களின் பேயாட்டம் தொடருமென குறிப்பிட்டார், இங்கு பணிபுரியும் ஒரு முக்கியஸ்தர்.

டொக்டர் திருமதி பற்றிமா ரஞ்சன் குரூஸ் அவர்களே இந்த ஊழல் மோசடிப் பேய்களின் அட்டகாசத்தை இனிமேலாவது தடுத்து நிறுத்தப்பாருங்கள். உங்கள் கவலையீனங்கள் ஆயிரக்கணக்கான நோயாளிகளை சீரழித்து விடக் கூடாதல்லவா?

***மட்டக்களப்பிலிருந்து***

**குருக்ஷேத்திரன்**

---

# ஊழல் பெருச்சாளியின் புகலிடம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசு சார்பற்ற நிறுவனங்களின் கூட்டிணைப்பாகத்திகழ்வது E.R.O. (Eastern Rehabilliation Organization) என அழைக்கப்படும் கிழக்கிலங்கைப் புனர்வாழ்வுக் கழகம். இதில் 15க்கு மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்துள்ளன. மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு துன்பங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்தபோது E.R.O. தான் முன்னின்று தனது அமைப்புகளுக்கூடாக பல்வேறு உடனடி நிவாரணங்களைக் கொடுத்த நிறுவனம் என்ற வகையில் இன்னும் கூட நினைவு கூரப்படுகின்றது.

இந்த E.R.O. அமைப்பின் தலைவர்களாக இந்து சமயத்தின் சார்பில் சுவாமி ஜீவனானந்த ஜீ. கத்தோலிக்க சமயத்தின் சார்பில் மட்டு. திருமலை ஆயர் வண. கிங்ஸ்லி சுவாமிபிள்ளை, மெதடிஸ்த திருச்சபையின் சார்பில் வண. விவேகநாதன் ஆகிய மூன்று சமயத்தலைவர்கள் இருக்கின்ற காரணத்தினால் வெளிநாட்டு நிறுவனங்களும் வெளிநாட்டு அரசுகளும் இந்த E.R.O. அமைப்பிற்கு பெருமளவில் உதவி செய்து வருகின்றன. இந்த அடிப்படையில் தான் நோர்வே அரசாங்கத்தின் ''நொராட்'' (NORAD)நிறுவனமும் E.R.O. வுடன் சேர்ந்து S.M.P. (Social Mobilization Project) என அழைக்கப்படும் சமூக நலத் தயாரிப்புத் திட்டம் ஒன்றை மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல்செய்ய அதற்கான முழுச்செலவினங்களையும் கடந்த நான்கு வருடங்களாகச் வழங்கி வந்தது. மொத்தமாக 6.6 மில்லியன் ரூபாய்கள் (அறுபத்தாறு இலட்சம்) இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் நோக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களைக் கண்டறிவதும் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான வழிவகைகளைக் கண்டறிவதுமே.

ஆனால் நடந்தவை எல்லாம் இதற்கு எதிர் மாறானவையாகவே இருக்கின்றன. இத்திட்டத்தை அமுல் படுத்தவென பொறுப்பாக நியமிக்கப்பட்ட தார்சி செபமாலை எனபவர் பணத்தை துஷ்பிரயோகம் செய்ததோடு அவரது மோசடி நடவடிக்கைகளினால் E.R.O. விற்கு பெரும்களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார். இவரின் பாவனைக்கென தனியான பிக்கப் வாகனம் கொடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் இவ்வாகனத்தை புலிகள் எடுத்தாலும் வறிய மக்களின் நன்மை கருதி மீள ஒப்படைத்து விட்டனர். ஆனால் தார்சி செபமாலையோ மிக மோசமான முறையில் செயற்பட்டுள்ளார். மேலான நோக்கங்களுக்கென கொடுக்கப்பட்ட பணமும், வாகனமும் முறைதவறி பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாகனத்தைப் பயன்படுத்தி கடந்த வருடத்தில் தார்சி செபமாலை தளவாய் என்னும் இடத்தில் இருந்து ஏறாவூருக்கு பணம் வாங்கிக்கொண்டு மீன் ஏற்றிக்கொடுத்துள்ளார். முன்னர் வன இலாகா அதிகாரியாக இருந்து மோசடிகாரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட இவர் அதே மோசடி நடவடிக்கைகளை S.M.P. யிலும் நடாத்தியுள்ளார்.

இவர் ஏதாவது ஒரு பகுதிக்கு திட்டத்தைப் பார்வையிடச் சென்றால் அப்பகுதியில் இவரின் கீழ் கடமையாற்றும் ஊழியர் இவருக்கு கோழிக்கறியுடன் சாப்பாடு கொடுக்க வேண்டும். இல்லையேல் அவரின் சம்பளத்திற்கு வேட்டு வைத்துவிடுவார். அல்லது பொய்க் குற்றச்சாட்டுக்களை அவ் ஊழியரின் மேல் செலுத்தி வேலைக்கும் வேட்டு வைத்துவிடுவார்.

கடந்த வருடத்தில், தன்னிடம் இருந்த பற்றுச் சீட்டுக்கள் தொலைந்து விட்டதாகக் கூறி தன்னிடம் வேலை செய்யும் ஊழியரிடம் சில பற்றுச்சீட்டுக்களைக் கடையில் பெற்றுத் தரும்படி கூறி பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டார். அப்படி இவர் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுக்களில் இருந்த தொகை ரூபா 30,000/= மறுநாளே E.R.O. அலுவலகத்தில் தான் 30,000/= பெறுமதியான பொருட்களை செங்கலடி பிரதேச மக்களுக்குக் கொடுத்ததாகக் கூறி அப்பணத்தைப் பெற்றுள்ளார்.

இதே போன்று ஆரையம் பதி பிரதேசத்தில் அனகி அடுப்பு செய்யும் திட்டத்தின் கீழ் ஒரு அடுப்பிற்கான செலவு 350/=ரூபாவாக இருக்கும் பொழுது 1850/= செலவானதாகக் கூறி பெரும் பணத்தைச் சுருட்டிக் கொண்டுள்ளார்.

S.M.P. திட்டத்தின் கீழ் வேலைசெய்யும் சமூக மேம்படுத்துனர்களுக்கு இலவசமாக துவிச்சக்கரவண்டிகளை வழங்கிவிட்டு, அவற்றிற்குரிய பணத்தை மாதாமாதம் அவர்களுடைய சம்பளத்தில் இருந்து கழித்துள்ளதாகவும் தற்போது கூறப்படுகின்றது.

இவ்வாறான தார்சி செபமாலையின் மோசடி நடவடிக்கை காரணமாக இத்திட்டம் தோல்வியில் முடிவடைந்துள்ளது. இத்திட்டத்தை மீளாய்வு செய்த குழுவினர் திட்டம் தோல்வியடைந்ததை மட்டும் குறிப்பிடாமல், திட்டத்திற்குப் பொறுப்பாயிருந்த தார்சி செபமாலை ஒரு சமூக மேம்பாட்டாளராக அல்லாமல் ஒரு சர்வாதிகாரியாகவே நடந்துள்ளார். அவரின் செயற்பாடும் திட்டத்தின் தோல்விக்குக் காரணம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதன் காரணங்களினால் இவ்வருடம் தொடக்கம் S.M.P. நேரடியாக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தும் பொருட்டு E.R.O. விடம் இருந்து பிரித்து எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஆரம்பகாலத்தில் அமுல் செய்யப்பட்டபோதே தார்சி செபமாலையின் நடவடிக்கைகள் குறித்து E.R.O. வில் அங்கம் வகிக்கும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்கள் கேள்வி கேட்டபோதும் E.R.O. வின் தலைமை அதைப்பற்றிக் கவலைப்படாமல், தார்சி செபமாலையைக் காப்பாற்றும் விதத்திலேயே நடந்து கொண்டது.

இன்று அதே தார்சி செபமாலையின் நடவடிக்கையால் E.R.O. அவமானப்பட்டு நிற்கின்றது. E.R.O. விற்கு வந்துள்ள அவமானம் அதில் இணைந்துள்ள அனைத்து அரச சார்பற்ற அமைப்புக்களுக்கும் ஏற்பட்டுள்ள அவமானமாகவே கருதப்படுகின்றது.

—ரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள் — 20

# பெண் அரசியலில் ஆண் உறவு முறைச் செல்வாக்கு

**பெண்களின்அரசியல் பிரவேசத்திற்கு வித்திட்ட 'ஆண் உறவு முறைச் செல்வாக்கு**

அதிகளவு விதவைகளின் பிரதிநிதித்துவமுள்ள பாராளுமன்றமாக இலங்கைப் பாராளுமன்றம் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறும். இவ்வாறு 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி வெளியான 'லங்காதீப' எனப்படும் சிங்கள வார இறுதிப் பத்திரிகையில் வெளியான 'கின்னஸ் புத்தகத்திற்கு' எனும் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதே கட்டுரையில் ''அரசியல் வாதியொருவரின் மனைவிக்கு தான் அரசியல்வாதியாகும் மோகம் ஏற்பட்டு விட்டால் அரசியல் வாதிக்கு கடவுளே துணை'' என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது.

அக்கட்டுரையாளர் தனது கட்டுரையில் ''பெண்கள் தாம் தன்னிச்சையாகவே விரும்பி தமது விதவைத்துவ பயன்படுத்தலுக்கூடாக அரசியலுக்கு வருகின்றனர்; அதற்காக தமது அரசியல்வாதி கணவரை பலியாவதிலும் விருப்பமுடையவர்கள்'' என்கின்ற தொனியில் அக்கட்டுரை தொடர்ந்து செல்கிறது. இந்த வக்கிரமமான கண்ணோட்டம் ஆணாதிக்க கருத்தியல் கொண்ட கண்ணோட்டமே என்பது ஒருபுற மிருக்க ''விதவைத்துவ அரசியல்'' தொடர்பாக ஆழமான தேடல், விவாதம் என்பவை அவசியமானவை என்பதும் முக்கியமானது.

இலங்கைப் பெண்களின் பாராளுமன்ற அரசியலில் ''விதவைத்துவம்'' மற்றும் அரசியற் செல்வாக்குப் பெற்றிருந்த ஆணின் மறைவினால் அனுதாபத்துக்கு ஆளான கிட்டிய உறவு முறையைச் சார்ந்த பெண்களின் ''நிலை'' என்பவை பாரிய அளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறதென்றால் மிகையல்ல.

1994 நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்திருந்த போது, உலகப் பிரசித்தி பெற்ற பிபிசி செய்திச் சேவையில் வாசிக் கப்பட்ட செய்திக் கட்டுரையில் ""Battle of the widows'' (விதவைகளின் போராட்டம்) என்று குறிப்பிடப்பட்டிருந்தது.


அத்தேர்தலில் போட்டியிட்ட ஆறு பேரில் முக்கிய பிரதான தேசியக் கட்சிகளுக்கிடையிலேயே பலத்த போட்டி நிலவியது. ஐதே.க - பொ.ஐ.ஐ.மு ஆகிய அக்கட்சிகள் இரண்டினதும் வேட்பாளர்களாக முறையே ஸ்ரீமா திசா நாயக்க - சந்திரிகா குமாரதுணங்க ஆகிய இருவரும் காணப்பட்டனர். இத்தேர்தலில் இவர்கள் இருவருமே விதவைத்துவ அடையாளப்படுத்தப்பட்டவர்கள் இதனைக் குறிப்பிட்டே பிபிசி சேவை ''விதவைகளின் போராட்டம்'' எனக் குறிப்பிட்டிருந்தது.

அதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம் என்னவென்றால் அத்தேர்தலில் அரசியல் பிழைப்புக்காக தேசிய கட்சிகள் தந்திரோபாய ரீதியில் கையாண்ட ''விதவைத்துவம்'' வென்றதா? அல்லது அன்றைய நடைமுறை அரசியல் வெற்றியடைந்ததா? என்ற கேள்வியே.

ஏனெனில் இத்தேர்தலின் போது படுகொலை செய்யப்பட்டிருந்த காமினி திசாநாயக்கவின் மறைவினால் ஏற்பட்ட அனுதாபத்திற்கு உரியவரான அவரது மனைவி ஸ்ரீமாவை ஐ.தே.க மிகுந்த வற்புறுத்தலின் பேரில் ஜனாதிபதி வேட்பாளராக்கியது சில பத்திரிகைகள், எதிர்க்கட்சிகள் உட்பட பலர் ''கணவர் இறந்து போய் பிரேதம் கூட அடக்கம் செய்யப்படாத நிலையில் கணவருக்குப் பதிலாக போட்டியில் இறங்க தீர்மானித்த வேறெந்த பெண் உளர்?'' என கேள்வி எழுப்பியிருந்தார்கள். இதே வேளை சந்திரிகாவின் ''விதவைத்துவ அனுதாபம்'' காலம் கடந்திருந்தது என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆனால் ''விதவைத்துவம்'' மட்டும் ஆட்சியதிகாரம் செலுத்தக்கூடிய தகுதியாக இருக்க முடியாது என்பதை ஜனாதிபதித் தேர்தல் உணர்த்தியது. இவ் உணர்தல் கடந்த கால வரலாற்றில் விதவைத்துவ பயன்பாட்டு அனுபவத்தால் ஏற்பட்ட கணிசமான தாக்கமாக கருத இடமுண்டு.

இலங்கை அரசியலில் விதவைத்துவத்தின் செல்வாக்கை இக் கட்டுரையில் உள்ள அட்டவணை தெளிவாக உணர்த்தும்.



**கடந்த கால ஆண் உறவு முறைச் செல்வாக்கு**

இலங்கை அரசியலில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதிலிருந்து (பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டதிலிருந்து) இன்றைய 10வது பாராளுமன்ற காலம் வரை 40 பெண்கள் பாராளுமன்றத்திற்குப் பிரவேசித்திருக்கின்றனர். இவர்களில் 29 பேர் அதாவது 75%த்தினர் ஆணைச் சார்ந்தே கணவனின் மரணத்தினால் அவருக்குப் பதிலாகவோ அல்லது குடும்ப (அல்லது பரம்பரை) ச் செல்வாக்கினாலோ பாராளுமன்ற அரசியலுக்குப் பிரவேசித்திருக்கின்றனர்.







ஆண் உறவு முறைச் செல்வாக்கினால் பிரவேசித்த 30 பேரில் 21 பேர் கணவரின் செல்வாக்கினாலும் (பெரும்பாலும் விதவைத்துவ அனுதாபத்தினூடாக), 6 பேர் தகப்பனின் செல்வாக்கினாலும், 3 பேர் சகோதரனின் செல்வாக்கினாலும் பாராளுமன்ற அரசியலுக்கு வந்தனர்.

(சந்திரிகா குமாரணதுங்கவின் பாராளுமன்ற அரசியல் பிரவேசத்திற்கு தகப்பனார் எஸ். டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்க, தாய் சிறிமா, சகோதரன் அனுர, கணவன் விஜய குமாரணதுங்க ஆகியவர்களில் எவரது செல்வாக்கு அதிகளவு பயன்பட்டது என்பது விவாதத்திற்குரியது).

பாராளுமன்றத்துக்கான முதல் பிரவேசமே ஆண் உறவு முறைச் செல்வாக்கினாலேயே நடந்தது 1931 இல் திருஜோன் ஹென்றி மீதெனிய அதிகாரம் என்ற அரசாங்கசபை உறுப்பினர் மரணத்தைத் தொடர்ந்தே அவரது மகள் எட்லின் மொலமூரே இடைத் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார்.

இடதுசாரிப் பெண்களின் அரசியற் பிரவேசத்திற்கு ஆண் உறவு முறைச் செல்வாக்கு ஒரு ஊக்கியாக இருந்தபோதும் அது மட்டுமே காரணமாக இருக்கவில்லை என்பதை சென்ற இதழில் கண்டோம். குறிப்பாகச் சொல்லப்போனால் இடதுசாரிக்கட்சிகளுக் கூடாக பாராளுமன்றத்துக்கு பிரவேசித்த பெண்கள் எவருமே 'விதவைத்துவத்தை' பயன்படுத்தியிருக்கவில்லை.

(புளோரன்ஸ் சேனநாயக்க, குசும்சிறி குணவர்தன, டொரின் விக்கிரமநாயக்க, விவியன் குணவர்தன, மோமாவிக்கிரமநாயக்க போன்றவர்கள்) இன்னும் சொல்லப்போனால் தங்களது கணவர் உயிருடன் இருக்கும் போதே அரசியலுக்கு இவர்கள் நுழைந்தார்கள்.

ஆண் உறவு முறை செல்வாக்கை பெண்கள் பயன்படுத்தினார்கள் என்று வாதிடுவோரும் உண்டு. ஆனால் ஆண் உறவு முறைச் செல்வாக்கு பெரும்பாலும் பெண்கள் மீது திணிக்கப்பட்ட ஆதாரங்களையே அதிகம் காண முடிகிறது. இந்தத் திணிப்பை பெண்களின் இயல்பான இசைவாக்கத் தன்மைக்கூடாக பிரவேசித்து வெற்றி காண்பது தேசியக் கட்சிகளின் பொதுவான இயல்பாகவும் இருந்து வந்துள்ளது.

பாராளுமன்ற அரசியலுக்கு இவ்வாறு பிரவேசித்த பெண்கள் பலர் நாளடைவில் தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டு இதே முதலாளித்துவ ஒடுக்குமுறை யந்திரத்தை பாதுகாத்து வருவதை நடைமுறையில் காண முடிகிறது. இன்று இடதுசாரி இயக்கங்களைச் சாராத பெண்களே அல்லது பெண்ணியம் பெண்கள் நலம் என்பவற்றில் அதிகம் அக்கறை குறைந்த பெண்களே பிரதிநிதித்துவம் வகிக்கின்ற நிலையில் அது இன்னும் சாத்தியமாகிறது. எனவே பெண்கள் பெண்களின் நிலையை பிரதிநிதித் துவப்படுத்தும் அரசியல் கூட இந்த அரசியல் அமைப்பு முறைகளுக்குள் இல்லை. இதற்கொரு சிறந்த உதாரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது (காமினியின் மறைவுக்குமுன்) முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தின் உரையை குறிப்பிடுவது பொருந்தும்.

''இந்த நாட்டில் வீட்டில் கூட பிரதானமானவர் ஆண்தான் வீட்டுக் குடியிருப்பாளர் பட்டியலிலும் கூட ஆணைத்தான் முதலில் குறிக்கின்றோம். எனவே நாம் நமது நாட்டின் தலைவராக ஆணொருவரையே தேர்ந்தெடுத்தல் வேண்டும்''

(ராவய-27-11-94)

இதனைச் சொன்னவர் நாட்டில் பெண்கள் உரிமைகளை பாதுகாப்பதற்கான பொறுப்பிலிருந்த முக்கிய பொறுப்பு வாய்ந்தவரின் அறிக்கை என்பதனால் மிகவும் கவனிக்கத்தக்கதாகிறது. தம்மை ஒடுக்குகிற சக்தியை இனங்காண்பது மட்டுமல்லாது தாமும் சேர்ந்து தம்மையே ஒடுக்கிற அவல நிலையையே இங்கு காண்கிறோம். வர்க்க நலன் சார்ந்த தேசிய அரசியல் எவ்வாறு ஒடுக்கப்படும் பிரிவினரை கொண்டு அவர்களுக்கு எதிராகவே செயல்ப்படுத்துவதை இங்கு காண்கிறோம். **உமா...**

**என்.சரவணன்**

**ஆண் உறவு முறைச் செல்வாக்கு பாராளுமன்ற பெண்பிரதிநிதித்துவத்தில் வகித்த பங்கு**

| பாராளுமன்ற அங்கத்துவ காலம் | பெண் அரசியல்வாதி | பிரவேசிக்க துணைக்காரணியாக நின்ற ஆண் அரசியற்புள்ளி | உறவு முறை | தொகுதி | கட்சி |
|---|---|---|---|---|---|
| 1931 | எட்லின் மொலமூரே | ஜோன் ஹென்றி | தகப்பன் | ருவன்வெல்ல | LSSP |
| 1932 | நேசம் சரவணமுத்து | ரத்னஜோதி சரவணமுத்து | கணவன் | கொழும்பு வடக்கு | ----- |
| 1947 | புளோரன்ஸ் | ரெஜி சேனாநாயக்க | கணவன் | கிரிஎல்ல | LSSP |
| 1948 | குசும்சிறி குணவர்தன | பிலிப் குணவர்தன | கணவன் | அவிஸ்ஸாவெல்ல | LSSP |
| 1949 | தமரா குமாரி | டி.பி.இலங்கரத்ன | கணவன் | கண்டி | SLFP |
| 1952 | டொரின் விக்கிரமசிங்க | எஸ்.ஏ.விக்கிரமசிங்க | கணவன் | அக்குரெஸ்ஸ | CP |
| 1956 | விவியன் குணவர்தன | லெஸ்ஸி குணவர்தன | கணவன் | கொழும்பு வடக்கு | LSSP |
| 1957 | குசுமா ராஜரட்ண | கே.எம்.பி.ராஜரட்ண | கணவன் | வெலிமட | JVP |
| 1960 | சிறிமா பண்டாரநாயக்க | S.W.R.D.பண்டாரநாயக்க | கணவன் | அத்தனகல்ல | SLFP |
| 1966 | மல்லிகா ரத்வத்தை | கிளிபேர்ட் ரத்வத்தை | கணவன் | பலாங்கொட | SLFP |
| 1967 | லற்றீசியா ராஜபக்ஸ | R.R.W.ராஜபக்ஸ | கணவன் | தொடங்கஸ்லந்த | SLFP |
| 1978 | தயாசேபாலி | பந்துல சேனாதீர | கணவன் | கரந்தெனிய | UNP |
| 1978 | ரங்கநாயகி | எம்.கனகரட்னம் | சகோதரன் | பொத்துவில் | UNP |
| 1978 | ரூபா சிறியானி | அனுர டேனியல் | சகோதரன் | ஹேவாஹெட்ட | UNP |
| 1978 | எல்.எம்.விஜயசிறி | ஆர்.பி.விஜயசேகர | கணவன் | ஹரிஸ்பத்துவ | UNP |
| 1978 | கனேத்திரா ரணசிங்க | எஸ்.டி.எஸ்.ஜயசிங்க | தகப்பன் | தெஹிவளை | UNP |
| 1978 | கீர்த்தி லதா | கீர்த்தி அபயவிக்கிரம | சகோதரன் | தெனியாய | UNP |
| 1978 | சமந்தா கருணாரத்ன | அசோக குணரட்ன | தகப்பன் | ரம்புக்கன | UNP |
| 1989 | ராஜமனோகரி | புலேந்திரன் | கணவன் | வன்னி | UNP |
| 1989 | சுமித்தா பிரியங்கனி | இந்திரபால அபேவீர | தகப்பன் | களுத்துறை | SLFP |
| 1989 | ரேணுகா ஹேரத் | ஹேரத் | தகப்பன் | நுவரெலியா | UNP |
| 1989 | ஹேமா ரத்நாயக்க | பி.பி.ரத்னாயக்க | கணவன் | பதுளை | SLFP |
| 1989 | குணவதி திசாநாயக்க | சுமேத ஜயசேன | கணவன் | மொனறாகலை | SLFP |
| 1994 | *சந்திரிகா | பண்டாரநாயக்க | தகப்பன் | அத்தனகல்ல | SLFP |
| | | சிறிமாவோ | தாய் | அத்தனகல்ல | SLFP |
| | | விஜயகுமாரணதுங்க | கணவன் | | SLMP |
| | | அனுர பண்டாரநாயக்க | சகோதரன் | | SLFP |
| 1994 | நிருபா ராஜபக்ஷ | ஜோர்ஜ் ராஜபக்ஷ | தகப்பன் | ஹம்பாந்தோட்டை | SLFP |
| 1994 | சிறிமணி | லலித் அத்துலத்முதலி | கணவன் | கொழும்பு | DUNF |
| 1994 | பவித்திரா | தர்மதாச வன்னியாராச்சி | தகப்பன் | ரத்தினபுரி | SLFP |
| 1994 | சுமேத ஜயசேன | சுமேத ஜி.ஜயசேன | கணவன் | மொனறாகலை | SLFP |
| 1994 | அமரபத்திரா | திசாநாயக்க | கணவன் | --------------- | UNP |

*: சந்திரிகா குமாரணதுங்கவின் பாராளுமன்ற அரசியல் பிரவேசத்திற்கு அவரது தகப்பனார் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, தாய் சிறிமா பண்டாரநாயக்க, சகோதரன் அனுர பண்டாரநாயக்க, கனவன் விஜயகுமாரணதுங்க ஆகியவர்களில் எவரது செல்வாக்கு அதிகளவு பயன்பட்டது என்பது சர்ச்சைக்குரியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிழக்கில் புலிகளின் பலம் பெருகுகிறதா?

ஒவ்வொரு நாளும் விடிந்தவுடன் ஏதாவது ஒரு சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்படுவது, என்பது இன்று மட்டக்களப்பு மக்களிடையே சர்வசாதாரணமாகிப்போன ஒரு வழக்கமாகிவிட்டது. அந்த அளவிற்கு மட்டக்களப்பு சம்பவங்களின் களமாகிவிட்டது என்று சொன்னால் மிகையாகாது. யாழ் நகரை மீட்கும் திட்டமென அரசால் கூறப்பட்ட ''ரிவிரெச'' இராணுவ நடவடிக்கை தொடங்கிய நாட்கள் தொடக்கம் மட்டக்களப்பில் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு மூலையில் ஏதாவது ஒரு சம்பவம் நடந்தவண்ணமே இருக்கின்றது இதுவரை நடந்த சம்பவங்களுக்கு என்ன தான் இராணுவ நோக்கத்தைக் கற்பிக்க முற்பட்டாலும் பாதிக்கப்பட்டது என்னவோ முற்று முழுதாகப் பொது மக்கள்தான்.

''ரிவிரெச'' நடவடிக்கைக்காக மட்டக்களப்பில் நிலைகொண்டிருந்த அதுவும் குறிப்பாக மட்டக்களப்பில் படுவான்கரை என அழைக்கப்படும் மேற்குப்பகுதியில் இருந்து அரச துருப்புக்கள் நகர்த்தப்பட்டு அப்பகுதியில் அரச இராணுவத்தின் கட்டுப்பாடு அற்றுப் போனவுடன் இப்பகுதிகளெல்லாம் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்குரிய தளங்களாக மாற்றப்பட்டு விட்டன. அதுவும் புலிகளின் தலைவர்களில் முக்கியமான கரிகாலன், கருணா ஆகியோர் மட்டக்களப்பில் தங்கி நின்றமை காரணமாக புலிகளின் நடவடிக்கைகளும் தீவிரமடையத் தொடங்கி விட்டன. கெரில்லா முறையிலான தாக்குதல் நடவடிக்கைகள் அதிகமாக மேற்கொள் ளப்பட்டதன் காரணமாகவும், புலிகளின் தாக்குதல்களின் போது பொதுமக்களுக்கு ஏற்படும் சேதம் பற்றி அவர்கள் கவலைப்படுவது குறைவு என்ற காரணங்களின் அடிப்படையிலும் மட்டக்களப்பில் நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களினாலும் இராணுவத்தினரின் பதில் தாக்குதலாலும் பரிதாபகரமாக மாண்டு போன பொதுமக்கள் எண்ணிலடங்கா கடந்த வருடத்தில் புதுக்குடியிருப்பில் புலிகள் நடாத்திய தாக்குதலின் போதும் இராணுவத்தினர் நடாத்திய பதில் தாக்குதலின் போதும் மாண்டு போன பொதுமக்களை இலகுவில் மறந்து விடமுடியாது இன்று இப்பொது மக்களை புலிகள் தான் கொன்றார்கள் என அரசு பிரசாரம் செய்து வருகின்றது.

கடந்த இரண்டு வாரங்களுக்குள் மட்டக்களப்பு நகரின் மையப்பகுதிகளான மட்டக்களப்பு சந்தை, தனியார் பஸ்தரிப்பு நிலையம், தாண்டவன் வெளி சந்தி ஆகிய இடங்களில் எவரும் எதிர்பாராத விதத்தில் துவிச்சக்கரவண்டிகளில் பொருத்தப்பட்ட வெடிகுண்டுகள் வெடித்து பொதுமக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளன. இவையெல்லாம் புலிகளின் வேலை என்று அரசு கூறுகின்றது. புலிகளோ தாங்கள் இப்படி ஒரு போதும் கோழைத்தனமாக நடந்து கொள்ளமாட்டோம் என்று இச் சம்பவங்களுக்கு தாம் பொறுப்பல்ல என மறுக்கின்றனர். உண்மையில் இம் மூன்று இடங்களிலும் வெடித்த குண்டுகளினால் இராணுவத்தினருக்கு எவ்விதசேதமும் ஏற்படவில்லை. பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் இக்குண்டுகள் வெடித்த காரணத்தினால் இவை புலிகளின் செயல் அல்ல என்ற கருத்தும் பலமாக நிலவுகின்றது. உண்மையில் இவை புலிகளின் செயல் அல்ல என்றால் தொடர்ந்து பல குண்டுகள் வெடிக்கப் போவது மட்டும் உண்மை எனத் தெரிகிறது. ஏனெனில் மிகக் கடுமையான சோதனைகளைக் கடந்தே மட்டக்களப்பு நகருக்குள் சைக்கிள் உட்பட சகல வாகனங்களும் அனுமதிக்கப்படுகின்ற வேளையில் குண்டுகள் பொருத்தப்பட்ட சைக்கிள்கள் எப்படி வந்தன என்பதே அனைவரினதும் கேள்வியாக உள்ளது. ஒன்று சைக்கிள்கள் சோதனை செய்யப்படாமல் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும், அல்லது சைக்கிளில் குண்டு பொருத்தும் வேலை நகருக்குள் நடைபெற வேண்டும் இதில் எது உண்மை என்பது இன்னும் புரியாமலே உள்ளது.

இதற்கிடையில் தற்போது தொடர்ச்சியாக நடைபெற்று வரும் எதிர்பாராத தாக்குதல் நடவடிக் கைகளினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவில் செயற்பாடுகள் முற்றுமுழுதாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. அரசு என்ன தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் நடை பெறுகின்றது என்று கூறினாலும் உண்மை அவ்வாறு இல்லை.

மட்டக்களப்பின் மேற்குப்பகுதி நிர்வாகம் முற்றுமுழுதாகப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது இங்கிருந்து கொண்டு கரிகாலன் வெளிநாட்டுச் செய்தியாளர்களையெல்லாம் சந்தித்து வருகின்றார். இப்பகுதி தவிர்ந்த வாழைச்சேனை, செங்கலடி களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி, ஓட்டமாவடி, மட்டக்களப்பு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பல பகுதிகள் புலிகளின் நேரடியான, மறைமுகமான கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலேயே மிகப் பெரிய இராணுவ முகாம் எனக் குறிப்பிடக்கூடிய செங்கலடி இராணுவ முகாமுக்கருகில் உள்ள பிரதேச செயலக வாகனம் பட்டப்பகலிலேயே புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டதில் இருந்தே இப்பகுதியில் புலிகள் எந்த அளவிற்குப் பலமாக உள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அண்மையில் வாழைச்சேனையில் இராணுவ அதிகாரிகளினால் பொதுமக்களுக்கு நடாத்தப்பட்ட கூட்டத்தில் புலிகளுக்கு உதவி செய்பவர்கள் யார் யார் என்பதெல்லாம் தங்களுக்கு நன்கு தெரியும் எனக் கூறி மக்களை புலிகளுக்கு உதவி செய்ய வேண்டாம் எனக்கூறியுள்ளனர்.



இதே கதை தான் இரண்டு மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பு கச்சேரியிலும் நடநதது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட ராணுவ தளபதி ஜெனரல் சிறில் பீரிஸ் அக் கூட்டத்தில் கரிகாலனுக்கு உதவி செய்யும் அதிகாரிகள் யார் என்று தனக்குத் தெரியும் என்று கூறி தொடர்ந்து அவ்வாறு நடந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார். ஆனால் கதை தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அவர்களின் செயற்பாடுகளை நிறுத்துவதென்பது அப்பகுதிகளில் இருந்து அவர்களை வெளியேற்றிய பின்புதான் சாத்தியப்படக் கூடிய ஒன்று இதை நிறைவேற்றுவதற்காக ''ரிவிகிரகண'' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுகின்றது இந்த நடவடிக்கைகளின் ஊடாக மட்டக்களப்பின் மேற்குப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விடலாம் என அரசு கூறினாலும், மட்டக்களப்பில் உள்ள அரச படைகளின் தற்போதைய நிலையின்படி இவ்வாறான ஒரு பாரிய இராணுவ நடவடிக்கைக்குத் தேவையான படையினர் அரசிடம் இல்லை என்பதும் உண்மை. இதன் காரணத்தினால் படையினர் முன்னேறுவதும், பின்னர் பழைய நிலைகளுக்குத் திரும்புவதுமாகவே இருக்கின்றனர். படையினர் படுவான்கரையை நோக்கி முன்னேறும் பிரதான பதை பட்டிருப்புப் பாலம், அம்பிளான் துறை, மண்முனை துறை, வலையிறவு, பதுளை வீதி எனபன உள்ளன. இதில் பதுளை வீதியின் ஊடாக முன்னேறுவது படையினரைப் பொறுத்தமட்டில் மிகவும் சிரமமாக உள்ளது என்றே கூற வேண்டும். இப்பாதையால் முன்னேறிய ஒவ்வொரு தடவையும் பெரும் இழப்புக்களை இராணுவம் சந்தித்திருக்கின்றது. இவ்வாறான முன்னேறலின் போது படையினருக்கு ஏற்படும் இழப்புக்களின் பிரதிபலிப்பு எழுவான் கரை மக்களின் மீதே பிரதிபலிக்கின்றது. அடாவடித்தனமான தாக்குதல், தேவையில்லா கைதுகளும் சித்திர வதை, வீதித் தடை சுற்றி வளைப்பு, உணவுக் கட்டுப்பாடு என பல்வேறு விதங்களில் இது வெளிப்படுகின்றது. படையினரின் இத்தகைய தாக்குதல்கள், பொது மக்களுக்கு புலிகள் மீது ஆதர வைத்தான் ஏற்படுத்துகின்றன. படையினரும் புலிகளின் மீது பொதுமக்களை வெறுப்படையச் செய்ய எத்தனையோ தந்திரோ பாயங்களை மேற்கொண்டும் எதுவும் பயனளிக்கவில்லை. கடந்த மாதத்தின் (மட்டக்களப்பு நகரினுள் வெடித்த சைக்கிள் குண்டுகளும் இதன் ஒரு அங்கம் என்றே அனைவரும் கருதுகின்றனர்) மட்டக்களப்பு மாவட்டத்தின் 2/3 பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் புலிகளை இலகுவில் முறியடிப்பது என்பது தற்போதைக்கு முடியாத காரியம் என்றே படைத்தரப்பிலும் நம்பப்படுகின்றது. ஒன்று யாழ் நகரில் இருந்து படைகளை திருப்பியழைக்க வேண்டும் அல்லது மேலும் பல்லாயிரக்கணக்கானோரை படையில் புதிதாகச் சேர்க்க வேண்டும். இரண்டுமே உடனே முடியாத காரியம். இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும். சம்பவங்கள் தொடரும் என்றே கூறலாம்.

அரசின் மீது மக்கள் நம்பிக் கையிழந்ததற்கும், இதனால் புலி களுக்கான மக்களின் ஆதரவு கூடியதற்கும் அரசினால் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகளும் முக்கியமான காரணம். வடகிழக்கில் இன்று உள்ள நிலமைகளின்படி விடுதலைப்புலிகளை உள்ளடக்காத எந் தத் தீர்வும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. அரசு எண்ணுகின்றபடி தீர்வுத் திட்டம் என்ற பெயரில் எதையாவது முன்வைத்து, அதற்கு ஆதரவாக ஏனைய தமிழ் அமைப்புக்களைச் செயற்பட வைப்பதன் மூலம் தமிழ் மக்களை வென்று விடலாம் எனக் கணிப்பிட்டால் இது தமிழ் மக்களின் பிரச்சி னைகளை ஒருபோதும் தீர்த்து வைக்காது என்பதோடு தற்போதைய அவலங்களை விட பலமடங்கான அவலத்தை ஏற்படுத்துவதாகவே அமையும். முன்னர் இந்தியப்படை இலங்கையில் இருந்த போது எப்படி புலிகளும், ஏனைய தமிழ் அமைப்புக்களும் தங்களுக்குள்ளேயே அடிப்பட்டு மாய்ந்தார்களோ அவ்வாறான ஒரு நிலையை ஏற்படுத்தவே அரசு தற்போதும் முயல்கின்றது.

மூன்றாவது ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டு யாழ் நகர் கைப்பற்றப்படமுன்னர் அரசினால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகளுக்கும், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகளுக்கும் இடையில் உள்ள பாரிய வேறுபாடுகளைக் கொண்டு நோக்கும் போது, புலிகள் முற்று முழுதாக அழிக்கப்பட்டால் அல்லது வடக்கு, கிழக்கு பகுதிகள் அரசின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டால், தமிழ் மக்களுக்கு எவ்வித பிரச்சனைகளும் இல்லை, அவர்களுக்கிருந்த ஒரே பிரச்சனையான பயங்கரவாதமும் அழித்தொழிக்கப்பட்டுவிட்டது என்று அரசு பிரசாரம் செய்யத் தயங்கமாட்டாது. எனவே புலிகளின் வெற்றியின் அடிப்படையில்தான் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வும் தங்கியிருக்கின்றது என்பது எவராலுமே மறுக்கப்பட முடியாத விடயமாகிவிட்டது. இதனால் புலிகளின் தாக்குதலில் பொதுமக்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் பற்றி வட கிழக்கு தமிழ் மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளமாட்டார்கள் என்பதும் தெளிவான விடயம்.

தனது இனவாத வகைக்குள் இருந்து வெளிப்பட்டு வராதவரைக்கும், தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என மனப்பூர்வமாக உணராத வரைக்கும் வடக்கிழக்கில் நடை பெறும் சம்பவங்களை ஒருபோதும் நிறுத்தவே முடியாது போல்தான் தோன்றுகிறது.

## புலிகளின்...

இதே வேளை புலிகள் இயக்கத்திற்கும் இந்தியாவுக்குமிடையிலான முரண்பாட்டைத் தீர்க்கும் பொருட்டு புலிகள் இயக்கம் மேற்கொண்ட சமரச முயற்சி தோல்வியில் முடிந்திருப்பதாகவும் தெரியவருகிறது. சில மாதங்களாக புலிகள் இயக்கம், இந்திய அரசுடனான நல்லுறவை பேணுவதற்காக வெளிநாடுகளிலுள்ள இந்திய இராஜதந்திரிகளுடன் முயற்சி செய்திருந்த போதும் இந்தியா புலிகளிடமிருந்து உறுதிமொழியொன்றைக் கோரியிருந்தது. அதாவது ஈழக்கோரிக்கையை கைவிடவேண்டுமென்பதே அந்தக் கோரிக்கை. புலிகள் இயக்கம் அக் கோரிக்கையை உறுதியாக எதிர்த்ததைத் தொடர்ந்தே இந்தியா தனது இலங்கை ஆதரவுப் போக்கை வெளிக்காட்டியதாகவும் குறிப்பாக 14ம் திகதியன்று ஆயுதக் கப்பல் வரும் செய்தியைக் குறிப்பிட்டு இலங்கை அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்ததுமல்லாமல், இந்திய கடற்படையையும் அத்தாக்குதல் நடவடிக்கையில் இலங்கை கடற்படை– விமானப்படை ஆகியவற்றுடன் கூட்டு சேர்ந்து செயற்பட்டதாகவும் தெரியவருகிறது.

அதுமட்டுமல்லாமல் இச்சம்பவத்தைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம் புதிதாக வகுத்திருக்கும் கடற் பாதுகாப்புத் திட்டத்தை இந்தியாவுடன் கூட்டுச் சேர்ந்து செயற்படுத்தவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் அதற்கான திட்டத்தயாரிப்புக் கூட்டம பாதுகாப்பு அதிகாரிகளுக்கிடையில் நடத்தப்பட்டபோது, அங்கு, இந்தியா அச்செய்தியை அளிக்காது போயிருந்தால் புலிகளுக்கு அதிகளவு ஆயுதங்கள் கிடைத்திருக்குமென்றும். எதிர்காலத்திலும் இவ்வாறான ஆயுத வருகையை தடை செய்யாது போனால் யுத்தம் தொடருவதை தவிர்க்க இயலாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதே கூட்டத்தில் மேற்படி செயற்பாட்டுக்காக; கடலில் கலிபர் – 50 வர்க்க துப்பாக்கிகள் இரண்டு பொருத்தப்பட்ட 200 படகுகளாவது தொடர்ச்சியாக பயன் படுத்த வேண்டிவருமென்றும் தற்போது இவ்வகை 24 படகுகள் மட்டுமே பயன் படுத்தப்பட்டு வருவது பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வொரு படகுக்கு 15 லட்சம் ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் 200 படகுகள் வாங்குவது தொடர்பான சாத்தியக்கூறுகள் குறைவு என்றும் ரஷ்யாவிலிருந்து 30 மில்லியன் பெறுமதியான இரண்டு கப்பல்கள் வாங்குவதென்றும் தீர்மாணிக்கப்பட்டது.

இதற்கிடையில் அரசாங்க பாதுகாப்பு வட்டாரங்களுக்கு இந்தியா மேலும் அனுப்பி வைத்துள்ள செய்திகளின் படி புலிகள் இயக்கத்திற்கு **MV Sun Bird, MV Udldcn Bird, MV Ahad, Yelica, Nifily iy Tong Nova** ஆகிய ஆயுத விநியோகக் கப்பல்கள் இருந்ததாகவும் இவற்றில் **MV Sun Bird** கப்பல் இதற்கு முன்னர் மலேசிய அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டு சுவீகரிக்கப்பட்டதாகவும், **MV Ahad** எனும் கப்பல் 1993 ஜனவரி 16ம் திகதியன்று இந்தியக்கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டதாகவும், கிட்டு ஊள்ளிட்ட பத்து புலிகள் இயக்க முக்கிய உறுப்பினர்கள் அதில்தான் அழிந்து போயினர் என்றும் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

1991 நவம்பர் மாதம் 8ம் திகதியன்று புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றை இந்தியப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியதுடன் அதிலிருந்த 11 புலிகள் இயக்க உறுப்பினர்களையும் கைது செய்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்தியாவில் மும்முரமாக நடந்து வரும் லோக் சாபா தேர்தலுக்கான ஏற்பாட்டு வேலைகள் காரணமாக, நடந்து முடிந்த கப்பல் அழிப்புச் சம்பவத்தில் இந்தியாவின் பங்களிப்பு பற்றி இந்தியா வெளியிடாமல் மௌனம் காத்து வருகிறது. காங்கிரஸ் கட்சி, தென்னிந்தியாவில்– குறிப்பாக தமிழ்நாட்டில் தாம் பலவீனப்பட இது ஒரு காரணமாகப் போய்விடுமோவென பயப்படுவதாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இவ்விடயத்தை வெளிக்காட்டாமலிருப்பதே இந்தியாவுக்கு தாம் செலுத்துகின்ற நன்றிக்கடனாக இலங்கை கருதுகிறது போலும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வரவு

## பிரபாகரனின் தாத்தாமார்களும் சித்தப்பாமார்களும் மச்சான்மார்களும்

'ஜாதிக சிந்தனை' எனும் பௌத்த வாத அமைப்பின் நிறுவனரும், பேராசிரியருமான நளின் த சில்வா எழுதியுள்ள நூலே (பிரபாகரன் ஓஹுேகே சீயலா, பாப்பலாஹா, மஸ்ஸினாலா பிரபாகரனின் தாத்தாமார்களும், சித்தப்பாமார்களும் மச்சான்மார்களும்).பிரச்சினைக்கான தீர்வுப்பொதியொன்றை அரசு முன்வைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இந்நூலும் வந்திருப்பது, அதிகம் பேசப்படுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கிறது.

அரசின் தீர்வுப்பொதியை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் என்ற இருநிலைகளில்,பெளத்தம் என்ற பேரினச் சிந்தனைக்காக மாத்திரம் அதை எதிர்ப்பவர்கள்தான் நளின் த சில்வாவும், அவரது சகாக்களும். தேசபக்தன், பேரினவாதி என்று எதிரும் புதிருமாக அடையாளம் காணப்பட்டிருக்கிற ,நளின் தனது 'ஜாதிக சிந்தனை'யின் நிழலில் தமிழர் தாயகக் கோட்பாட்டை ஆயுதது மறுக்கிறார். தமிழர்களுக்கு இலங்கையில எதுவித பிரச்சினையுமேயில்லை என்பதே நளினின் நிலைப்பாடு.

முன்னாள் புரட்சிகர மார்க்ஸிஸ்ட்டான நூலாசிரியர், சிறுபான்மையினர் உரிமைகளை புறக்கணிக்கிறார். தன்னை நிலைநிறுத்தி நியாயப்படுத்த 'மார்க்சிஸம் காலங் கடந்தது' என்று கூறித் தப்பித்து இனவாத முகமூடியை இறுக்கிக் கட்டிக்கொள்கிறார்.

பிரச்சினை மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு அணுகப்படுகிறது. 1947க்கு முந்திய பிரித்தானியர் ஆண்ட காலப்பிரிவு. இக்கால



தமிழ்த்தலைவர்களான பொன்னம்பலம் அருணாசலம், பொன்னம்பலம் இராமநாதன் ஆகியோரின் அரசியற் செயற்பாடுகள் பரீட்சிக்கப்பட்டு, அவர்கள் பிரபாகரனின் தாத்தாமார்கள் என அடையாளம் காணப்படுகிறார்கள்.

இரண்டாவது கட்டம் சுதந்திரம் கிடைத்த 48 லிருந்து 70வரையான பகுதி. இது அமிர்தலிங்கம், ஜி.ஜி.பொன்னம்பலம், செல்வநாயகம் போன்ற பிரபாகரனின் சித்தப்பாக்களின் காலம். 70க்குப்பின் இன்றுவரையான காலப்பகுதி பிரபாகரனின் மச்சான்மார்களின் காலப்பகுதியாக்கப்படுகிறது. இதில் சகல தமிழ் ஆயுத, அரசியற் குழுக்களும் இடம் பெறுகின்றன. நீலன் திருச்செல்வம், டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் போன்றவர்கள் பிரபாகரனின் மச்சான்மார்களாவர்..

டொனமூர் கெமரோன் சீர்த்திருத்தங்கள், சோல்பறி யாப்பு இவைகளும் 'ஜாதிக சிந்தனைக்குஉட்படுகின்றன. அவை மூலமான வரலாற்றுத் திருப்புமுனைகளும் கூறப்படுகின்றன.

தீர்வுப்பொதியை இனவாத ரீதியில் எதிர்ப்பவர்களது நிலைப்பாட்டை அறிந்துகொள்ள உதவும் இந்நூலில் லக்ஷ்மன் கதிர்காமர் ஈழத்திற்காக் பேசிக்கொண்டு திரிபவராக (Ealam Lobbyist) அடையாளம் காணப்படுவது ரசனைக்குரியது.

பொதுவான வாசகர்கள் நளின் த சில்வா மூலம் நூலின் அடக்கத்தையே புரிந்துகொள்வார்கள். நூலின் பெயர் கூட அவரை அடையாளப்படுத்திவிடும்.

இதை எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுகிற விடயம் என்று சொல்லி முடிக்கலாம். ●

நில்ஷா

---

மலையக இலக்கியம் பற்றிய அறிவினைத் தரக்கூடிய ஓர் முழுமையான நூல் இல்லையே எனுங்குறையை இந்நூல் ஓரளவிற்கு நிவர்த்தி செய்துள்ளது எனலாம்.மலையக மக்கள் வெறுமனே இலங்கைக்கு ஏமாற்றி அழைத்து வரப்பட்டவர்களே என்று மேலோட்டமாக கூறும் நிலையிலிருந்து மாறி; அவர்கள் புலம்பெயர ஏதுவான பொருளாதார, அரசியல். சமூக அடிப்படைச் சூழலை வைத்து கொண்டு ஆய்வு செய்துள்ளதுடன், இந்திய சாதித்துவ கொடுமைகளையும், இந்து சமயத்தின் சுரண்டல்தனமான கோட்பாடுகளையும் குறித்துக் காட்டுவதனூடாக, இம்மக்கள் புலம் பெயரவர்க்க அடக்கு முறைதான் காரணமாய் இருந்துள்ளது என்பதை ஆய்வு ரீதியாக முன்வைக்கின்றார்.

சோசலிசமும், முற்போக்குச் சிந்தனைகளும் தோற்று விட்டதாக கூறும் பிற்போக்கில் இருந்து வேறுபடுவதாக அவரது கருத்துக்கள் உள்ளன. என்றாலும் இந்நூல் மலையக இலக்கியம் பற்றிய முழுமையான ஆய்வாக கொள்ளமுடியவில்லை. இதன் தலைப்புக்களை ஐந்து வகைக்குள்ளேயே அடக்கியிருக்கிறார்.

1. மலையக தோட்டத் தொழிலாளர் ஓர் அறிமுகம்.
2. மலையக தமிழ் இலக்கியம்-தோற்றமும் வளர்ச்சியும்
3. நாட்டாரியல்
4. கவிதை
5. புதுக்கவிதை

என்பவையே அவையாகும். இதற்குள் சிறுகதை, நாவல், என்பன ஆய்வில் தவிர்க்கப்பட்டுள்ளன. இதனால் மலையக இலக்கிய கர்த்தாக்கள் இத்துறைகளுக்குள் ஆற்றிய பங்களிப்பினையும் அத்துறைகளின் வளர்ச்சி பற்றிய நிலையினையும் தெரிந்து கொள்ளமுடியாது போகிறது. அது போலவே முக்கிய எழுத்தாளர்கள் பலரின் பெயர்கள் இவ்வாய்வில் தவற விடப்பட்டுள்ளன.

மலையக இலக்கியத்தில் குறிஞ்சித் தென்னவனின் பங்களிப்புக்கு ஈடானதாகவே மல்லிகை சி. குமாரின் பங்களிப்பும் பரவியுள்ளது. குறிஞ்சித் தென்னவனின் கவிதைகள் ஏற்படுத்திய தாக்கத்தினை விடவும் மல்லிகை சி. குமாரின் கவிதைகள் ஏற்படுத்திய தாக்கம் பெரிது. பத்திரிகைகளிலும், சஞ்சி

**நூல்:** மலையக தமிழ் இலக்கியம்
**நூலாசிரியர்:** கலாநிதி . அருணாசலம்
**வெளியீடு:** தமிழ் மன்றம்
**விலை:** ரூபா 125.00

கைகளிலும வெளிவந்துள்ள இவரின் கவிதைகள் அண்மையில் ''மாடும் வீடும்'' எனுந் தொகுதியாகவும் வெளிவந்தது. இவரும் ஒரு தொழிலாளி என்பதை உணர்வதோடு, இவரின் கவிதைகள் அரசியல் தலைவர்களையே உலுக்கியிருக்கிறது; என்பதையும் அறிதல் வேண்டும். இவர் இதனால் பல பழிவாங்கல்களுக்கு முகம் கொடுக்கவேண்டியவராக இருந்து வருவதுடன், பல பரிசில்கள் கூட கொடுக்கப்படவிடாமல் தடுக்கப்பட்டவராக உள்ளார். மேற்படி நூலில் இவரின் பெயர் சாதாரணமாக கூறப்பட்டுள்ளதுடன் இவரைப்பற்றிய ஆய்வு முழுமையாக தவிர்க்கப்பட்டுள்ளது. இவரை விட பெயர் சொல்லக்கூடிய சி. சிவசேகரம், இ. தம்பையா, சிவ.இராஜேந்திரன், பி. மரியதாஸ் போன்ற இன்னும் பலரும் இவ்வாறு விடப்பட்டுள்ளவர்களில் அடங்குகிறார்கள். பி. மரியதாஸ் தவிர்ந்த ஏனைய மூவரும் தாயகம், செம்பதாகை, புதிய பூமி, வீரகேசரி, தினகரன் உட்பட பல வெளிநாட்டு சிற்றிதழ்களிலும் எழுதியுள்ளார்கள். இவர்கள் எழுதிய கவிதைகள் ''குன்றத்துக் குமுறல்'' எனும் கவிதைத் தொகுதியாகவும் 1993ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. இதனை ஏன் கவனிக்கத் தவறினார் என்பது தெரியவில்லை. இன்னும் கவிஞர் முருகையனும், செ. குணரத்தினமும் கூட மலையகத்தவரின் வாழ்நிலை பற்றி காத்திரமிக்க கவிதைகளைப் படைத்துள்ளனர். இவர்களும் இவ்வாறு விடப்பட்டவர்களுக்குள் அடங்குகின்றனர்.

இதனை வாசிக்கின்ற போது உடனே தெரிகிற விடயம் நூலாசிரியர் குறிப்பிட்ட சில சஞ்சிகைகளையும், நூல்களையும், மட்டுமே தகவல் தேட பயன் படுத்தியிருக்கிறார் என்பதே. எனவே இதனை விரிவு படுத்தவேண்டிய தேவை எம்முன்னே இருக்கிறது. வீரகேசரி, தினகரன், போன்ற தேசிய பத்திரிகைகளில் வெளியான மலையகஞ் சார்ந்த கவிதை, சிறுகதை, நாவல் அல்லது தொடர்கதை, என்பனவற்றையும் தேடி ஆய்வுநடத்துவதோடு; கொழும்பு, யாழ்ப்பாணம், பேராதெனிய, போன்ற பல்கலைக்கழகங்களிலும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும், கல்வியற் கல்லூரிகளிலும் வெளியான நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றையும் தன் ஆய்வில் சேர்த்துக் கொள்வது அவசியமாகப் படுகிறது.


அடுத்த பதிப்பில் இவற்றினையும் சேர்த்துக் கொண்டால் இன்னும் ஆரோக்கியமான நூலாக இது அமைய வாய்ப்புண்டு. என்றாலும் மிக அக்கறையுடன் இத்துறையில் கால் பதித்து ஆரம்பித்து வைத்த கலாநிதி க. அருணாசலம் போற்றத்தகுந்தவரே. ●

பன்னீர்

---

படுகொலை செய்யயப்பட்ட கரவை ஏ.சி. கந்தசாமியின் நினைவுதினக் கருத்தரங்கில் நிகழ்த்தப்பட்ட உரைகளின் தொகுப்பே இந்நூல். இது 'பாரதி' வெளியீட்டகத்தின் இரண்டாவது வெளியீடாகும். கரவையின் 58 வது பிறந்ததினத்தன்று 'நான் அரசன்' எனும் சிறுவர் பாடல் நூலொன்று முதலாவது வெளியீடாக வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்நூலில் மூன்று கட்டுரைகளும், கரவை பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. 'சிறுபான்மை தேசிய இனங்களின் போராட்டம் இறுதி தசாப்தத்தில் ஒரு பார்வை, எனும் தலைப்பில் வி.ரி. தமிழ்மாறனும் யுத்தமும் சிறுவர் உளவியலும்- ஒரு சமூகவியல் பார்வை எனும் தலைப்பில் கொன்சன்ரைனும், வன்முறையும், கல்வியும், எனும் தலைப்பில் சோ. சந்திரசேகரமும் நிகழ்த்திய உரைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. சமதர்ம சமத்துவ சமுதாயத்தை கட்டியெழுப்ப தம் உயிர்களைத்தியாகம் செய்து அர்ப்பணித்த தோழர், தோழியருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்நூல் வித்தியாசமானதும், ஆக்கபூர்வமானதுமான ஒரு முயற்சியாகும். ●

நில்ஷா




**நூல்:** தேசிய இனப்பிரச்சினை. போர்க்காலத்தில் கல்வி போர்க்காலத்தில் சிறுவர் உளவியல்
**வெளியீடு:** பாரதி வெளியீட்டகம்
**விலை:** ரூபா 25.00

'வரவு' பகுதியில்
புத்தகங்கள் பற்றிய
குறிப்புகள் இடம்பெற
விரும்புவோர் நூலின்
இரு பிரதிகளை
அனுப்பிவைக்கவும்.
இப்பகுதிக்கு
வாசகர்களும் தாம்
வாசித்த புத்தகங்கள்
பற்றிய அபிப்பிராய
குறிப்புகளை
அனுப்பிவைக்கலாம்.
ஆ-ர்

---

தனிமையின் கோரமுகம்
எனக்கான மனிதர்களற்ற
நகரத்தின் வளியிறுக்கமான அறையில்
மெது மெதுவாய்த் துலங்கி வருகிறது.
வாகையும்
பூவரசுகளும்
ரெட்டை ஆலைகளும் சரசரக்க
ஊவென்ற காற்றின் ஓசையைத் தவிர
வேறொன்று மற்றுத் தொலைவில் உறைந்துள
என் ஊரின் இரவில்
அமர்ந்தமர்ந்து
அலையெறியும் கடலின் இரைச்சலுடன்
ஒரு கோடி நூற்றாண்டுகளின் வேதனையைத்
துயரைத்
தழுவியெழுகிறதோர் பாடல்.
உயிர் பிய்ந்தொழுகுகிற கீதம்.

இழைந்திழைந்து வருகிறது தான்.
புதுக்குடியிருப்பில் தோய்ந்த ரத்தத்தை
கொழும்பு மத்திய வங்கியின்
இடிபாடுகளிடை நசுங்குண்ட
குழந்தைகளின்
கர்ப்பிணிகளின்
அவயவங்களை முகர்ந்தபடி அத்
துயரத்தின் பாடல்
இழைந்திழைந்து வருகிறது.......
கட்டடக் காட்டை
சிற்றொழுங்கைகளை
இன்னும் என்னென்னவோ அத்தனையும் தாண்டி
என் பெருமூச்சுகளால் நிரம்பிய மண்டபத்தின்
அடைத்துச் சாத்திய கதவின்
சாவி இடுக்கினூடாக நுழைந்து
துயில்கிற எனை
உலுப்பி எழுப்புகிறது.

நீளவிரிந்து பரந்துள
வணக்கவறையின் தொங்கலில்
காற்று தூர்த்த அரசிலைச் சருகுகள்
கால்களிடை நொருங்கிக் "கறமற"க்க
அவளுடைய காதணி இடுக்கில் சிக்கிய
தலைமுடியைக் கழற்றிச் சிரித்த கணங்களையும்
இன்னும் ஆயிரம் ஆண்டுகள் பின்னும் என்
மூக்கு நுனியில் மீய்ந்துள
அவளின் பின் கழுத்து வாசனையையும்
மோப்பம் பிடித்துச் சிலிர்த்துக் கிடக்கிறேன் நான்.

இரவே,
நகரத்தில் எப்போதாயினும் அரளும்
இயற்கை செத்த காற்றே,
எனதூரின் மசூதியிலும்
என் இனத்தார் துயின்றிருந்த
அயற் சிறிய கிராமங்களிலும்
ஓராயிரம் மனிதர்
குருதியில் துவைந்தவை பார்த்து மரத்தேன்.
விறைத்துச்சடத்தேன்.
ஓங்கி உரத்து முகம் புதைத்தழவும்
நாச் செத்து வரண்டேன் தான்.
போ,
முடிந்தால்
குளித்து ஈரம் முழுக்க உலராமல்
தலையை ஒரு புறம் கெழித்து
விரித்துப் போட்டு அவள் கோதுகிற கூந்தலில்
இருந்தோர் மயிரேனும் கொணர்ந்து தா
மோகத்திலும் தாபத்திலும்
முற்றிப்
பாதி இமைமூடிப் பார்வை மயங்கிக்
கிறங்கிக் கிடக்கும் என் முகத்தை வருட
இக் கொடு மிரவைக் கடக்க
தனிமை தனைத் தொலைக்க.

என் கவலை,
ஆற்றாமை,
துயர்
அனைத்தும் இவை பற்றித்தான்
ஆஸ்பத்திரிக்குப் பின்னால் போகும் சாலையில்
நிறைந்து கிடக்கும்
புளொட் காரனும் ஆமிக்காரனும்
எப்போது அகல்வது?
அவள் பற்றிய கனவுகள்
பூரித்துப் பொலிகிற கண்களுடன்
அச்சாலையில் என்
சைக்கிளின் சக்கரங்கள் மீளவும்
எப்போது உருள்வது? ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# விடுதலைக்கான அரங்குக்குச் சார்பாக

சி. சிவசேகரம்

சில வாரங்கள் முன்பு சரிநிகரில் மூன்றுபேர் சேர்ந்து எழுதிய ஒரு கட்டுரை, விடுதலைக்கான அரங்கின் தேவையும் நியாயமும் பற்றிய திறந்த விவாதம் ஒன்றின் தேவையை எனக்கு உணர்த்தியது.கலை இலக்கியங்கள் தொடர்பாக இவ்வாறான விவாதங்கள் சில தசாப்தங்கட்கு முன் தடம் புரண்ட போதும், முடிவிற் சமுதாயச் சார்பான கலை இலக்கிய மேம்பாடு நிலைநிறுத்தப்பட்டது. அழகியல் என்ற பேரிற் கலை இலக்கியங்களை மனித வாழ்வினின்று விலக்கப்பார்க்கும் போக்குத் தன் தத்துவ வறுமையை மட்டுமன்றி அரசியற் பிற்போக்குத் தன்மையையும் வெளிப்படுத்தியது.

ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன் ஈழத்தமிழ் நாடகங்கள் பற்றிய ஒரு விவாதம் திசை தவறிப்போனது. ஆயினும், அரசியல், சமுதாயப் பிரச்சினைகளை மையப்படுத்தும் நாடகங்களின் வருகையும் செல்வாக்கும் அதிகரித்தன. நிகழ்த்தப்படுங் கலை என்ற வகையில், நாடகங்கள் எழுத்தையோ ஓவியத்தையோ விட அதிகமாக ஒரு வலிமையை உடையன. பலரது கூட்டு முயற்சியால் உருவாகும் ஒரு படைப்பு என்ற வகையில், அதற்கு ஒரு ஜனநாயகப்பண்பும் உண்டு. பார்வையாளர்களுடனான நேரடியான உறவு, அதைச்சினிமாவினின்றும் வீடியோ/தொலைக்காட்சிக் கலை வடிவங்களினின்றும் வேறுபடுத்துவதோடு, அதன் ஜனநாயகத்தன்மையை மேலும் ஒரு படி உயர்த்த வழி செய்கிறது. இதனால் நாடகங்கள் அரசியற், சமுதாயப் போராட்டங்களிலும் ஒரு பெரும் பங்களிக்க இயலுமாகிறது. சமுதாயச் சார்பான நாடகங்கள் நாடகத்துறையின் வரலாற்றினின்று பிரிக்க முடியாதன. ஒவ்வொரு காலத்து நாடகங்களிலும் அக்காலத்துக்குரிய அரசியல், (மதம், உட்பட ) தன்னை அடையாளங்காட்டிக்கொண்டது. எனினும், அரசியல் மிக்க சூழல்களில், நாடகங்களின் அரசியற் பரிமாணம் வெளிவெளியாகவே தன்னைப் புலப்படுத்திக் கொள்கிறது. இந்த வகையில் விடுதலைக்கான அரங்கு என்பது முற்றிலும் புதியதல்ல. ஆயினும் அது முன்னெப்போதையும் விட வெளிவெளியாகத் தன் அரசியலை அடையாளங்காட்டிக்கொள்வதுடன், நாடகம் என்ற துறையை விடுதலை என்ற இலக்கிற்குச் சார்பாகக் கருதும் அளவில், முன்னைய கால அரசியல் நாடகங்களினின்று வேறுபடுகிறது. மக்கள் மத்தியிற் கருத்துக்களை கொண்டு செல்வது முக்கியமாவதால் நாடகங்கள் அதற்கேற்ற வடிவங்களையும் நாடி நிற்கின்றன. எனவே விடுதலைக்கான அரங்கு ஒரு வெகுஜன நாடக இயக்கத்தின் விருத்தியையும் நாடகத்துறையின் புதிய வடிவங்களின் தோற்றத்தையும் இயலுமாக்குகிறது.

விடுதலைக்கான நாடக அரங்கு தொடர்பான விவாதங்களில் நாடகங்களின் உள்ளடக்கம் தொடர்பாக மட்டுமன்றி உருவந் தொடர்பாகவும், கருத்து முரண்பாடுகள் உள்ளன. குறிப்பிட்ட சில வடிவங்கள் மட்டுமே விடுதலைக்கானவை என்ற கருத்து, தரப்பட்ட ஒரு சூழலிற் பரந்து பட்ட மக்களைச் சென்றடையக் கூடியவை பற்றிய ஒரு கூற்றாக உள்ளளவில், அது பற்றிய விவாதம், அரசியற் தேவையும் நடைமுறையும் பற்றியதாகிறது. அவ்வாறில்லாமல், அது ஒரு பொது விதியாக வகுக்கப்படும் போது நாடகம் பற்றிய அடிப்படையான கேள்விகளை அது எழுப்புகிறது. சில நாடக வடிவங்கள் பற்றிய ஆட்சேபனைகள் அவை மேலை நாட்டுவடிவங்கள் என்ற அடிப்படையில் எழுதப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்புக்களும் தழுவல்களும் ஏற்புடையனவல்ல என்ற கருத்தும் போதிய ஆதாரங்களின்றி கூறப்பட்டுள்ளது. சில சமயங்களில், மரபு சார்ந்த நாடக வடிவங்களை வலியுறுத்தும் போக்கும் காணப்படுகிறது. நாடக வடிவங்களென கருதக்கூடிய வீதி நாடகம் (தெருக்கூத்தல்ல) மக்கள் அரங்கு, ஜனரஞ்சக நாடகம், என்பனவற்றை ரஷ்யப்புரட்சியின் வெற்றியின் உந்துதல், பேட்டோல்ற் ப்றெஷ்ற் போன்றவர்களது வெற்றிக்கு உரமூட்டியது. ப்றெஷ்ற்றின் காவிய நாடகம் எனும் நாடக முறை ஒரு முக்கிய மாற்று அரங்கு. அண்மைக்காலங்களில் மூன்றாமுலக நாடுகளில் பல்வேறு மாற்று அரங்குகள் விருத்தி பெற்றுள்ளன. யூ.என்.பி. ஆட்சியின் சர்வாதிகாரத்திற்கெதிராக மாற்று நாடகவடிவங்கள் பயன் பட்டதையும் நாம் நினைவிற்கொள்ளலாம். ஆயினும், குறிப்பிட்ட சில அரங்குகளை மட்டுமே விடுதலைக்கான அரங்காக கொள்ளலாம் என்ற கருத்தும் நமது மரபு சார்ந்த வடிவங்களையொட்டியே விருத்தி பெற வேண்டும் என்ற கருத்தும் குறுகலான நோக்குடையன. இவ்வாறான வாதங்கள் தமிழ் கலைஇலக்கியங்களுக்குப் பிரயோகிக்கப்பட்டிருக்குமாயின் தமிழில் உரைநடை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே தொடர்ந்திருக்கும்.

குருட்டுத் தனமாக மேலைநாட்டு நாடகங்களையும் சினிமாவையும் பிரதி பண்ணும் போக்கும் வெறும் பொழுது போக்காகவும் களியாட்டமாகவும் நாடகத்தைக் கருதும் போக்கும் நமது பண்பாட்டின் சீரழிவுக்கே உதவுவன. அதேவேளை அரசியலிலிருந்து கற்க மறுக்கும் போக்கும் நல்லதல்ல. சரத்சந்திரவின் சிங்கள மேடையின் வெற்றி அவர் மேற்கிலிருந்து கற்ற நவீன நாடக மேடை அறிவை மரபுடன் இணைத்ததன் விளைவாகும். தமிழில், அவரளவுக்கு உரிய ஆற்றலை எவரும் இதுவரை புலப்படுத்தவில்லை. தமிழிற் சில நாடகவடிவங்கள் விடுதலைக்கான அரங்கை விருத்தி செய்வதிலோ நாடகம் என்ற முறையிற் தமது சாத்தியப்பாடுகளைப் போதியளவு வெளிப்படுத்துவதிலோ தவறியிருந்தால், அக்குறைபாடு அவ்வடிவங்களுடையனவாக மட்டுமே இருக்க வேண்டியதில்லை. அவற்றுக்குரிய இயங்கு தளங்கள் அக்குறை பாட்டுக்குக் காரணமாக இருக்கலாம். ஒரு நாடக வடிவை விருத்தி செய்வதற்குத் தேவையான நாடகத்துறை அனுபவமும் நவீனத்துவமான சமுதாயப் பார்வையும் புதியன புனையும் கற்பனை வளமும் இணையாமல், ஒரு நாடகம் அரசியல் ரீதியாக முற்போக்கானதாயும் கலை என்ற வகையில் நிறைவானதாயும் அமைய முடியாது. நமது நாடகமரபு பலவீனமானது. இது தனிப்பட்ட முறையில் எவரதும் ஆற்றலின் குறைபாட்டையோ அக்கறையின் போதாமையையோ குறிக்காது. கூத்து என்ற கிராமியக் கலை வடிவம், தென் இந்தியாவின் தெருக்கூத்து உட்பட, தமிழ்ச் சமுதாயத்தின், பிற்படுத்தப்பட்ட ஒரு சூழலில், பிற்படுத்தப்பட்ட மக்களாலேயே பேணப்பட்டு வந்தது. நவீன நாடகம் அதன் பல்வேறு வடிவங்களில் அயலிலிருந்தே வந்தது. பொழுது போக்கு இங்கு பெரிதும் முக்கியப்படுத்தப்பட்டதாற் பிற்காலத்திற் சினிமாவின் பாதிப்பு அதிகமானதில் வியப்பில்லை. கூத்து வடிவங்கள் மூலம் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது மனக்குமுறலை வெளிப்படுத்த முற்பட்டுள்ளார்கள். ஆயினும், கூத்தை ஒரு அரசியற் கூற்றாக மேடையேற்றும் முயற்சிகள் அண்மைக்காலத்தவை இவ்வாறான முயற்சிகள் போதியளவில் மேற்கொள்ளப் பட்டதாகவுங் கூற இடமில்லை.

விடுதலைக்கான அரங்கு என்பது ஒரு குறிப்பிட்ட நாடக வடிவத்தையோ ஒரு சில வடிவங்களையோ மட்டுங் குறிக்க அவசியமில்லை. ஏனெனில், விடுதலைக்கான போரர்ட்டம் எங்கும் ஒரே விதமான களத்தில் நிகழ்வதில்லை. விடுதலைப் போராட்டக்களங்கள் வேறுபடும் போது, விடுதலைக்கான அரங்கும் வேறுபடுகிறது. வெவ்வேறு தளங்களிலுஞ் சூழல்களிலும் மக்களை சென்றடைய வெவ்வேறு அரங்க வடிவங்கள் பயன்படலாம். விடுதலைப்போராட்டம் பல்வேறு சக்திகளை ஐக்கியப்படுத்தும் தேவையையுடையது. நடுத்தர வர்க்கப் பார்வை என்று கூறிச் சில அரங்குகளை புறமொதுக்கும் போது, வென்றெடுக்கப்படக்கூடிய நேச சக்திகளையும் புறமொதுக்க நேருகிறது. விடுதலைப் போராட்டம் தனது செய்தியை எங்கெங்கெல்லாம் கொண்டுசெல்லமுடியுமோ அங்கெங்கெல்லாம் கொண்டு செல்ல வேண்டும். ஆயினுங், குறிப்பான போராட்டச்சூழல்களே எவற்றுக்கு அதிக அழுத்தம் அவசியம், எவை சாத்தியமானவை என நிர்ணயிக்கின்றன. இவ்வாறான முடிவுகள் நிரந்தரமானவையல்ல. சில கலை வடிவங்கள் காலங்காலமாகவே பழமைவாதச் சிந்தனையுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளன. விடுதலைப் போராட்டம் இக்கலை வடிவங்களையும் அவற்றின் இறுகிப்போன நிலையினின்று விடுவிக்க இயலுமானதாயிருப்பின் அது விரும்பத்தக்கது. ஆயினும் இது எளிதல்ல. அதற்காக, முன்கூட்டியே சில நாடக வடிவங்களை விடுதலைக்கு ஒவ்வாதன என்று எவரும் நிராகரிக்கும் அவசியமில்லை. மக்களைச் சென்றடையக்கூடிய வடிவங்களுக்குத் தரப்படும் அழுத்தம், பிறவளங்களை நிராகரிக்கும் நடவடிக்கையாகி விடக்கூடாது.

எழுத்தைப் போலன்றி, நாடக இயக்கம் தனது வளர்ச்சிக்கு நல்ல ரசனையுடைய பார்வையாளர்களது தளராத ஆதரவை வேண்டி நிற்கிறது. ஒரு நாடகக்குழுவை நடத்துவது ஒரு சிறு சஞ்சிகையை நடத்துவதைவிடக் கடினமானது. அரச ஆதரவு அல்லது வியாபார நோக்கம் இல்லாத ஒரு நாடக்குழு பொதுசன ஆதரவையே பெரிதும் நம்பியுள்ளது. நல்ல ரசனையை வளர்ப்பதன் மூலமே ஒரு நாடகக்குழு தொடர்ந்தும் இயங்கமுடியும். தூய அழகியல் வாதம் என்ற நோக்குடன் நாடகத்தை அணுகுஞ் சிலர் பரீட்சார்த்த நாடகங்கள் என்ற எல்லைக்குள்ளேயே சிறுபான்மைப் போக்காகத் தம்மைச் சிறைப்படுத்திக் கொள்வதை நாம் காணலாம். நாடகம் ஒரு வெகுஜனக் கலைவடிவம் என்பதை உணர்வோர், உருவம், உள்ளடக்கம், அழகியல், நாடகத்தைப் பரவலாக்கல் என்ற சகல விஷயங்களிலும் அக்கறை காட்டுவார்கள். ''மக்களுக்கு இது விளங்காது, இதை ரசிக்க மாட்டார்கள்'' என்று சிலர் எளிதாகத் தீர்மானித்து விடுகிறார்கள். இது மக்களது அழகுணர்வு பற்றிய கீழான மதிப்பீடாகும். எவரது அழகுணர்வும் பழக்கத்துடனும் பயிற்சியுடனும் உருவாவது தான் . சிக்கலான விஷயங்களை அறியுமுன் எவரும் எளிமையான விஷயங்களை அறிய இயலுமாயிருக்க வேண்டும். ஜனரஞ்சகம் என்ற பேரில் மட்டரகமான விஷயங்களைப் பரிமாறுவதை நாம் எளிமையுடன் குழப்பிக்கொள்ளக் கூடாது. விடுதலைக்கான நாடக அரங்கு பெரும்பாலும் எளிமையான முறையில் தனது தகவல்களை கூறுகிறது. இந்த எளிமை நுட்பமான விஷயங்களைச் சொல்ல இயலாமல் மறிக்கும் எளிமையாக இருக்க அவசியமில்லை. விடுதலைக்கான நாடக இயக்கம் மக்களது ரசனையையும் அரசியல் உணர்வையும் வளர்த்தெடுக்கும் நோக்கைக் கொண்டது. அது மட்டுமன்றி, மக்களிடையே உள்ள நாடக ஆற்றலையும் வெளிக்கொணர அதற்கு இயலும். இது நாடகத்தைப் பரவலாக்கும் ஒரு இயக்கமாகவும் அதை உயர்த்துகிறது. இந்த வகையிற், சில நாடக வடிவங்கள் மற்றையவற்றைவிடக் கூடியளவு பயனுள்ளன. எவ்வாறாயினும் விடுதலைக்கான அரங்கு எது என்பதைத் தீர்மானிப்பது, ஒரு அரங்கு விடுதலைக்கான செய்தியை மக்களிடம் கொண்டு செல்கிறதா என்ற கேள்வியே. நாடக வடிவம் பற்றிய விறைப்பான விதிகள் பயனற்றவை. நடைமுறையே முக்கியமானது.

மேற்கூறப்பட்ட கருத்துக்கள், பெரும்பாலும் விடுதலைக்கான அரங்கு தொடர்பாக உள்ள குறுகலான பார்வைகள் பற்றியன. மறுபுறம், விடுதலைக்கான அரங்கிற்கு எதிராகவும் பொதுவாகச் சமுதாய, அரசியல் முனைப்புடைய நாடக இயக்கத்திற்கு எதிராகவும் உள்ள பார்வை மிகவும் குறுகலானது. விடுதலை பற்றிய கோட்பாட்டைக் குறிப்பிட்ட ஒரு சில இயக்கத்துடனோ போராட்டத்துடனோ, சேர்த்துக் கருதும் போது, விடுதலைக்கான அரங்குபற்றிய பார்வை விகாரமடைய இடமுண்டு. இனவிடுதலைக்கான போராட்டம் மட்டுமன்றிப் பெண்ணுரிமை, சாதிய எதிர்ப்பு, மொழியுரிமை, வழிபாட்டுச்சுதந்திரம், மனித உரிமை, ஜனநாயக உரிமை, ஆகியன உட்பட ஒடுக்குமுறைக்கு எதிரான சகல இயக்கங்களும் விடுதலைக்கான இயக்கங்களே. எனவே விடுதலைக்கான அரங்கு மிக விசாலமானது. என்றுமே அது ஒற்றைப் பரிமாணமுடையதல்ல.

எனவே, விடுதலைக்கான அரங்கை நிராகரிப்பது, நாடகத்துறைக்கும் மனிதரது சுயாதீனமான இருப்புக்குமிடையிலான உறவை நிராகரிப்பதாகும்.


கலைகள் யாவுமே மனித வாழ்வுடனும், மனித உணர்வுடனும் தொடர்பு பூண்டவை. யதார்த்த நிலையினின்று தப்பி ஓட உதவும். கலைப்படைப்புக்கள் மனித நெருக்கடியின் விளைவானவை. அவை மனித இருப்பின் அவலத்துக்கு முகங்கொடுக்க இயலாமையால் மட்டும் எழுவன அல்ல. மனிதர் அவ்வாறு முகங்கொடுப்பதைத் தவிர்க்குங் கருவியாகவும் இன்றைய வியாபாரக் கலை இலக்கியங்கள் செயற்படுகின்றன. கலைகள் இந்த அழிவினின்று விடுபடுவதாயின், முதலில் மனிதர் விடுதலையுணர்வு பெற வேண்டும். இந்த வகையிற் சமுதாயப்பார்வையுடைய கலை இலக்கியங்களே நசிவுக்கலை இலக்கியங்கட்கு எதிராக செயற்படுகின்றன. அவை தமது உள்ளடக்கத்தின் தன்மை காரணமாகத் தமது அழகியற் பண்பை இழக்க அவசியமில்லை. எனவே ஒடுக்குமுறைக்கு உட்பட்ட ஒரு சமுதாயத்தினுள், விடுதலைக்கான அரங்கு, சகல தளங்களிலும் சமுதாயத்தின் விடுதலையை வலியுறுத்துகிற அதே வேளை, நாடக அரங்கின் மேம்பாட்டுக்கும் பணியாற்றுகிறது. தமிழ்ச் சினிமா, வீடியோ/தொலைக்காட்சி போன்றவற்றின் மூலம் சமுதாயத்தை ஊடுருவியுள்ள கீழ்த்தரமான ரசனையை முறியடிப்பதில் மக்களைச் சென்றடையக்கூடிய இந்த அரங்கிற்கு முக்கியமான ஒரு பங்குண்டு.

விடுதலைக்கான அரங்கு பற்றிய புரிதலின் போதாமையால் அதைக்கீழ்மைப்படுத்தும் முயற்சிகள் பல திசைகளினின்றும் வரலாம். மரபுவாதிகளும் தூய அழகியல்வாதிகளும் விடுதலைக்கான அரங்கை ஒரு பிறழ்வாகக் கருதலாம். விடுதலைக்கான அரங்கின் செயற்பாட்டை ஒரு குறுகிய கால, இட எல்லைக்குள் மட்டுமே கண்டு அது பற்றிய அவசர முடிவுகட்கும் எவரும் வரலாம். ஆயினும், விடுதலைக்கான அரங்கு, இன்று மனித இன மேம்பாட்டுக்கான இடையறாத போராட்டத்தில் ஒரு வலிய கருவியாக உருவாகி வருகிறது. அதன் வடிவத்தை அது செயற்படும் களங்கள் நிர்ணயிக்கின்றன. அது மரபுக்கும் அழகியலுக்கும் எதிரியல்ல. அது எந்த ஒரு வகைப்படுத்தலாலுஞ் சிறைப்படுத்தக்கூடியதுமல்ல. அவ்வாறான முயற்சி, விடுதலைக் கோட்பாட்டுக்கு முரணான ஒன்றாகவே இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தமிழ் சினிமா: கனவில் காட்டும் சொர்க்கம்

ஏ.எச்.எம்.நவாஸ்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பல்வேறு அழகியல் பரிமாணங்களைக் கொண்டது, சினிமா. சினிமாவின் ஊற்று விஞ்ஞானம்; அதன் பிரவாகம் கலை, பௌதீக, இரசாயன, விஞ்ஞான ஆராய்ச்சிகளின் கூட்டு சிருஷ்டியான சினிமா நுண்கலைகள், சாதாரணக் கலைகள் முதலான எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக்கொள்ளும் ஒரு Total Art ஆகும். அதனால்தான் ரஷ்யப்பட நெறியாளர் புடோவ்கின் (Pudoukin) சினிமாவை 'பல கலைகளின் ஒரு மித்தகலை' (Synthetic Art) என்று கூறினார். பார்வைக்கான கலை ஊடகமான சினிமா இன்று **ஏழாம் கலை**யாக ஏற்கப்பட்டுள்ளது.

சினிமாக்கலை பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த லூமியர் சகோதரர்களால் (Lumiere Brothers) 1895ல் உருவாக்கப்பட்ட போதிலும், அது தனித்துவம் மிக்க கலையாக, பன்னிரெண்டு ஆண்டுகளின் பின், அமெரிக்காவில் தான் பரிணமித்தது.

''சினிமா கோட்பாடு'' என்ற நூலில் பேலா பெலஸ் (Bela Balazs;1884-1949) சினிமாவின் பிறப்பு பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

''ஒரு புதிய கலை தங்கள் கண்முன்னாலேயே பிறப்பதைப் பார்க்கும் சந்தர்ப்பம் அழகியல் வல்லுநர்களுக்கும், கலை வரலாற்றாசிரியர்களுக்கும், உளவியலாளர்களுக்கும் வழங்கப்பட்டது. ஒரு கலையின் பிறந்த நாள் நமக்கு தெரியுமென்றால் அது சினிமாவாகத்தான் இருக்கமுடியும். மற்ற கலைகளின் ஆரம்பம் எப்போது என்பது பழமைப் பனிப்படலங்களில் மறைந்து போன ஒன்று. இந்தக் கலைகளின் பிறப்பைச் சொல்லக்கூடிய மாயைகளும், ஏன் எவ்வாறு இந்தக்கலைகள் மட்டும் தோன்றின? மற்றக் கலைகள் ஏன் தோன்றவில்லை? அக்கலைகள் ஏன் எப்படி தங்களை உருவங்களை அடைத்தது? அவை எப்படி மனித குலத்தின் மிக முக்கிய வெளிப்பாடுகளாகத் திகழ்ந்தன போன்ற கேள்விகளுக்கு எந்தவிடையும் அளிக்கவில்லை.... எந்த நிலையான மனித உணர்வு இத்தகைய கலைகளின் பிறப்புக்கு காரணமாக இருந்தது போன்ற கேள்விகளுக்கெல்லாம் நமக்கு விடைதெரியாது. இந்த நிலையில் நமது அறிஞர்களுக்கு ஆதாரமாக இருப்பதெல்லாம் நிரூபணமற்ற கொள்கைகளும், சாதாரண சந்தேகங்களும் ஆகும்.

பல நூற்றாண்டுகளில் நமது சொந்தக் கண்கொண்டு பார்ப்பதற்கான சந்தர்ப்பம் இதுவே முதன் முறை. கலாசார வரலாற்றிலேயே இது ஒரு மிக அரிய சந்தர்ப்பம் ஆகும். இப்புதிய வடிவம், நமது காலகட்டத்தில் நமது சமூகத்தில் தோன்றிய ஒரே ஒரு கலாரீதியான வெளிப்பாடாகும்.''

சினிமா ஒரு தொழில்; ஒரு வியாபாரம். அது பொருளாதாரக் காரணங்களாலேயே உருவாக முடியும். தொழில் நுட்பம், பணபலம் முதலானவையே சினிமாவை நிர்ணயிக்கும் காரணிகளாகின்றன. ஆக, சினிமா தொழில்மயப்படுத்தப்பட்ட முதலாளித்துவ நாகரிகத்திலேயே உருவாகின்றது. ஆனாலும் சர்வதேச அரங்கில் அது ஒரு அழகியல் நுட்பம் மிகுந்த கலையாகவே வெளிக்கொணரப்படுகின்றது. அப்படித்தான் வெளிக்கொணரப்படவும் வேண்டும். ஏனெனில், அது ஒரு 'கலையாக' இருந்தால் மட்டுமே அதனை பிரக்ஞைபூர்வமாய் இரசிக்கவும் ஏற்கவும் முடியும்.

திரைப்படம் 1896ல் இந்திய திரைகளில் மினுக்கமுற்றது. அதற்கடுத்த வருடங்களில் இந்தியாவில் சிறுபடங்கள் இந்தியர்களால் எடுக்கப்பட்டன. **பாபா சாகேப் பால்கேவி**னால் தயாரிக்கப்பட்ட **''ராஜா ஹரிச்சந்திரா''**(1913) படமே இந்தியாவிலேயே இந்தியர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட முதல் முழு நீளக் கதையாகும். இந்தியாவின் முதல் பேசும் படமாக **''ஆலம் ஆரா''** (1931) பம்பாயில் வெளியானது. ஆனால் , சினிமா ஒரு கலை என்பதை இந்தியா 1955ல் தான் தத்துவார்த்தமாய் உணர்ந்து கொண்டது. இவ்வருடத்தில் தான் **சத்யஜித்ரேயின் ''பதேர்பாஞ்சாலி''** வெளியிடப்பட்டது. இதன் பின்னர் தான் சினிமா ஒரு கலையாக இந்தியாவில் பரவலாக அறியப்பட்டது.

தமிழகத்தில் 1916ல் **நடராஜ முதலியார் ''கீசகவதம்''** படத்தை வெளியிட்டார். ஆனால் முதல் தமிழ் பேசும் படம் **''காளிதாஸ்''**(1931) ஆகும். 1960ல் **நீமாய் கோஷினால்** உருவாக்கப்பட்ட **''பாதை தெரியுது பார்''** என்ற படம்தான் கலைத்தரமான முதல் தமிழ்ச் சினிமாப்படம் என்று குறிக்கப்படுகின்றது.

**''தமிழ்த் திரைப்பட வரலாறு''**(1993) என்ற நூலில் **முக்தா எம். சீனிவாசன்** நான்கு காலகட்டமாக தமிழ்த்திரைப்படத்தின் பரிணாம வளர்ச்சியை நோக்குகின்றார். அதனை மையப்படுத்தி, தமிழ்ச் சினிமாவின் பரிணாம வளர்ச்சி நான்கு காலகட்டமாக, இங்கு பிரிக்கப்பட்டு சுருக்கமாக நோக்கப்படுகின்றது.

***1. 1931-1950***

இந்தக் காலகட்டத்திற்குப் பெயர் புராண, இதிகாச மாயா ஜாலக் கதைகள் காலம். (Puranic Mythological and Folklore Period)

காளிதாஸ் (1931), ஹரிச்சந்திரா (1932) பவளக்கொடி (1949) என்று ஏறத்தாழ 450 படங்கள் இவை வெறும் நாடகப்பாணித்தோற்றம் (Melo Dramatic Story) கொண்டவையாக இருந்தன.

***2. 1951-1975***

மிகைப்படுத்தப்பட்ட வளர்ச்சியைக் கொண்ட, நாடகப்பாணித் தோற்றமுள்ள சமூகக் கதைகள் காலம். (Melo Dramatic Story Period)

திகம்பர சாமியார் (1950), சம்சாரம்(1951) டாக்டர் சிவா (1975) என்று ஏறத்தாழ 1,100 படங்கள் இந்த காலத்தில் தயாரிக்கப்பட்டன. இவை கலையாக அல்லாமல், மிகைப்படுத்தப்பட்ட உணர்வுகளைக் கொண்டவையாக அமைந்திருந்தன.

***3. 1976-1985***

இந்தக் காலகட்டத்திற்கு பெயர் யதார்த்தமான மரபு மீறிய கதைகள் காலம். (Partly Realistic, Antisentimental Stories Period)

ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், மூடுபனி, அக்ரகாரத்தில் கழுதை, மெட்டி, கண்சிவந்தால் மண் சிவக்கும், மீண்டும் ஒரு காதல் கதை, பூட்டாத பூட்டுக்கள், தண்ணீர் தண்ணீர், சில நேரங்களில் சில மனிதர்கள், பசி, அழியாத கோலங்கள், உதிரிப்பூக்கள், மூன்றாம் பிறை முதலான கலைத்துவப்படங்கள் உருவான போதிலும், சர்வதேச அளவில் பேசக்கூடிய சாதனைகள் மிகக் குறைவே!

இக்கால கட்டத்திலும் வெறும் சூத்திரப்பாங்கான, கலைத்துவமற்ற திரைப்படங்கள் மூலம் தமிழ்ச் சினிமா ரசிகன் மிகக் கீழ்த்தரமான ரசனை உணர்வுகளைக் கொண்டவனாகவே மாற்றப்பட்டிருந்தான். இதற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாக 'கணையாழி' இதழில் (78,பெப்.01) 'ஞாறி' எழுதிய குறிப்பொன்றைக் காட்டலாம்.

''1978 சென்னையில் நடந்த திரைப்பட விழாவில் வெளிநாட்டுப் படங்களைத் திரையிட்ட ஆறு தியேட்டர்களில் 'ஸ்கார்ட்'' கிழிப்பு காட்சிகளைக் காணாது ஏமாந்த ரசிகர்கள் இருக்கைகளை கிழித்தனர்.''

இதேநேரத்தில் பங்களூரில் உள்ள 'ஹெக்கோடு' என்ற கிராமத்தில் கலைப்படங்கள் (பைசிக்கிள் தீவ், வெல்ட் ஸ்ரோபறிஸ், ரஷமோன், பதேர்பாஞ்சாலி) காட்டப்பட்ட போது ஏழைத்தொழிலாளிகள் அவற்றை உணர்வுபூர்வமாய் ரசித்தனர். தமிழகத்தில் இதன்நிலை தலைகீழாகும்.

***4. 1985 இன்றுவரை***

இந்தக் காலட்டத்திற்குப் பெயர் வன்முறை, பாலுணர்ச்சிக் கதைகள் காலம். (Violence and Sex oriented Stories Period)

மிகைப்படுத்தப்பட்ட நிலையில் ஜோடிக்கப்பட்ட (Co-incidence) என்று சொல்லப்படும் 'காக்காய் உட்காரப் பனம் பழம் விழும்' நிகழ்ச்சிகள் அதிகம் காணப்படும், யதார்த்துக்கு ஒவ்வாத, கலையை மண்ணாங்கட்டியாக்கும் படங்கள் வெளிவந்துள்ளன; வெளிவந்து கொண்டும் இருக்கின்றன.

அதனால்தான் ''சினிமா ரசனை'' (1990) என்ற நூலின் முன்னுரையில் அம்ஷன் குமார் பின்வருமாறு எழுதுகின்றார்.

''நல்ல எடுத்துக் காட்டிற்கும் சீரிய ஆய்வுக்கும் உலகத் தரத்து படங்கள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்னும் கட்டுப்பாடுடன் எழுதும்போது அந்தத்தகுதிக்குரிய படங்களில் ஒன்று கூட தமிழ்ப் படமாக இல்லாதிருப்பதற்கு நான் தமிழன் என்கிற முறையில் வெட்கப்படுவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்?''

தமிழைத் தவிர்ந்த ஏனைய இந்திய மொழிகளில் கலைத்துவமான படங்கள் அதிகளவில் வெளிவருகின்றன. வங்க, மலையாள, கன்னடப்படங்கள் சர்வதேச அளவில் பேசப்படுகின்றன. ஈழத்தில் சிங்கள மொழியில் கலைத்துவ சாதனைகள் இருக்கின்றன. லெஸ்ரர் ஜேம்ஸ் பிரீஸ், மஹகமசேகர, சுனில் ஆரியரட்ன, ரைற்றஸ் தொடவத்த, காமினி பொன்சேகா, தர்மசிறி பண்டாரநாயக்கா, வசந்த ஓபேசேகர, பாராக்கிரம நிரிஎல்ல, தர்மசேன பத்திராஜா, சுமித்திரா பிரீஸ், என்ற நீண்ட பட்டியலுக்குரியவர்கள் கலைப்படங்களைத் தந்துகொண்டிருக்கின்றனர். ஆனால், தமிழில் பாலுமகேந்திரா, மகேந்திரன் என்று ஒரு சிலரைத்தான் சொல்ல முடிகின்றது. இவர்கள் கூட 'முழுமையான' அல்லது 'உண்மையான' கலைஞர்கள் (கலைப்பட இயக்குனர்கள்) அல்ல. மணிரத்தினம் கலைப்படம் பண்ணுவதாக பாசாங்கு செய்துகொண்டிருக்கிறார். அவர் தமிழ்ச்சினிமா உலகில் 'ஹொலிவூட்' பாணியில் ஒரு பிரமிப்பை ஏற்படுத்தினாலும், அவரது படங்களிலும் கலையைவிட, வியாபார உத்திகளே அதிகமாய் ஆதிக்கம் செலுத்துகின்றன.

ஆண்டுதோறும் இந்தியாவில் 800முதல் 900 படங்கள் வெளிவருகின்றன. இவற்றில் 500 முதல் 600 படங்கள் சென்னையில் தயாராகின்றன. இந்தியா முழுக்க மொத்தம் 13,183 திரையங்குகள் உள்ளன. அவற்றில் 56 சதவீத திரையரங்குகள் தென்னகத்தில் உள்ளன.

தமிழகத்தில் 2257 திரையரங்குகள் உள்ளன.

எனவேதான், சினிமாக் கவர்ச்சியை அரசியல் ஆதாயம் பெறக்கூடிய கருவியாக சி. என். அண்ணாதுரை, மு.கருணாநிதி முதலானோர் பயன்படுத்தினார்கள். அதாவது சினிமாவை அரசியல் பிரச்சாரக் கருவியாக்கினார்கள். சினிமா பிரச்சாரம் புரிவது பிழையல்ல. ஆனால், அது கலைப்பிரக்ஞையுடன் இருக்க வேண்டும். டொல் ஷேங்கோ, ஐஸன்ஸ்டீன், புடோவ்கின், சாப்ளின், மிருணாள் சென் ஆகியோரது படங்களில் பிரச்சாரம் கலைப்பண்புகளுடன் தரப்பட்டுள்ளது.

எம். ஜி. ஆர். 42 ஆண்டுகள் திரையுலகில் இருந்து 136 படங்களில் நடித்து சினிமா கவர்ச்சி மூலமாக முதலமைச்சரானார். அவரின் பின், அந்த கவர்ச்சியின் காரணமாக ஜெயலலிதா இன்னும் முதலமைச்சராக இருக்கின்றார். இன்று அந்த இடத்தில் வைக்கப்பட்டு, பரவலாகவும் பரபரப்பாகவும் பேசப்படுபவர் ரஜனிகாந்த்!

தமிழ்ச்சினிமாவின் அரசியல் சூனியத் தன்மையைச்சகிக்கமுடியாமல் நடிகர் கமல்ஹாசன் பின்வருமாறு கூறுகின்றார்; ''ரசிப்புத் தன்மையை ஒவ்வொரு ரசிகனும் மேம்படுத்திக்கொள்ள வேண்டும். ரசிகர்கள் வெறும் விசிலடிச்சான் குஞ்சுகளாக இருக்கக் கூடாது. தனிமனித வழிபாடு கூடாது. யாரையும் தலைவனாக ஏற்று தனிமனிதன் பின் செல்லாதீர்கள். இதை நான் சொல்லும் போதே நண்பர் ரஜனியை குறிப்பிடுகிறேன் என்று நினைக்காதீர்கள்.''

தனிமனிதனை தெய்வீக நிலையாக அல்லது முழுமுதல் ஒன்றாக காட்டமுனைகின்ற தமிழ்ப்படங்கள் ஏராளம். அந்தவகையில் அண்மையில் (1995-தீபாவளிக்கு) வெளிவந்திருக்கும் படம் தான் 'முத்து'.

'முத்து' பட டைரக்டர் கே.எஸ். ரவிக்குமார், 'இது ஒரு ரஜனி படம்' என்று கூற, தமிழகச் சஞ்சிகைகள் இப்படத்தினைப் பற்றி பின்வருமாறு எழுதுகின்றன.

★ ***பிலிமாலயா:***

''அரசியலுக்கு வருவரா? வரமாட்டாரா? இதுதான் இன்று ரஜினி பற்றி தமிழ்நாட்டில் பரவி இருக்கும் கேள்வி. இன்றைய நிலையில் ரஜினியின் ஒவ்வொரு அசைவும் கவனிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு வருகிறது. அப்படி எதையும் ரஜினியிடமிருந்து எதிர்பார்க்கும் பரபரப்பான சூழலில் வந்துள்ள படம்தான் 'முத்து'. எனவே முத்து பற்றி ஒவ்வோர் மனதிலும ஆர்வம் பொங்கியுள்ளது. தவிர்க்க முடியாத விடயம்.

(தீபாவளி சிறப்பதழ்-1995)

★ **இந்திய டுடே:**

''அரசியலுக்கு வருவாரா, மாட்டாரா என்கிற பரபரப்பான கேள்விகளுக்குப்பிறகு வந்திருக்கிற ரஜினியின் முத்து படத்திலும் அந்தக் கேள்வி தொடர்கிறது''

(6-20, நவம்பர் 1995)

★ **ஆனந்தவிகடன்:**

''முத்து'!
பரபரப்பின் உச்சத்தில் வருகிறது.
இந்தத் தீபாவளியின்
பெரிய எண்டர்டெயின்மெண்ட் இது.''

(22-10-1995)

ஒரு சில பைத்தியக்காரத் தனங்களைத் தவிர, இப்படத்தில் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. நீட்சேயின் Superman போல, ரஜினியைக் காட்ட முனைகின்ற நோஞ்சான் தனங்களைத்தான் இப்படத்தில் தரிசிக்க முடிகின்றது.

ஆக, தமிழில் தனிமனிதனை மேன்மைப்படுத்தும், யதார்த்தமற்ற, போலி உணர்ச்சிகளை - செயல்களை வெளிப்படுத்தும் மெய்மையை மறந்து, வியாபார வெற்றியை உறுதிப்படுத்தும் படங்களே வெளிவருகின்றன.

''கொச்சைத்தனம் மிக்க வர்த்தக சூதாடிகள் கையில் சினிமாக்கலை சிக்கியிருக்கும் வரை, நன்மையைக் காட்டிலும் தீமையே அதிகம்'' என்கிற லெனினின் வார்த்தைகள் தமிழகத்தைப் பொறுத்தளவில் நிஜவடிவத்தைப் பெற்றுள்ளன.

தமிழ்ச்சினிமா உலகில் மக்களின் கீழான உணர்வுகளைத்தூண்டி, போதையூட்டி, கனவில் சொர்க்கத்தைக் காட்டும் 'ஏமாற்று வித்தைகள்' தொடர்கின்றன.

எனவே கார்ல்மார்க்ஸ் மதத்தை அபின் என்று கூறியதுபோல, தமிழ்ச்சினிமாவையும் அபின் என்று கூறலாமா? ●

## எங்கே வாழலாம்.

நானொரு பெண்
எங்கே நான் வாழலாம்?

பெண்ணாய் இருப்பதனால்
எனது வாய் மூடப்பட வேண்டும்.
மிகுந்த பெண்மையுடன்
கலாசாரத்தைப் பேணவும் வேண்டும்.
பயங்கர இரவில்
பலாத்காரம் புரிந்தவனின்
கருவையும் சுமக்க வேண்டும்.

எனது நெற்றியில் பொட்டு இருக்கிறது.
நான் தமிழ் பேசுகிறேன்
எனது பிறந்த மண் யாழ்ப்பாணம்!
எந்தக் கணத்திலும் --
கேள்வியெதுவுமின்றி
யாரும் பிடிக்கலாம்.
அடித்து உதைக்கலாம்.
'மனிதக் குண்டு" என்று முத்திரை
- குத்தப்படலாம்.

கொல்லலாம்.
எதுவும் செய்யலாம்!

எனது வாழ்வைத்தேடி
வாழ்வதற்கொரு புகலிடம் தேடி
உலகம் முழுவதும் அலைந்தேன்.
எனது தோல் கறுப்பென
அருவருப்புடன் தெறித்த
அவர்கள் பார்வையில் அறிந்தேன்.
முகமிழந்து தலைகுனிந்தேன்.

எனது முகம் மறைந்து போயிற்று.
எனது வாழ்வு தொலைந்து போனது.
பாலைவனத்திலும்,
உறைபனிக்குள்ளும்,
கோடை வெயிலிலும்
வாழ்வின் ஈரத்தைத் தேடி
இதயம் பலவீனமாகத் துடிக்கிறது.

மொழியைக் கடந்து
இனங்களைக் கடந்து
தேசங்களின் எல்லைகளைக் கடந்து
மனித நேயத்தை ஸ்பரிசிக்கின்ற
சமத்துவ வாழ்வை வாழ
நான் விழைகிறேன்.

எங்கே நான் வாழலாம்?

● ஔவை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மண்புழுக்கள்

ஆங்கிலத்தில்: ஜீன் அரசநாயகம்
தமிழில்: எம்.கே.எம். ஷகீப்



''எயார் போர்ட்''டிலிருந்து காரில் புறப்படுகிறேன். 'மஹாவ' எனும் ஒரு பழக்கப்பட்ட பிரதேசத்தினூடாக கார் என்னைச் சுமந்து செல்கிறது. குருநாகலைக் கடந்த பிரதேசம். இருமருங்கிலும் பச்சையாய் வயல்களும், தென்னந் தோப்புக்களும்...., வீதி நீண்டு வளர்கிறது.

அவ்வப்போது பாதையின் நடுவே ஆடு, மாட்டுக் கூட்டங்கள் குறுக்கறுக்கின்றன. அதற்கு வழிவிடுமாப்போல் 'கார்' மெதுவாகி.. மீண்டும் வேகமாய் ....வீதி நீண்டு வளர்கிறது...

''சூரியன் கொதிக்கிறான். இங்கும் கடும் வெக்கைதான். என்றாலும் 'டோஹா'வில் போல இல்ல. அங்கு இதவிட வெக்கை... கொஞ்ச நேரத்திலேயே உடம்பெல்லாம் தெப்பாகிவிடும். அங்கு நான் வேலை செய்த குசினியிலையோ, இருந்த 'ரூம்'லயோ 'எயார் கண்டிஷன்' இல்ல. அது இல்லாத அந்த இடத்துலதான் என்ட அதிக நாள் கழிஞ்சிச்சு.. நான் அங்கேயிருந்த ஆறுமாதத்திற்கும் எனக்கிட்ட ரெண்டே ரெண்டு உடுப்புத்தான் இருந்திச்சு... ''பொஸ்ஸா மெடம்'' தந்தது....'' ''பகல் முழுக்க வீடெல்லாம் சூடான ஓவன்னை''ப் போல் இருக்கும் ...இரவில் .பரவாயில்லை ...மெதுவான குளிர் இருக்கும்! பாலைவனத்தில் இருக்கிற விசப் பாம்புகள் எல்லாம் பகலில் மணலுக்குள் புதைந்திருக்கும்... நடக்கிறபோது அதற்கு மேல்தான் கால் வைக்க வேண்டிவரும்...குளிர் என்ற படியால் இரவிலும் மறைந்துதான் இருக்கும்.

காரின் வேகம் அதிகரிப்பது போல் என் இதயத்துடிப்பும் மெது மெதுவாய்க் கூடுகிறது."என்னுடன் கூட வருகிறவ சவூதியிலிருந்து வருகிறா...ரெண்டு பேரும் சேர்ந்துதான் செலவுகளைப் பொறுப்பெடுத்திருக்கிறோம்.அவ குருநாகலில் இறங்கவேண்டியவதான்...என்டாலும் என்னை என்ட வீட்டுல பத்திரமாய்ச் சேர்க்கிறதுக்காக கூட வாறா. அவ நிறையச் சாமானங்கள் கொண்டு வந்திருக்கிறா. சொந்தக்காரங்களுக்கெண்டும் வீட்டுக்கெண்டும் விதம் விதமாய் நிறையச் சாமான்கள்... நான் கொஞ்ச நாள் தான் இருந்தபடியால் என்னிடம் அதிக பணமிருக்கயில்ல. நான் என்ட அம்மாவுக்கெண்டு ஒரெயொரு சாரிதான் வாங்கினேன். அதுவும் 750 ரியால் சரியான வில. கொழும்புக்கு வந்துதான் லொக்குமாத்தயாவுக்கு ட்ரவுசரும், சேர்ட்டும் வாங்கினேன். வெளிநாட்டுல நீண்ட நாளைக்கு என்னால இருந்திருக்க முடிஞ்சா நானும் நிறைய சாமான்கள் கொண்டு வந்திருப்பன்... இன்னொருக்கா போகவேணும்.''

''நான் என்ட இந்த நாட்டுப்புறச் சூழலத்துறந்து... இருந்த சுதந்திரம், ஓய்வு எல்லாத்தையும் இழந்திட்டேன்''

சில இடங்களில் நெல் அறுவடை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது... வெள்ளியாய் மின்னிக்கொண்டு சில கால்வாய்கள்.... குளத்தில் பூத்திருக்கும் தாமரைகள்... 'பிலா' மரத்தில் உட்கார்ந்திருக்கும் மனிதர்கள்.... வேலை முடிந்துவிட்டது. அறுவடையும் முடிந்துவிட்டது. முதலாளிமாரின் தட்டையான வீடுகள் நெல்லினால் நிரம்பியிருக்கும்... தோட்டத்தில் பறிக்கப்பட்டவைகள் எல்லாம் வீட்டை நிரப்பியிருக்கும்.... பூசனிக்காய் எல்லாம் 'ரோட்' ஓரத்தில் குவிந்து கிடக்கும்.

.....''டோஹாவில் நான் மரக்கறியே சாப்பிடயில்ல. இறைச்சியும், சோறும் தான். 'பொஸ்ஸா மெடம்' தான் சமைப்பா.. இறைச்சியை துண்டு துண்டாக அரிந்து அரிசியோட போட்டு அவிப்பா.. ஏலக்கா, கருவாப்பட்டயோட இன்னும் என்னவெல்லாமோ போட்டு அவிப்பா.. ஆறு மாதமா என் நாக்குல உறைப்பே படயில்ல. மஹாவெவயிலிருந்து வாற மீன் சாப்பிடுறதுக்கு சரியான ஆசையா இருக்கு... ''திலபி'', ''லூலா'' மீன கொச்சிக்காவும், தேங்காப் பாலும் ஊத்தி சமைச்சா.... நல்லாயிருக்கும். லொக்கு மாத்தையாட தோட்டத்தில நிறைய தேங்கா இருக்கு.. சமையலுக்குத் தேவையான தேங்காயை அங்கிருந்துதான் திருவிக் கொண்டு வருவன்....''

கடைகளில் கோழிக்கூட்டு, புளி வாழைப்பழமும் இன்னும் சில பழங்களும் இருக்கின்றன.

''எனக்கு வீட்டுத் தோட்டத்திலுள்ள பழங்களின் நினைப்பு வருகுது. 'சீசன்' காலத்துல பழங்களெல்லாம் மரத்த மறைச்சிட்டு நெறஞ்சிருக்கும்.. கிளிகளுக்கு வாசிதான்."

''டோஹாவில அப்பிளும், 'கிரேப்ஸ்''ஸும்தான் நிறைய... நான் இருந்த வீட்டுக்காரங்கள் சரியான நப்பி... சொந்தக்காராக்கள்ட வீட்லேர்ந்து ''பொஸ்ஸா சேரு''க்கும். 'பொஸ்ஸா மெடத்துக்கும், புள்ளைகளுக்கும் நிறைய பழங்கள் வரும். ஆனா.. எனக்கு ஒன்டு கூட தரமாட்டாங்க ....அங்க ஒரு அடிமைமாதிரித்தான் இருந்தன்... வீட்டில அஞ்சு புள்ளைகள், 'பொஸ்ஸா மெடம்' டீச்சரா வேலை செய்யிறா.. மூத்தமகள் 'மெனூரைத் தவிர மத்தபுள்ளைகளெல்லாம் நல்லம். 'மெனூரா'ல்தான் என்னால அங்கிருக்க முடியல.. என்ட வாழ்க்கையை சரியாகக் கஷ்டப்படுத்திப் போட்டா''

இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் 'மஹாவை'யை அடைந்துவிடுவேன். என்னால் குன்றிலுள்ள யாபவ்வ தேவாலயத்தின் கோபுர உச்சியை பார்க்க முடிகிறது. பறவைகள் வானத்தில் வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. குன்றின் கீழ்ப்பகுதியில் அடர்த்தியான மரங்களும்... ஓவியங்களும் சிற்பங்களும் கொண்ட குகைகள் இருக்கின்றன.

வாழ்க்கை இங்கே இன்னமும் மாறவில்லை. இந்தப்'பன்சலை'யிலும் கூடத்தான். 'மல்பூஜா'வுக்காக மல்லிகைப் பூக்களையும், அரலிப் பூக்களையும் பறிக்க வேண்டும். நான் பாதுகாப்பாய் வந்து சேர்ந்ததற்காக பூஜிக்கவேணும். போயா நாட்களில் ஊர்மக்கள் 'பன' கேட்பதற்காக ஒன்று கூடுவார்கள்.

''நான் டோஹா''வில ஒரு வீட்டுக்கைதிமாதிரித்தான் இருந்தன். அங்க வெள்ளிக்கிழமைதான் லீவு நாள். ஆனால் எனக்கு அந்த நாள்ல கூட லீவில்ல. அதனால் எனக்கு வெளியால போகவோ.. என்ட நாட்டுலேர்ந்து வேலைக்கு வந்த மத்தப் பொம்புளைகள சந்திக்கவோ சந்தர்ப்பம் கிடைக்கல்ல. தனிமை சரியான கஷ்டமாயிருந்திச்சு. என்ட மொழி பேசி என்னோட கனவுகளை பரிமாற யாருமே இருக்கேல்ல.. அவங்க என்ன நல்லா பாத்தாங்க, பாதுகாத்தாங்கதான்.. ஆனாலும் எத்தின நாளைக்குத்தான் ஜன்னலைக் கூட திறக்கவிடாத வீட்டுக்குள்ள அடைபட்டுக்கிடப்பது?''

ஆ... தனிமையிலிருந்து விடுபட்டுவிட்டேன்.

''அவங்களுக்கு பாலைவனத்துக்குப் போய் சந்தோஷமா சமைச்சு சாப்பிடறதுதான் பெரிய சந்தோஷம்.. பேரீச்சம் மரத்துக்குக் கீழேர்ந்து சமைச்சு ஓடியாடிக்கழிக்கிறதில அவங்களுக்கு விருப்பம் அதிகம். ஆனா எனக்கு பாலைவனத்தப் பிடிக்கிறதில்ல. பாலைவனம் மெல்லிய வெள்ளை மண்ணாத் தெரியும். சின்னச் சின்ன மரங்கள் தான் இருக்கும். ரோட்டுமில்ல. வழியுமில்ல.. கார் புதைஞ்சு நெளிஞ்சு தான் ஓடும். எனக்கு அது பெரிய தலையிடியா இருக்கும்.. வீட்டுல இருந்தாலும் 'மெனூரு'ம் தங்கிவிடுவாள். அவவுக்கு என்ன துன்புறுத்திறதுலதான் ஆர்வம். வீட்ல பெரியாக்கள் யாருமில்லாட்டி சின்னப்புள்ளைய அது இது செஞ்சு அழவைப்பா.. பிறகு அவங்க வந்த உடன நான் தான் அழவைச்சதா முறையிடுவா.. ஆனா எனக்கு அந்தப் புள்ளையில சரியான விருப்பம். அதத்தூக்கி வைச்சு' கொஞ்சுறதுக்கு எனக்கு சரியான ஆசை. ஆனா 'மெனூர்' விடமாட்டா. அவவுக்கு சரியான பொறாம. அவுக்கு மூளையில ஏ்தோ சரியில்ல போல.. எப்போதும் பிரச்சினைப்படுவா. ஸ்கூல்லயும் அவள 'கொன்ட்ரோல்' பண்ண முடியாதெண்டு வீட்டுக்கு அடிக்கடி டெலிபோன் வரும். அவளாளதான் அந்த வீட்ட, எந்த வேலைக்காரியும் ஒழுங்கா நிற்கிறதில்ல...''

''அவ வித விதமான முறைகள்ல என்னைத் துன்புறுத்துவா. ஒரு நாள் 'பொஸ்ஸா மெடம்' எனக்குப் போட்டு வைச்சிருந்த சோத்தில தண்ணிய ஊத்தி வைச்சிருந்தா.. நான் அன்டைக்கு பசியோடதான் இருந்தன். அவட தாய் அவளுக்கு அடிக்கிறவதான், ஆனாலும் அவ மாறவேயில்ல. டி.வி பார்க்கிற நேரத்தில நானும் சேர்ந்து பார்க்கப்போனா உடன டிவியை 'ஓப்'பண்ணிடுவா. நான் அங்க நிலத்திலதான் படுத்தன், நான் படுக்கிற இடத்துக்கிட்ட உள்ள ஜன்னலையோ, கதவையோ திறக்கிறதென்டா அவ என்ன தட்டி மிதிச்சுக் கொண்டுதான் போவா. அவள்ட மனிதாபிமானமே இல்ல...''

''அவ நீண்ட நேரத்துக்குப் படுக்கவே மாட்டா. விடிய ரெண்டு மணி வரையில 'லைட்'டப் போட்டுக்கொண்டு என்னத்தூங்கவிடாம பண்ணுவா.. அதப்பத்தியும் யாரும் கணக்கெடுக்கயில்ல. அவள யாராலயும் கட்டுப்படுத்த முடியல. அவள் ஒரு மாதிரியான ஒய்வழிச்சல்காரியாக இருந்தா'

'அங்க குமராகின வயசிலயே அவங்க கலியாணம் முடிச்சிடுவாங்க. நல்லா கொழுத்து வடிவாவுமிருப்பாங்க. புள்ளைகள் பொறந்ததுக்குப் பொறகும் ஸ்கூலுக்குப் போவாங்க. மெனூருக்கு வீட்டுக்கு கார் கழுவ வாற இந்தியன்கள போட்டோ பிடிக்கிறதில விருப்பம். இளம் பொம்பளைகள் முகத்துக்கு திரை போட்டிருப்பாங்க. யாரையாவது வேலைக்கார ஆட்களை கவரோனும் என்டா அதநீக்கிடுவாங்க.... நாக்கையெல்லாம் காட்டுவாங்க. சின்ன வயசுல கல்யாண முடிக்கிறதாலயோ என்னவோ அவங்க ஒரு வகையா இருக்கிறாங்க''!

''நிறயப் பணம் சம்பாதிக்கிறதுக்காகத்தான் நான் 'டோஹா' போனேன். எனக்கு மாசத்துக்கு மூவாயிரம் ரூபா தந்தாங்க. அங்க இருந்திருந்தா எனக்கு நிறையப்பணம் சம்பாதிச்சிருக்கலாம். என்ட அம்மா, அப்பாவுக்கு உதவுறத்துக்கு பணம்தான் தேவை. 'கொலபிஸ்ஸா'வில இருக்கிற எங்கட வீடு சின்னது. ரெண்டு ரூம்தான் இருக்கு. நிலத்துக்கு சீமெந்து போட்டு, கூரைக்கு ஓடும் போடோனும் என்டு விரும்பினன் அம்மா அப்பாவுக்கு உதவுறதுக்கும் நான் மட்டும்தான் இருக்கிறன். என்ட சின்னத் தங்கச்சி 'இங்கிலீஷ்'கிளாஸுக்கும் 'டான்ஸ் கிளாஸுக்கும் போனா. இங்கிலீஷ் கிளாசுக்கான செலவ நான் தான் கொடுத்தன். அவ 'டான்ஸ் கிளாஸ் போறது எனக்கு விருப்பமில்ல. நானென்றால் ஸ்கூலுக்கே போனதில்ல. ஆனா 'லொக்கு மாத்தயாட' வேலைக்கு போன போது அவர் படிக்கச் சொல்லி கட்டாயப்படுத்தினார். சிங்களம் படிச்சன் எனக்கு இப்ப சிங்களம் எழுதவும் வாசிக்கவும், தெரியும். இங்கிலிஷும் கொஞ்சம் கதைப்பன் 'டோஹா' வில் இருக்கக்குள்ள இங்கிலிஷ் மிச்சம் உதவினிச்சு. ஆரம்பத்தில எப்படி பயமாயிருந்திச்சு தெரியுமா? நாங்க மொதல்ல பஹ்றைனுக்குத்தான் போனோம். ஏஜென்ஸிக்காரன் எங்களுக்கு சாப்பிட பானும், பருப்பும், டின்மீன் கரியும்தான் தந்தான். ஒவ்வொரு இடங்களுக்குப் போறதுக்காக 'ஹவுஸ்மெய்ட்ஸ்' எல்லாம் காத்துக்கொண்டிருந்தாங்க... பொஸ்ஸா, சேரும் மெடமும் வந்துதான் ஆட்கள தெரிவாங்க. இருந்த இருவது பேர்ல என்ன தெரிவுசெஞ்சாங்க. 'பொஸ்ஸா மெடம் என்ட கையப்' பிடிச்சபோது நான் பயந்திட்டன். அவ கொழுத்து உயரமா இருந்தா. உடம்பு முழுக்க கறுப்பு பர்தா அணிஞ்சிருந்தா. நான் அவட பிடியில இருந்து விடுபட ''ட்ரை''பண்ணியதப் பார்த்து சிரிச்சா. பிறகு முகத்துல இருந்த துணியை எடுத்தா.. அழகான, அமைதியான முகம். பிறகு அவங்க 'டோஹா'க்குப் போய்ட்டாங்க. என்ட விசா தயாரான பிறகுதான் நான் அங்கு போகவேணும். அவங்க வந்து என்னைக் கூட்டிப்போகங்காட்டிலும் எயார் போட்டிலதான் மூணுநாளா தங்கவேண்டியிருந்தது. தனிமையா, கைவிடப்பட்டமாதிரி இருந்தது. நான் உடனே ஊருக்குப் போகவே விரும்பினன். ஆனால், எயார் போட்டில் வேலைசெய்கிற எங்கட நாட்டு முஸ்லிம் பொடியன் ஆறுதல் சொன்னான். ''அக்கா.. இனிமே நீங்க கஷ்டங்கள பொறுத்துத்தான் ஆகோனும்...''

அவன் டீயும், பானும் கொண்டு தந்தான்.

இரவில தனியப்படுக்கப் பயமாயிருந்தது.

என்ட உடுப்பு குழம்பிக் களைஞ்சிருந்தது. 'சாரி' இடுப்பு வரை உயர்ந்திருந்தது. பொலிஸ்காரன் கதவத்திறந்து பார்த்துமிருப்பான்.... எப்படியோ கடைசியில் 'பொஸ்ஸா சேர்' மட்டும் வந்து சிரிச்சிட்டு சொன்னார்...'' பொஸ்ஸா மெடம் ''வேலையாக வெளிய போயிருக்கா.. நீ என்னோட வா..''

''வீட்ட போனபோது பயமா தனிமையா.. ஏதோ ஒரு மாதிரி இருந்திச்சு. வீட்டுக்காரங்க என்ல இரக்கமா இருந்தாலும் என்னப் பத்தி என்ட வசதி பற்றி நினைக்க மறந்துருவாங்க. இப்படித்தான் மூணு நாளா டீ இல்லாம இருந்தன். வீட்ல சீனியும் மாவும் இல்லயென்டு ''பொஸ்ஸா மெடத்'' திட்ட சொன்னன். அவவுமோ வேறு யாருமோ அதக் கணக்கெடுக்கயில்ல. ஒரு நாள் காலையில, உடுப்புக் கழுவக்குள்ள மயக்கமா இருந்திச்சு. ஓரமா... தரையில தலையக் குனிஞ்சிட்டு இருந்தன். அப்பதான் 'பொஸ்ஸா மெடம்' டீயை ஞாபகப்படுத்திக் கொண்டு வந்து தந்துவிட்டுச் சொன்னா..'' நீ மூணு நாளா டீ குடிக்கயில்லத்தானே அதான் மயக்கம்.. இனி அப்படியிருக்காதே கெதியில செத்துப் போயிடுவ.''

ஒரு 'கப்', ''டீ'' கூடக் கிடைக்காத வாழ்க்கையில் என்ன பெறுமதி இருக்கிறது? எனக்காக அங்கு என்னதான் இருந்தது? பணம் கிடைத்ததும் என்ன சந்தோஷத்தைத்தான் பெற்றேன்? கணக்கிலெடுக்காத புதியவர்களுடன் வாழ்வதில் என்ன அர்த்தம்? இங்கு வருகிறவர்களெல்லாம் எப்படியாகிறார்கள்? சிலருக்கு பைத்தியம் பிடிக்கிறது. சிலர் தற்கொலை செய்கிறார்கள். சிலர் கொலை செய்யப்படுகிறார்கள். இப்படி என்னவெல்லாமோ இங்கு நடக்கிறது. இங்கிருந்து ஊர் போனால் கணவன் மார்கள் வேறு பெண்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கேயும் போய் தனிமைதான் வாட்டுகிறது. இந்தத் தனிமை அவர்களையும் வேறு ஆண்களைத் தேடிப்போகவல்லவா செய்கிறது.

'' 'அபா'வும் திரும்பி வந்துட்டா. அவ இருக்கிற வீட்ல கஷ்டமில்ல. வேலை கொஞ்சம்தான், அவக்கு சரியான ''போர்'' 'புறாக் கூடு' மாதிரித்தான் அவக்கு, அந்த வீடு அந்த வீட்டுக்கு நிறைய பழங்கள் கொண்டு வருவாங்க.புள்ளைகள் 'கிரேப்ஸ்' ஸத்தான் நிலத்தில உருட்டி விளையாடுவாங்க. 'அபா'ட அக்காவும் இங்கதான் இருந்தவ. இப்ப போயிட்டா.. சேர்த்த காசில மருந்துக்கட போட்றதுக்கு அவக்கு விருப்பமாம். அவக்கு அரபு நல்லா தெரியும். என்ன இருந்தாலும் ஒரு பொம்புளைக்கு தன்ட புள்ளைகள, புருஷன, குடும்பத்த பிரியுறது கஷ்டமானதுதானே.. இங்க காலநிலயும் வித்தியாசம். சாப்பாடும் புதிசு.....''

இன்னும் சில வருடங்களில் எனக்குத் திருமணம் நடக்கலாம். நடந்தாலும் அதன்மூலம் என்ன பிரயோசனங்கள் எனக்குக் கிடைக்குமென்பது தெரியாமலிருக்கிறது. இந்த நாட்களில் ஆண்களெல்லாம் பணத்தைத்தான் விரும்புகிறார்கள்...

'மஹாவ'யிலும் எத்தனை மாற்றங்கள்! பழைய வீடுகள் குடிசைகள் எல்லாம் புது வடிவம் பெறுகின்றன.

களிமண்ணும் ஓலையும், கம்புகளும் போய் சுவரும் ஓடுமாய் புதிய வீடுகள். காட்டுக் கம்புகளால் செய்த வேலிகளின் இடத்தில் கல்மதிலும்.. ''கேட்டு''மாய்! ஊரின் இறந்த காலம் வித்தியாசமாயிருந்தது.

லொக்கு மாத்தையாவின் சகோதரி நிறைய விடயங்களை ஞாபகப்படுத்துவாள்.

பெரிய, வட்டமான வன்னிக் காட்டுவாசிகள் சாப்பிடும் குரக்கன் ரொட்டி.

மான்களும், மரைகளும், சிறுத்தைகளும் உலவும் காடு..'' தோட்டத்துக்கு இரவில் வரும் 'தலகொயாஸ்''கள் காட்டுக் கொக்குகள். அவளை பயமுறுத்துகிற நரிகள்.. இப்படி நிறைய்ச் சொல்லுவாள்.

கடைசியாக அவள் வந்திருந்த போதும் பல விடயங்கள் சொன்னாள். தனது சகோதரனின் வாழ்விலும் மாற்றங்கள் வரும் அவரால் இப்போது இந்தப் பெரிய இடத்தைப் பார்த்து நடத்தமுடியாது, அவர் இங்கு நீண்டநாளைக்கு இருக்கமாட்டார்...'' என்றெல்லாம் சொன்னாள்.

''ஆர்தர் மாத்தையா அப்படியல்ல. அவர்ட எவ்வளவு தான் பணமிருந்தும் மனைவியோடு வெளிநாட்டுல போய் இருக்கிறத விட இங்கு தனிய இருக்கிறதுதான் அவருக்கு விருப்பம். அவர்ட தென்னந்தோட்டம் சிலாபத்தில் இருக்குது. லொகுமாத்தையாவும் தன்ட சொத்துல அதிகமானத்த புள்ளைகளுக்கு பிரிச்சு வைச்சிட்டார். கெதியில் இந்த வீடு, சொத்தெல்லாம் புதிய ஆக்கள்ட கைக்கு மாறிடும். அப்ப நானும் வேற இடம் பார்க்க வேண்டிவரும். எந்த இடமும் இத மாதிரி இருக்காது. இங்க என்ன ஒரு மனிசனா நடத்தினாங்க. இதவிட்டு போகவந்தாலும் என்ன வெறுங்கையோட அனுப்ப மாட்டாங்க...''

கார் கேட்டருகே நிற்கிறது. நான் 'கேட்'டைத்திறந்து காரை உள்ளே நுழைய விடுகிறேன். லொகு மாத்தையா சாய்மாணக்கதிரையில் சாய்ந்து கொண்டு புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கிறார்.

''ஆ... நந்தா .... வந்துட்டியா...' புன்னகையுடன் கேட்கிறார்.

நான் உள்ளே நுழைந்து கதிரையில் அமர்கிறேன். ஓர் ஆனந்த ஆடம்பர உணர்வு என்னில் படர்கிறது. என் வாழ்வில் என்றுமே கிடைத்திராத சந்தோஷ வெள்ளம். இது வர்ணிக்க முடியாத சந்தோஷம். ஆறு மாதமாக இருப்பதற்கு ஒரு கதிரை கிடைக்கவில்லை. வெறும் நிலமும் சாய்ந்து கொள்ள சுவரும்தான் எனக்கிருந்தன. இந்தக் கதிரையில் அமர்கிற போது அந்த நாட்டுக்கு இனித் திரும்பிப் போகக் கூடாது என உணர்கிறேன்.

இந்தத் தனிமை ... சந்தோஷம்....

இது மட்டுமே எனக்குப் போதும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# டானியலும் சாதீயமும்

## டானியல் நினைவரங்கக் குறிப்புகள்

புதிய சிந்தனை கலைஇலக்கிய பேரவையினரும், தேசிய கலை இலக்கிய பேரவையினரும் இணைந்து அமரர் கே. டானியலின் நினைவரங்கு என்ற நிகழ்வை ஹட்டன் சமூக நல மண்டபத்தில் நடாத்தினர்.

செல்வி பெற்றீசியா அந்தனி என்பவரால் வரையப்பட்ட டானியலின் உருவப்படத்தை ந. ரவீந்திரன் திறந்து வைத்ததோடு, ஆரம்பித்த இந்நிகழ்ச்சியை லெனின் மதிவாணம் தலைமைதாங்கினார். அவர் தமதுரையில் ''சாதிய ரீதியாக தாழ்த்தப்பட்டு சுரண்டல், வறுமை, போன்ற ஒடுக்குமுறைகளுக்கு உள்ளானவர்களின் உணர்வுகளை வெளிக்கொணரவும், அவ் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக இயக்க ரீதியாக, ஒன்றிணைந்து போராட முனைவதும் தலித் இலக்கியத்தினுடைய சிறப்பு அம்சமாகும். இந்த தலித் இலக்கியபோராட்டமானது சகல இடதுசாரி ஜனநாயக சக்திகளையும் ஐக்கியப்படுத்தி, சாதி திமிர் கொண்டவர்களுக்கும், சொத்துடையவர்களுக்கும் எதிரான ஒரு போராட்டமாகவே அமையவேண்டும். இந்தத் தலித் இலக்கிய கோட்பாடானது வர்க்க சிந்தனையிலிருந்து பிரித்து எடுக்கப்படுமாயின் அது எதிர்ப் புரட்சி தனமாகவே அமையும்.'' என்றார். அத்துடன் இன்றைய தலித் இலக்கியக் கோட்பாடு டாக்டர் அம்பேத்காரின் கோட்பாட்டை தழுவி இருப்பதுடன் பலவீனத்தையும், முற்போக்கு சிந்தனையுள்ள உயர் சாதியினரையும், முற்போக்கு சிந்தனையுள்ள உயர் சாதியினரையும் இக்கோட்பாடு போராட்டத்தில் இணைக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டி, டானியலின் படைப்புகளில் சாதியத்துக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் வர்க்க பார்வைக்கு வழங்கப்படாததையும் எடுத்துக் காட்டினார். அத்துடன் டானியலின் படைப்புகளும் அவர் பற்றிய ஆய்வும் சிங்களம், ஆங்கில மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து அந்தனி ஜீவா அவர்கள் அறிமுக உரையை நிகழ்த்தினார். டானியல் ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து தோற்றம் பெற்றவர். அவர் ஒடுக்கு முறையை உள்ளும், புறமும் கண்டதுடன், அந்த ஒடுக்கு முறைகளுக்கு எதிராக கலை இலக்கிய போராளியாக போராடியவர். அவர் வெறுமனே கலைஇலக்கிய வாதியாக மட்டுமல்லாமல் தலித் இயக்கங்களிலும் ஒரு பங்காளியாக இருந்தவா.

இந்த வகையில் அந்தனி ஜீவா அவர்களின் உரை டானியல் பற்றிய பல்வேறு தகவல்களை வெளிக்கொணர்ந்த அதே சந்தர்ப்பத்தில், டானியல் பங்குபற்றிய இயக்கங்களையும், அத்துடன் 1964ஆம் ஆண்டு குருசேவ் தலைமையிலான நவீன திரிபு வாதத்தை எதிர்த்து ஒரு புரட்சிகர அணியாக சீன தரப்பு விளங்கியது. இதில் டானியல் சீன தரப்பை ஏற்றுக் கொண்டது ஒரு கோட்பாட்டுரீதியான தெளிவை வெளிப்படுத்துகின்றது. இக்காலகட்டத்தில் தீண்டாமையை எதிர்த்து வெகுஜன இயக்கம் போன்றன போராட்ட முனைப்பு மிக்கதாகக் காணப்பட்டன. இக்கால சமுதாய பகைப்புலத்திலிருந்து எழுச்சி பெற்றவரே டானியல். இவ்விடயங்களையும் அந்தனி ஜீவா சுட்டிக்காட்டியிருப்பாராயின் சிறப்பாக இருந்திருக்கும்.

டானியலின் தலித்தியமும் மார்க்சியமும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய ந. ரவீந்திரன் நிலப்பிரபுத்துவம் என்பது சில பொதுவான அடிப்படைகளைக் கொண்டிருக்கின்ற அதே சந்தர்ப்பத்தில், மாறுபட்ட சூழ்நிலைக்கு ஏற்ப சில தனித்துவங்களையும் உள்வாங்கியிருக்கும். இந்த வகையில் யாழ்ப்பாண சமூக அமைப்பானது கிடுகு வேலி கலாசாரத்தைப் போன்று மூடிய கலாசாரத்தை கொண்டுள்ளது. இங்கு சாதி அமைப்பு மிக இறுக்கமாகப் பேணப்பட்டதுடன் பொருளாதார முக்கியத்துவம் பெற்றவர்களாக வேளாள சாதியினரே காணப்பட்டனர். இந்தப் பின்னணியிலிருந்து உருவாக்கம் அடைந்த டானியல் அடக்கி ஒடுக்கப்' பட்டு தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்ததில் முக்கியத்துவம் உடையவராக காணப்படுகின்றார். அவர் சாதியத்திற்கு அளித்த முக்கியத்துவம் வர்க்க சிந்தனைக்கு அளிக்கவில்லை. அத்துடன் பெண் பாத்திரங்களை சாதிய நோக்கில் வஞ்சக பார்வைக்கு உட்படுத்திக் கொள்கின்றார். இது டானியல் பற்றிய புற நிலைப்பட்ட ஆய்வாகும், என்றார்.

இன்று டானியல் தொடர்பாக வெளிவந்த ஆய்வுகளில் காணப்படுகின்ற குளறுபடியான அம்சம் அவரது மார்க்சிய சிந்தனைப் பற்றியதேயாகும். டானியல் தன்னை மார்க்சிய சிந்தனையாளராக பிரகடனப்படுத்திக் கொண்டாலும், அவரது படைப்புகளில் சாதியத்திற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் வர்க்கப்பார்வைக்கு அளிக்கப்படவில்லை என்பது சமூகவியல் சார்ந்த ஆய்வாகும்.

டானியலின் நாவல்கள் என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்த சற்குருநாதன் டானியலின் சில நாவல்களை உதாரணம் காட்டி பேசினார். குறிப்பாக சற்குருநாதனின் ஆய்வு டானியலின் கோட்பாடு தொடர்பாக அவரால் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட முன்னுரைகளை ஆதாரமாகக் கொண்டே அமைந்திருந்தது. இவ்விடயத்தில் கவனிக்க வேண்டிய ஒன்று ஒரு படைப்பாளி வரித்துக்கொண்ட அவரது உலக நோக்கை அவரது படைப்புக்களில் எந்தளவில் உள்வாங்கியுள்ளார் என்பதை அவரது படைப்புகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்த பின்னர், அவரது உலக நோக்கு பற்றிய விமர்சனத்துக்கு வருவது சிறப்பானது. இவ்விடயத்தில் சற்குருநாதனின் ஆய்வு மேற்குறிப்பிட்ட அடிப்படையில் அமையாதது துரதிர்ஷ்டமே. சற்குருநாதன் குறிப்பிட்டது போன்று டானியலின் நாவல்களில் பேச்சு வழக்கு சிறப்பாக கையாளப்பட்டுள்ளது என்பது ஏற்புடையதே. ஆனால் மலையக பேச்சு வழக்கை உபயோகிக்கும் சந்தர்ப்பங்களிலும், சிங்களவர்கள் தமிழை உச்சரிக்கும் சந்தர்ப்பங்களிலும், சில இடங்களில் யாழ்ப்பாண பேச்சு வழக்கையும் சரியாக உபயோகிக்காமையும் டானியலின் நாவல்களில் இடையிடையே காணப்படுகின்றன, இவற்றை க்ட்டுரையாளர் சுட்டிக் காட்ட தவறிவிட்டார்.

மிக முக்கியமாக இன்றைய யாழ்ப்பாண இயக்கங்களின் பலவீனமான போக்கிற்கு டானியலின் படைப்புகளும் ஒரு காரணம் என்று எவ்வித ஆதாரமுமின்றி கூறினார். இக்கருத்தை எந்த அடிப்படையில் கூறினார் என்பது தெரியாது. அந்தனி ஜீவா அவர்கள் இவ்விடயத்தை சற்று விளக்குமாறு கேட்ட போதும் கட்டுரையாளர் எவ்வித தெளிவான பதிலையும் வழங்கவில்லை.

சாதியத்தை வர்க்கக் கண்ணோட்டத்துடன் காணாமையினால், சமூக விடுதலை பலவீனப்படுத்தப்பட்டு தனிநபர் பயங்கரவாதத்திற்கும், குழு தீவிரவாத்ததிற்கும் இட்டுச் செல்லக்கூடிய அபாய நிலை உண்டு. இது சாதியத்தின் தீவிர தன்மையின் வெளிப்பாடாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு கட்டுரையாளர் குறிப்பிட்டாரோ என்னவோ, அது தொடர்பான சரியான விளக்கம் அளிக்கவில்லை.

தேசிய இன ஒடுக்கு முறையை பொறுத்தவரையில் யாழ்ப்பாண இடதுசாரிகளின் நிலைப்பாட்டிலிருந்து ஒரு முரண்பட்ட கருத்தினையே அவரது படைப்புகளில் காண முடிகின்றது. பிரிவினையை ஒரு தீர்வாக ஏற்க மறுக்கும் இடதுசாரிகள் சுயநிர்ணய உரிமை, தேசிய இன ஒடுக்குதலுக்கு எதிரான போராட்டம் என்பனவற்றை முன்வைக்கின்றனர். டானியலின் படைப்புகள் சாதியத்தை பிரதான முரண்பாடாக காட்டியளவு மேற்குறிப்பிட்ட விடயங்களை காட்டத் தவறிவிட்டன என்பதையும் கட்டுரையாளர்கள் தெளிவுபடுத்தி இருக்க வேண்டியது அவசியம்.

**எம்.எஸ். இங்கர்சால்.**

---




## வடிவேலு வாத்தியாரை கண்டு பிடித்த மர்மம்!

தினகரன் ஜனவரி மாதக் கடைசியில் ஹட்டனில் கலைவிழா ஒன்றை நடாத்தியிருந்தது.விழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக வடிவேலு வாத்தியாரைக் கண்டுபிடிக்கும் போட்டியில் தன்னுடைய அபிமான வாசகர்களை ஈடுபடுத்தியிருந்தது தினகரன். காலையிலிருந்து இரவு வரை தினகரன் அபிமானிகள், கையில் தினகரனோடு வடிவேலு வாத்தியாரைத் தேடி கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். இரவு 10.50 மணிக்கு கிரிஷாந்தன் என்ற இளைஞன் வடிவேலு வாத்தியாரை லபக் என்று கண்டுபிடித்து விட்டான். தங்க நாணயமும் அந்த இளைஞனுக்குத் தான். சரி, தினகரன் பத்திரிகையாளரின் கணக்குப்படி முப்பத்தையாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்த இடத்திலே,காலையிலிருந்து இரவு வரை தினகரன் அபிமானிகள் தினகரனைக் கையில் வைத்துக்கொண்டு அலைந்த போதும் பிடிபடாத வடிவேலு வாத்தியாரை இந்தக் கிரிஷாந்தன் என்ற இளைஞன் எப்படி லபக் என்று கண்டுபிடித்தான். உடப்புசல்லாவ கிர்லீஸ் தோட்டத்தைச் சேர்ந்த இந்த இளைஞன் தமிழை ஓரளவு பேசக்கூடியவன். ஆனால் எழுதவோ வாசிக்கவோ தெரியாதவன். சிங்கள மொழி மூலம் கல்வி கற்றவன்.அந்தக் கிரிஷாந்தன் வடிவேலு வாத்தியாரைக் கண்டுபிடித்த கதை இது தான்:

கிரிஷாந்தனின் காதலி சாந்தினி சின்னையா. மோகன் பிரேம்குமார் என்பவர்,. லேக்ஹவுஸில் Terminal Operator ஆகப் பணியாற்றுபவர். சாந்தினி இவரின் தங்கை. சாந்தினிக்கும் கிரிஷாந்தனுக்கும் இவ்வருடத்தில் திருமணம் நடக்கவுள்ளது. இந்த உறவு முறை கொண்ட பிரேம்குமாரே கிரிஷாந்தனுக்கு வடிவேலு வாத்தியாரைக் காட்டிக்கொடுத்து உதவியுள்ளார் என்பது தெரிகிறது.

''கைச்சாத்திடப்பட்ட தினகரன் வாத்தியார் கையிலும், விஷேட இலக்கமிடப்பட்ட தினகரன் வாத்தியாரைக்கண்டு பிடிப்பவர் கையிலும் இருக்க வேண்டும் என்பது போட்டியின் பொதுவிதி''யான போது தமிழ் வாசிக்கத் தெரியாத கிரிஷாந்தன் ஏன் தினகரன் வாங்கினார்? தங்க நாணயத்தைப் பெறவும் அந்த தங்க நாணயத்தை காதலிக்கு கொடுக்கவும், அதை தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரித்து மகிழவும் அல்லவா? போட்டிக்கு தமிழ் எழுத்தறிவு அவசியமென்றில்லை. தமிழ் வாசிக்கத் தெரியாதவர்கூட, தினகரனை கையில் வைத்திருந்து (விசேட இலக்கமிடப்பட்டது) வாத்தியாரை கண்டுபிடிக்கலாம். ஆனால் கிரிஷாந்தன் விடயத்தில் சோடிக்கப்பட்டதால் இங்கு மேற்சொன்ன விடயம் கோடிட்டு காட்டப்படவேண்டியுள்ளது.

9.20க்கு ஹட்டன் வந்த சோடிக்கப்பட்ட வாத்தியார் 3.00மணிக்குப் பிறகு தரவலை செல்லும் வீதியில் நடந்து சென்றார். பின்னர் சுமார் ஒரு மணித்தியாலம் வரை அவரைக் காணவில்லை எங்கு சென்றார்? டிக்கோயாவில் இருந்து 1/2கி. மீற்றருக்குள் உள்ள பிரேம் குமாரின் சகோதரி சாரதா சண்முகநாதனின் வீட்டில் கிரிஷாந்தனுக்கு சோடிக்கப்பட்ட வடிவேல் வாத்தியார் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார் என்பதை என்னால் ஆணித்தரமாகக் கூற முடியும். அப்படியில்லையென்றால் ஒரு மணித்தியாலயம் வரை காணாமல் போன வடிவேலு வாத்தியார் பற்றி வடிவேல் வாத்தியாரின் ஹட்டன் உலா கட்டுரையில் பூசிமெழுகி மறைத்தது ஏன்? 4.50 மணிக்கு வடிவேல் வாத்தியாரை இளைஞர் ஒருவர் கண்டு ''நீங்கள் தானே வடிவேல் வாத்தியார்''? என்றாராம். 'தினகரன்' இல்லாத காரணத்தால் அவர் மறுத்தாராம். ஆனால் இரவு 10.50 மணிக்கு சுமார் முப்பதாயிரத்துக்கும் அதிகமான ஜனத்தில் முதுகில் தட்டி வாத்தியாரை கிரிஷாந் ''லபக்''கென்று கண்டு பிடித்தாராம். இது காலையிருந்தே வடிவேல் வாத்தியாரை கண்டுபிடிப்பதில் அவதானத்தையும் வாசிப்பையும் ஒரு நாட்பொழுது வேலையாக்கிக் கொண்ட மலையக தினகரன் அபிமானிகள் கண்ணில் மண்ணை தூவுகின்ற செயல் மட்டுமல்ல! அவர்களை தூசிக்கின்ற செயலும் கூட;

ஒரு நிறுவனம் போட்டியொன்றை நடாத்துகின்ற போது அந்நிறுவன ஊழியர்கள் விடயத்திலும், அவர்கள் உறவினர் நெருங்கியவர்கள் விடயத்திலும் அக்கறை காட்டி போட்டிகளை நேர்மையாக நடாத்துவதில் கரிசனை செலுத்துவது ஒரு விதி முறை. அந்த விதிமுறை ஏன் கொடுக்கப்படவில்லை. கொடுத்திருந்தால் மீறப்பட்டது ஏன்?


இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லவேண்டும். ''மந்திரவாதியின் குரல்கேட்டு மக்கள் கிளர்ந்தெழுவர். அரசனின் குரல் கேட்டு போர் வீரர்கள் கிளர்ந்தெழுவர். இரண்டையுமே நான் எதிர்க்கின்றேன். அதைவிட கூரிய பயங்கர ஆயுதமான பேனா என்னிடமிருக்கின்றது'' என்று கூறினார் கிரேக்க தத்துவ ஞானி அரிஸ்டோட்டில். அந்தக் கூரிய ஆயுதத்தைக் கொண்டு உண்மையையும், சத்தியத்தையும், நேர்மையையும் நிலைநாட்டும் காலம், எப்போதுமே ஆளும் கட்சிப் பத்திரிகையாக இருக்கும் தினகரனுக்கு என்றாவது வருமா?

ஏஸ்.

---

## ரூபவாஹினியும் லேக்ஹவுஸூம்

கிழக்கிலங்கையைச் சேர்ந்த கல்விமான் எஸ். மகேஸ்வரன் என்பவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் அவர்களை விமர்சித்து ''டெயிலி நியூஸ்'' பத்திரிகைக்கு பேட்டியொன்றை அளித்ததாக 06.01.1996 அன்று ரூபவாஹினி மாலைச் செய்தி அறிக்கையில் கூறப்பட்டது. உண்மையில் ரூபவாஹினி கூறியது போல கிழக்கிலங்கையைச் சேர்ந்த மேற்படி பெயருடைய எவரும் அளித்த பேட்டி எதுவும் ''டெயிலி நியூஸ்'' பத்திரிகையிலோ வேறு எந்த ''லேக்ஹவுஸ்'' பத்திரிகையிலோ வெளியாகவில்லை. எனினும், எஸ் மகேஸ்வரன்


DAILY NEWS, TU

Prabhakaran – frie
foe of the Thami

From: S. Makeswaran on the subject of Thamil

WRITE with the hope someone out there will help my understanding of the current problem in Lanka. I had lots of questions at the start of the med struggle for Thamil Eelam. I asked openly. e answers I got were: "Do as we say or keep quiet" ith an attached warning otherwise I would be etened). Then I looked for the answers myself and ish to share them with you. If they are right it's y. I want to correct my understanding if someone enlighten me.

V. Prabhakaran is he a friend amils?

I believe he is a foe the reasons are if story of this Thamil Eelam struggle Kuttymany group but later he nnot become a big person in that g etter fighters and better strategists rmed another group with Uma Ma e realized he even did not have a c ecause of the existence of educ oup the to for own rt oups w OT

4. So what did l
1. Eliminated p of the Thamil peo
2. Ruined edu Thamil (in gener are westernised by LTTE are
3. He mad powerful en Lanka ar ticaloa sson is

என்ற ஒருவர் எழுதிய கட்டுரை ஒன்று 02.01.1996 திகதி ''டெயிலி நியூஸ்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கட்டுரையாளர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரென்றோ அல்லது கல்விமான் என்றோ எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. மேலும் இந்தக் கட்டுரையில் ''ஈ மெயில்'' (எலக்றோனிக் தபால்) மூலம் அனுப்பப்பட்டது என்று கட்டுரையின் தலைப்புக்கருகில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தோடு இக்கட்டுரையாளர் அன்னிய நாடொன்றில் வசிப்பவர் என்னும் தகவல் கட்டுரையின் முதலாம் வசனத்தில் மறைமுகமாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க 07.01.96 அன்று வெளியாகிய தினகரன் வாரமலரில் இக்கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு, கட்டுரையாளரின் பெயருடன் சேர்ந்து பிரசுரமாகியிருந்தது. தினகரன் வாரமலரில் இக்கட்டுரை ஈ மெயிலினாடாக அனுப்பப்பட்டதென்ற தகவலும், கட்டுரையாளர் அன்னிய நாட்டில் வசிப்பதனைக் குறிப்பிடும் முதலாவது வசனமும் திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டுள்ளன.

அன்னிய நாட்டிலிருந்து ஒருவர் ''டெயிலி நியூஸ்'' பத்திரிகைக்கு ஈ மெயிலினூடாக அனுப்பிய கட்டுரையை கிழக்கிலங்கையைச் சேர்ந்த கல்விமான் அளித்த பேட்டியென்று ரூபவாஹினி திரித்துப்பிரச்சாரம் செய்தமை ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே அன்றிவேறல்ல. இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும் யுத்தம் தொடர்பாகவும் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தொடர்பு சாதனங்கள் நடாத்தும் பிரச்சாரம் எத்தகையது என்பதனை அறிந்து கொள்ள இந்த ரூபவாஹினிச் செய்தியொன்றே போதும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கவிதை ஞானத்தைப் போற்றுவோம்

சிவநாதன் என்பார் சரிநிகரில் எழுதியது தொடர்பாகச் சில வரிகள்:
நான் UTHR(J)என்ற பேரில் இயங்குவோர் அப்பெயரைப் பயன்படுத்துவதன் நேர்மை பற்றி எழுப்பிய கேள்விக்குச், சம்பந்தப்பட்டோர் பதில் தரவில்லை. சுகன் அதை மிகவும் விநோதமான முறையில் நியாயப்படுத்தி எழுதினார். அவரது தர்க்க முறை என்னை வியக்க வைத்தது. அதற்கேற்ப ஒரு பதிலை எழுதினேன். மற்றப்படி அவர் எழுப்பிய கேள்விகட்கும் என்னால் எழுப்பப்பட்ட பிரச்சினைக்கும் தொடர்பு சொற்பமானதே. சிவநாதன்,UTHR(J) என்ற அமைப்பு(?) யாழ்ப்பாணத்துடனோ, பல்கலைக்கழகத்துடனோ, தொடர்பற்றது என்பதை உறுதி செய்தமைக்கு நன்றி.
அப்பேருக்கும் எண் சாஸ்திரம் (!) என்கிற கோமாளித்தனத்திற்கும் என்ன தொடர்பென்று அவர்தான் விளக்க வேண்டும். அப்பெயரைப்பாவிக்கும் நபர்கள், நிச்சயமாக மூடநம்பிக்கை எதன் காரணமாகவும் அதைப் பயன்படுத்துவதாகத் தெரியாததால், அப்பெயரைப் பாவிப்பதன் நேர்மை பற்றிய கேள்வி நியாயமானதாகிறது. ஓரிருவரது தனிப்பட்ட அபிப்பிராயங்கட்கு ஒரு ஸ்தாபன முகத்தை வழங்கும் ஒரு காரியம் ஒரு புறம் ஒரு பொய்யான அந்தஸ்தைப் பெறும் முயற்சியாகும். மறுபுறம் அவர்களது பிரசுரங்கள் அதிகாரபூர்வமான ஆவணங்கள் என்ற பிரமையை, அரசியற் காரணங்களுக்காக அவற்றைப் பயன்படுத்தும் Front Line, Island போன்ற ஏடுகள் தமக்கு வசதியாக்கிக் கொள்கின்றன.
நான் மனோரஞ்சனுடைய கூட்டங்களுக்குப் போகாததற்கும் நான் குறிப்பிட்ட கருத்து உண்மையா என்பதற்கும் சம்பந்தமேயில்லை. ஐரோப்பாவில் உள்ள என் நண்பர் ஒருவர் மனோரஞ்சன் UTHR(J) பிரதிநிதியென அங்கு அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கூறினார். அவர் வதந்திகளைப் பரப்புவேரில் ஒருவரல்ல. எனவேதான் இவ்வாறான அறிமுகம் எவரதும் தவறாக இருக்கலாம் என எழுதினேன். மனோரஞ்சனை UTHR(J) யுடன் தொடர்பு படுத்தும் சொற்கள் எவரதும் வசதிகருதி இல்லாதிருப்பினும், இவ்வாறான பிற தவறுகள் நிகழ்ந்துள்ளன. எனவேதான், இதைக் குறிப்பிடுவது அவசியமென எண்ணினேன். எவ்வாறாயினும், UTHR(J) பற்றிய எனது வினாவின் முக்கயம் இதனாறக் பாதிக்கப்பட அவசியமில்லை. என் சொற்கள் மிகவும் கவனமாக எழுதப்பட்டன. வதந்திகளுக்கும் கேள்விகளை எழுப்புவதற்கும் இடையிலான வேறுபாட்டைச் சிவநாதன் அறியாமல் இருக்கலாம். அவர் வதந்தி எனக் கூறக் காரணங்கள் வேறாகவும் இருக்கலாம்.
UTHR(J)அறிக்கைகளை வாசித்ததன் பேரிலும் அப்பேருடன் தொடர்புடையோருடன் உரையாடியதன் பேரிலுமே எனது கருத்துக்கள் உருவாயின. அண்மைக்கால நிகழ்வுகள் பற்றி அந்தப் பெயரில் வரும் அறிக்கைகள் சொல்ல நினைத்ததைவிடச் சொல்லாமற் போனவையே அவற்றின் நிலைப்பாடுபற்றிய ஐயங்களை எழுப்புகின்றன. ஹின்ட் Counterpoint (Sep.95) இதழில் வீரகேசரியும், சரிநிகரும் புலிகளை ஆதரிப்பதாகக் குற்றஞ் சாட்டி எழுதியதையும் சிலரால் சரிநிகர் மீது சிலகாலமாகத் தொடுக்கப்பட்டுள்ள நெருக்குவாரங்களையும் கணிப்பில் எடுத்தே சில விஷயங்கள் பற்றிக் கேள்விகள் எழுப்ப முற்பட்டேன். அண்மையில் வ.ஐ.ச. ஜெயபாலனும் எனது கருத்துக்கு உடன்பாடான சில கேள்விகளை எழுப்பினார்.
மனித உரிமை தொடர்பான நிலைப்பாடு பற்றி நான் தெளிவாக எழுதி வருகின்றேன். ஆங்கிலத்திலேயே வரும் UTHR(J) அறிக்கைகளை வாசித்தறியும் சிவநாதன் நான் Tamil Times இல் எழுதுவனவற்றையுங் கண்டிருப்பார் என நம்புகிறேன். என்னுடைய கடிதத் தலைப்பினூடாக பாரதியின் இன்னொரு முகத்தினையும் காணும் சிவநாதனது கற்பனையின் ஆற்றலை வியக்கிறேன். UTHR(J)பற்றிய எனது வினா எள்ளலல்ல அது தொடர்பாக வந்த கடிதத்தின் தொனிக்கு எனது எள்ளலும் தகுதி மீறிய கௌரவிப்பே.
விடுதலைப்புலிகளைச் சிறிதளவேனும் விமர்சிப்போரை எதிரிகளாகக் கருதும் மூர்க்கத்தனம் இங்கு புலி ஆதரவாளர்கள் என்று கூறப்படுஞ் சிலரிடம் உண்டு. அதேயளவு மூர்க்கத்தனம் புலி எதிர்ப்பையே தமது அரசியலாக்கிவிட்டவர்களிடமுங் காணப்படுகிறது. நிற்க, சரிநகருக்கு எனது கடிதங்கள் எவையுமே கவிதை நடையில் எழுதப்பட்டதில்லை. என்னை அறியாமலே நான் எழுதிய கவிதைகளை எனக்குச் சுட்டிக்காட்டிய சிவநாதனுடைய கவிதா ஞானத்தைப் போற்றுவோமாக.

**சிவசேகரம்**
**லண்டன்.**



## தந்திரங்களுக்கு பலியாகவேண்டாம்!




தொடர்ச்சியாக இல்லாவிடினும் அடிக்கடி வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் 'சரிநிகர்' பத்திரிகையை மிகவும் ஆர்வத்துடன் படித்து வருகின்றேன்.
கடைசியாக கிடைத்துள்ள டிசெ.14-ஜன.10 இதழில் வழமைபோல் பல சிறப்பான அம்சங்கள் வெளியாகியுள்ளன.
நேரத்திற்கும் காலத்திற்கும் ஏற்றாற் போன்ற தங்கள் ஆசிரிய தலையங்கம் மிகவும் யதார்த்தமான கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டுள்ளது. நாசமறுப்பான், நக்கீரன் ஆகியோரின் கட்டுரைகள் வழமைபோல் ஆணித்தரமான கருத்துக்களை அஞ்சாது எடுத்துக் கூறியுள்ளன. உணர்வுகளுக்கு அடிமைப்படாது முஸ்லிம்களின் உண்மையான நிலைப்பாட்டை அபூநிதாஸ் இன் கட்டுரை எடுத்துக்கூறுகின்றது.
இது தவிர அரசியலில் மறைமுகமாக அரங்கேறும் விடயங்கள் வெளிக்கொணரப் பட்டுள்ளன. இரசியமாக ஏமாற்று அரசியல் நடாத்துபவர்களின் முகமூடிகள் கிழித்தெறியப்பட்டுள்ளன.
இதை விடச் சிறந்த முறையில் உங்கள் ஸ்தாபனத்தின் கொள்கைகளுக்கேற்ற விதத்தில் வேறு எப்படி நீங்கள் சரிநிகரை நடாத்திச் செல்லமுடியும் என்பது எம் போன்றோருக்கு புரியாத புதிராக உள்ளது. நீங்கள் வெளியிட்டுள்ள சிலரின் விஷமத்தனமான விமர்சனங்களை மனதிற் கொண்டே இப்படிக் கேட்கிறேன்.
எமது நாட்டில் இப்போது ஒரு புதிய வெகுஜனத் தொடர்பு சாதனக்கொள்கையொன்று வகுக்கப்பட்டுக்கொண்டு வருகின்றது. அதில் அரசாங்கம் தமிழர் தொடர்பாகக் கடைப்பிடிக்கும் கொள்கையைக் கண்டிப்பது தேசியவிரோதச் செயலாகக் காட்டப்படுகின்றது. இன்று வீரகேசரி தவிர நாட்டில் வெளியாகும் அனைத்து நாளேடுகளும் சிங்கள இனத்தவரின் சொத்தாக உள்ளது. பெரும்பான்மைச் சிங்களவரின் கட்டுப்பாட்டிலுள்ள இந்நாளேடுகள் யாவும் நடுவுநிலைமைக்கொள்கையை கைவிட்டுவிட்டன. தேசியம் என்பது சிங்களத்துவம் என்ற கொள்கையை அவர்கள் ஆழமாக ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். இது இப்போதுதான் ஏற்பட்ட மாற்றமல்ல. தொடர்ச்சியாகவே அவர்களின் செயற்பாடுகள் அவ்விதத்தில் தான் அமைந்துள்ளன. எனினும் சமீபத்திய யாழ்ப்பாண படையெடுப்புடன் இது பச்சையாகவே கடைபிடிக்கப்படுகின்றது.
நடுவுநிலையான ஏடுகள் யாவும் தமிழினத்தின் நீதியான போராட்டத்தையும், கோரிக்கைகளையும் கொச்சைப்படுத்தும் செய்திகளை வெளியிடவேண்டிய மறைமுகமான நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. அல்லது, அரசின் நடவடிக்கையைக் கண்டிக்க வேண்டின் அதோடு சேர்நதாற்போல் தமிழ்த் தேசியத்தைக் கண்டித்தும் இரு வசனங்கள் வெளியிட்டேயாக வேண்டிய நிர்பந்தம்.
கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் வாதிகளின் அண்மைக்காலப் பேச்சுக்களைப்பாருங்கள். அரசாங்கம் இராணுவ நடவடிக்கையை நிறுத்தவேண்டும் என்று அவர்கள் கோரவேண்டியிருந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவ்வேண்டுதல்களில் புலிகளையும் சம்பந்தப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம். அப்படித்தவறும் பட்சத்தில் சிங்களக்கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள் அவர்களை புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறி மிரட்டத் தொடங்கி விடுவார்கள். அண்மையில் அரச சார்பற்ற உதவி நிறுவனங்கள், கிறிஸ்துவ நிறுவனங்கள் யாவும் இத்தகைய அச்சுறுத்தல்களுக்குட்பட்டிருந்தமையை நீங்கள் அறிவீர்கள். நிராதரவானதமிழர்கட்கு உதவி செய்ய அல்லது அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க முற்பட்ட எல்லா நிறுவனங்களுக்கும் புலிப்பட்டம் சூட்டப்பட்டு அவர்களின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. இது இப்போ மிகவும் சுலபமான தந்திரோபாயமாகிவிட்டுள்ளது. நாகர்கோவில் பாடசாலைச் சிறுவர்கள் மீது குண்டு பொழிந்து கொலைசெய்தமையை வெளிக்கொணர்ந்த பிரெஞ்சு வைத்திய நிறுவனத்திற்கும், நவாலி தேவாலய படுகொலையை உலகிற்கு அறிவித்த செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் விடப்பட்ட மிரட்டல்களைத் தாங்கள் அறிவீர்கள். யாழ்ப்பாண இராணுவப் படையெடுப்பைத் தொடர்ந்து நிர்க்கதியான தமிழர்களின் அவல நிலைக்காகக் குரல் கொடுத்த ஐ.நா செயலாளர் எவ்வாறு தூற்றப்பட்டார் என்பது யாவரும் அறிந்த விடயம். மிகவும் கெட்டித்தனமான பிரசார யுக்தியைக் கடைப்பிடிப்பதாக அரசும் வெளிநாட்டமைச்சரும் நினைத்து மகிழக்கூடும். ஆனால் உலகம் அவ்வளவு மடைத்தனமானதல்ல என்பதை இவர்கள் மிக விரைவில் உணர்வார்கள்.
இன்று தமது சொந்தப் பெயரிலோ சொந்த முகவரியை வெளியிட்டோ தமிழர் தமது கருத்துக்களை வெளிப்படையாக எழுத முடியாத நிலை. சரியெனப்படும் கருத்துக்களை வெளியிடும் தமிழர்கள் இனவாதிகளாகவும், புலிகள் எனவும் சாயம் பூசப்பட்டு தாக்கப்படுகின்றார்கள். இப்படியான நிலையில் எம் போன்றவர்கள் எப்படி தமது கருத்துக்களைக் கூற முடியும்?
மலையகத்திலே தமிழர் படும் இன்னல்களை எந்த தேசியப் பத்திரிகை எடுத்துக் கூறுகிறது. கேட்டால் அவர்களுக்கு என்ன குறை என்று கேட்கும் பெரும்பான்மையின அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்.
இவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்டு இன்னல்களுக்குள்ளாகிவரும் இனத்தின் உண்மை நிலையை எடுத்துக் கூறிவரும் மிக அரிதான பத்திரிகைகளுள் உங்களதும் ஒன்று. அதனையும் யாழ்ப்பாண ஆதரவு, புலி ஆதரவு என்று கொச்சைப்படக்கூறி ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்துவதே இவர்களது நோக்கம். தமிழர் என நேரடியாகத் தாக்குவது அநாகரிகமாக இருக்குமல்லவா? எனவே அவ்வாறு செய்யாது அவ் உணர்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவனவற்றை தாக்குவது நாகரிகமான செயல் போலல்லவா தோன்றும். தமிழர் ஆதரவு என்று தாக்கும் போது அது அவ்வளவு ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இராது என்பதால் தமிழர் உணர்வுகட்கு விரோதமாக உள்ளவர்கள் இப்படிக் கூறுவது ஒரு மிகவும் நரித்தனமான தந்திர நோக்கத்துடனேயேயாகும். இது திட்டமிடப்பட்ட ஒரு செயலேயன்றி அறியாமையினால் அல்ல. முன்பும் இப்படித்தானே தந்தை செல்வாவை எப்படியெல்லாம் தூற்றினார்கள். இந்த வரலாறுகளையெல்லாம் நாம் மறந்துவிடக்கூடாது.
இந்தத் தந்திரங்கட்கு நீங்கள் பலியாகக்கூடாது என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள். நீதியானதும் சமத்துவமான ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காக நீங்கள் வகுத்துள்ள உன்னதமான பாதையினின்றும் வழுவாது தொடர்ந்து செயற்படுங்கள்.

**வ. சின்னரத்தினம்**
**பருத்தித்துறை**

## யார் எடுப்பார் நடவடிக்கை

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச்சபையினால் விவசாய டிப்ளோமாதாரர்களை உதவி ஆசிரியர்களாக ஆட்சேர்பதற்கான விண்ணப்பம் 1994.01.28ம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அதனடிப்படையில் தகுதியானவர்கள் விண்ணப்பித்தனர். அதற்கான போட்டிப் பரீட்சை 1995.01.14ல் நாடளாவிய ரீதியில் நடைபெற்றது.ஆனால் அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை பல நூற்றுக்கணக்கான விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படவில்லை. இருந்தும் அம்பாறை மாவட்ட கல்விப்பணிப்பாளரின் சிபாரிசின் பேரில் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டனர். அதற்காக எங்களிடம் இருந்த விண்ணப்பித்ததற்கான பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு மூலப்பிரதியையும் கடிதம் ஒன்றும் எழுதப்பெற்றுக்கொண்டனர்.
இருந்தும் இதுவரை காலமும் எங்களுக்கு இப்பரீட்சை சம்பந்தமான பெறுபேறுகளோ அல்லது வேறு ஏதும் தகவல்களோ அனுப்பிவைக்கப்படவில்லை. இதனால் பரீட்சாத்திகளான நாம் மிகவும் மனவேதனையடைகிறோம்.
விண்ணப்பித்து 01 வருடத்தின் பின் பரீட்சையும் நடைபெற்றது. பரீட்சை நடைபெற்று ஒரு வருடமாகியும் இன்னும் எதுவித தகவல்களும் கிடைக்கப்பெறாததையிட்டு, இது சம்பந்தமாக அமைச்சு மட்டத்திலும் திணைக்கள உயர் அதிகாரிகள் மட்டத்திலும் நடவடிக்கை எடுப்பார்களா என பரீட்சார்த்திகள் அங்கலாய்க்கின்றனர்.
குறிப்பு:- 8000 பயிற்சி ஆசிரியர்கள் வழங்கும் அரசின் திட்டத்தில் விவசாய பயிற்சி ஆசிரியர்களாக 300 பேருக்கு நியமனம் வழங்கப்படும் என பத்திரிகைகளிலும் வானொலியிலும் பரவலாக செய்தி வெளியாகியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஏ.எம். இலியாஸ்**
**அக்கரைப்பற்று**

## விமர்சனங்கள் துணிவானவை!

சரிநிர் பற்றி நிலவும் தவறான கருத்துக்களையிட்டு வாசகர்களிடமிருந்து அறிந்து கொள்ள நீங்கள் எடுத்த முடிவையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இதற்கு முன்னரும் நீங்கள் நடத்திய கருத்துக் கணிப்பிலும் நான் பங்கு பற்றியிருந்தேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.
ஒரு பத்திரிகையின் வளர்ச்சி வாசகர்களின் ஆதரவில் உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு சரிநிகரில் சிறுமாற்றத்தைச் செய்வதென்றாலும் வாசகர்களாகிய எங்களின் விருப்பத்தையும் அறிந்து கொள்ள முயல்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதனால் தான் மற்றைய பத்திரிகைகளிலிருந்து சரிநிகர் தனித்து, சிறந்து நிற்கிறது என்பது எனது கணிப்பு. இது வெறுமனே பாராட்டல்ல நிஜமும் அதுதான்.
இந்த வகையில் சரிநகர் பற்றி பிழையான கருத்து நிலவுவதையிட்டு எனது கருத்தையும் கூற விரும்புகிறேன். சரியான செய்திகளை பக்கச்சார்பற்ற முறையில் தருவதிலேயே ஒரு பத்திரிகை தன் பணியில் நிறைவு பெறுகின்றது. குறிப்பிட்ட ஒரு இனத்தின், மொழியின், சமூகத்தின் சுயநலத்திற்கு அப்பாற்பட்டு உண்மைச் செய்திகளை யாருக்கும் பயப்படாமல் துணிவுடன் வெளியிடும் போதுதான் அப்பத்திரிகை வாசகர்களிடம் ஒரு தனி இடத்தையும் பாராட்டையும் பெற்று விடுகிறது. இந்த வகையில் சரியான கருத்துக்களை பக்கச்சார்பற்ற முறையில் தரும் இலங்கையில் வெளிவரும் ஒரேயொரு தமிழ்ப் பத்திரிகை சரிநிகர் மாத்திரமே என்பது என்போன்ற வாசகர்களின் கணிப்பு. இப்படியிருக்கையில் புலிகளை வளர்க்கும் ஒரு பத்திரிகை என்றோ, இன உணர்வைத் தூண்டும் பத்திரிகை என்றோ, அல்லது பக்கச்சார்புடன் நடந்துகொள்ளும் பத்திரிகையென்றோ யாரும் சரிநிகர் பற்றி விமர்சனம் செய்வது ஏற்றுக்கொள்ள முடியாதது. எங்கு தவறு நடக்கின்றதோ அதைப் பயமின்றி துணிந்து விமர்சிக்கும் வழமையைத்தான் அன்று முதல் இன்று வரை சரிநிகர் செய்து வருகிறது. இதை ஏன் விமர்சனம் செய்பவர்களால் அறிந்து கொள்ள முடியாமல் போனது? அல்லது அறிந்தும் அறியாதவர்கள் மாதிரி நடந்து கொள்கிறார்களா என்று புரியவில்லை. தங்களுக்குச் சாதகமான செய்திகள் வந்தால் 'நல்ல பத்திரிகை' என்றும், உள்ளதை உள்ளபடி எழுதினால் 'துவேஷத்தைத் தூண்டும் பத்திரிகை'என்றும் முத்திரை குத்த முற்படும் இப்படியான 'அறிவாளிகள்' இலங்கையில் தமிழிலும் ஏனைய மொழிகளிலும் வெளிவரும் பத்திரிகைகள் அனைத்துமே பத்திரிகை தர்மத்தைக் கடைப்பிடிக்கின்றனவா? என சரிநிகரோடு ஒப்பிட்டுத் தெரிந்துகொண்ட பின்னர் வேண்டுமானால் சரிநிகர் பற்றி விமர்சனம் செய்யட்டும். அதைவிட்டு தரமான ஒரு பத்திரிகை மீது இப்படிப்பட்ட பிழையான கருத்துக்களை சுமத்தி விடுவது ஏற்கக்கூடியதல்ல. ஆகவே இப்படிப்பட்ட தரமற்ற விமர்சனங்களால் நடுநிலை வகிக்கும் சரிநிகர் எந்த வகையிலும் துவண்டு விடக்கூடாது. உள்ளதை உள்ளபடி தரும் ஒரேயொரு பத்திரிகை சரிநிகர் ஒன்றுதான் என்று உறுதியாக நம்பியிருக்கும் எம்போன்ற வாசகர்களை சரிநிகர் ஏமாற்றி விடக்கூடாது. வழமை போலவே ஆக்கங்களும் செய்திகளும் சரிநிகரை அலங்கரித்து, தொடர்ந்து அதன் தனித்தன்மையைப் பேண வேண்டுமென்பதே எனது விருப்பமுமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சபா சிறீதரன் வாழைச்சேனை.**

## திருமலைக்கும் பொருந்தும்!

சரிநிகர் இதழ் - 89இல் பக் 15இல் ''பரீட்சை மேற்பார்வையாளர் நியமனத்தில் ஊழல்'' என்ற தலைப்பில் எழுதப்பட்ட விடயத்தை எழுதிய மு.கி.மு. கல்முனை அவர்களுக்கு எனது பராட்டுக்கள் உரித்தாக் கட்டும்.
முக்கிய விடயம் யாதெனில் அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட கல்முனை என்ற இடங்களில் ''திருகோணமலை'' என்று மாத்திரம் மாற்றப்பட்டால் அது அப்படியே திருக்கோணமலை கல்விக் கரியாலயத்திற்கும் அது பொருத்தமாக இருக்கும் என்பதை தங்களுக்கு தெரியப்படுத்துகிறேன்.

**சி. சிவநாதன்.**
**திருமலை.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

## சாத்தியமற்றவைகளை என்னிடம் கேளாதே!

வார்த்தைகளுள் அகப்படாத குரூரம்!

பெப்.11ம் திகதி அரங்கேறியிருக்கிறது கிளிவெட்டி – குமாரபுரம் கிராமத்தில்.

'அப்பாவி மக்களின் மேல் மட்டுமே துப்பாக்கி சுடத்தெரிந்தவர்களின் வீரம்' 24பேரைப் பலிகொண்டு போயிற்று: 28க்கும் மேலானவர்களை ஆஸ்பத்திரிக் கட்டில்களில் கொண்டு போய் கிடத்திற்று.

கிழக்கெல்லைக் கிராமத்தின் இந்தத் துயர் அரசாங்கத்தை எட்ட மூன்று நாட்களாகியிருக்கிறது.

வடமுனைக் கிராமமொன்றில் புலிகளின் பஜிரோவுக்கு எதிராகக் கல்லெறியப்பட்டதை இங்கிருந்து கொண்டே கண்டு பிடிக்கும் 'வியாசப்' பத்திரிகையாளர்களுக்கும் குமாரபுரத்தில் ஓடிய இரத்த ஆறு தென்படவில்லை.

மூன்று நாட்களுக்குப் பின்னரும் மக்களை உணர்ச்சிவசப்படுத்திவிடக் கூடாது, அவர்களை இனவாதத்துள் தள்ளி விடக்கூடாது என்பதாலும் நீதி, விசாரணை முடியும் வரை யாரையும் குற்றவாளிகளாக்கக் கூடாது என்ற அடிப்படையிலும் அரசாங்கமும் தென்னிலங்கைப் பத்திரிகைகளும் 'மிகுந்த அக்கறையுடனும் பொறுப்புணர்வுடனும்' ***இனங்காணப்படாதவர்கள்*** மேற்கொண்ட தாக்குதலில் ***பொது மக்கள்*** பலியானதாகவே அறிவித்துள்ளன.

ஆனால் ஐலண்ட் பத்திரிகையோ தனது புலனாய்வின்படி இராணுவத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதற்காக புலிகளே இக்கொலைகளைச் செய்திருக்கலாமென சிலர் கருதுவதாக சம்பவம் நடந்து ஐந்து நாட்களுக்குப் பிறகு செய்தி வெளியிட்டிருந்தது. (யார் இந்தச் சிலர் என்பது அந்தப் பத்திரிகைக்குத் தான் வெளிச்சம்.)

அரசாங்கமும் தென்னிலங்கை தொடர்புச் சாதனங்களும் இவ்வாறு செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்த நேரம் குமாரபுரம் மக்கள் தங்கள் மீது காடைத்தனம் புரிந்தவர்களை இனங்காட்டிவிட்டு திரும்பவும் தங்கள் கிராமத்துக்குச் செல்ல அஞ்சி அயல் கிராமங்களில் பீதியுடன் இரவைக் கழித்துக்கொண்டிருந்தார்கள்.

இந்தப் பீதியும் துயரமும் இந்தக் கிராமத்திற்கு இது தான் முதற் தடவையல்ல. கடந்த இரண்டு தசாப்தங்களாக எல்லைப்புற கிராமங்கள் சுமக்கும் துயருக்கு இந்தக் கிராமமும் விலக்காய் இருந்ததில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தின் போதும் இக்கிராமம் சுற்றிவளைக்கப்பட்டு ஆண்கள் அனைவரும் பிரித்தெடுக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

அப் படுகொலைகளுக்குச் சற்றும் குறைவில்லாத விதத்திற் படையினர் இக்கிராமத்தைச் சூறையாடி தாம் சிங்கள – பௌத்த பேரினவாத அரசின் விசுவாசமிக்க அங்கத்தினர்தான் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார்கள்.

ஏறத்தாழ அறுநூற்றாண்டுகாலமாக ஏனைய சிறுபான்மையினங்களுக்கெதிராக கட்டமைக்கப்பட்ட இந்த அரசு, அரச இயந்திரங்கள் குறித்து சரிநிகர் எப்போதும் கேள்வி எழுப்பியே வந்துள்ளது.

இச்சிங்கள – பௌத்த பேரினவாத அரச கட்டமைப்பு தகர்க்கப்பட்டு பல்லின பல்கலாச்சார அமைப்பொன்று கட்டமைக்கப்படாத வரை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மாறி மாறி வரும் எந்தவொரு அரசாங்கத்தாலும் இலங்கையின் எந்த சிறுபான்மையினங்களினதும் சமத்துவத்தை உறுதிப்படுத்திவிட முடியாது என்பதை இச்சம்பவங்கள் மேலும் மேலும் உறுதிப்படுத்தி வருகின்றன.

மேலும் ஆட்சியதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக – கைப்பற்றுவதற்காக சிறுபான்மையினங்கள் மீது தொடர்சியான ஒடுக்குமுறைகளை அதிகரித்துச் செல்லவேண்டும் என்பது தான் இந்த அரச கட்டமைப்பின் தர்க்க விதி.

இந்த அடிப்படையிலேயே தான் பொ.ஐ.மு அரசாங்கம் பதவிக்கு வந்த போது மலையகத்தில் நடைபெற்ற தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் அதன் பின்னான பல சம்பவங்களையும் இனவாதத்தின் வெளிப்பாடாக, சிறுபான்மை மக்கள் மீதான ஒடுக்குமுறை வடிவங்களில் ஒன்றாக சரிநிகர் வெளிப்படுத்தியிருந்தது. சிலர் கருதுவதுபோல புதிய அரசின் மீதான வெறும் காழ்ப்புணர்வினால் அதற்கு மாசு கற்பிப்பதற்காக அல்ல.

நிரந்தர நிர்வாக அமைப்பு, அரச படைகள், நீதி மன்றங்கள் போன்ற அரச அங்கங்களின் பௌத்த பேரினவாத இயல்புகள் காரணமாக, தெரிவு செய்யப்படும் ஒரு அரசாங்கம் அது எவ்வளவு தான் இன சமத்துவம் பேசினாலும் கூட, அரச கட்டமைப்பை முற்றுமுழுதாக இனவாத தன்மையற்றதாக மாற்றுவதில் அக்கறை காட்டாதவரை அதனால் எதையும் சாதித்து விடமுடியாது என்பது தெளிவு. அரசின் பௌத்த – சிங்கள பேரினவாத இருப்புக்கு தீனி போட்டபடி (இது தவிர்க்க முடியாதபடிக்கு அரசாங்கத்தின் இருப்புக்கு அவசியமாக இருக்கிறது!) இன சமத்துவத்தையும் சமாதானத்தையும் உருவாக்க முயல்வதில் அர்த்தமில்லை.

அரசின் இனவாத தன்மையை மாற்றியமைப்பது என்பது உறுதியானதும் விட்டுக்கொடுக்காததுமான போராட்டத்தின் மூலமே சாத்தியம். சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முவுக்கும் அதன் அரசாங்கத்துக்கும் இதற்கான வலிமை அவசியம் என்பதே சரிநிகரின் இதுவரைகால விமர்சனங்களின் இலக்காக இருந்து வந்தது. ஆனால் இதனை இந்த அரசாங்கமும் சரி, அதன் எடுபிடிகளும் சரி, சமாதானத்திற்காக உழைத்த பலரும் சரி புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை

இன்று இவர்களில் சிலருக்கு இன்றைய போக்கு அச்சம் தரும் விதத்தில் இனங்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையின்மையை வளர்த்து வருகின்றது. என்று கவலைப்பட மட்டுமே முடிகிறது. எப்போது இந்த அரசின் இருப்புக்கு நியாயம் கற்பிக்கும் பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதோ அப்போதே அது தனது மக்கள் சார்பிலான தார்மீக பொறுப்பிலிருந்து நழுவி விடுகின்றது என்றே கொள்ளவேண்டும் என்பதையே சரிநிகர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

இன்றைய அரசாங்கத்தின் போக்கு அதனைத்தான் காட்டுகிறது.

பாருங்கள்:

கிழக்கில் இந்தக் குரூரம் நடைபெற்றிருக்கிற போதும் கொழும்பில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பொலிஸ் நிலையங்களுக்குள்ளும் சிறைகளுக்குள்ளும் காரணமின்றி அடைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது.

தமிழ் இளைஞர்கள் மர்மமாகக் கடத்திக் கொல்லப்பட்டு ஆற்றிலே வீசப்பட்டது தொடர்பாக கைது செய்யபட்ட விசேட அதிரடிப்படையினர் பிணையில் வெளியே வந்து கொண்டிருக்கின்றனர்.

மறுபுறத்தில் குமாரபுர படுகொலைகள் குறித்து நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையை புறக்கணித்து வெறும் இராணுவ விசாரணைகளே மேற்கொள்ளப்படும் என அரசாங்கத்தரப்பு தெரிவித்திருக்கின்றது.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல எம்பிலிப்பிட்டிய புதைகுழிப் படுகொலைகள் தொடர்பாக வடக்கிலிருந்து விசாரணைக்கென அழைக்கப்பட்ட உயர் இராணுவ அதிகாரியொருவர் நீதிமன்ற விசாரணைக்குச் சென்ற போது, தாம் வடக்கில் ஈடுபட்டிருந்த முக்கியமான நடவடிக்கையை கைவிட்டு விசாரணைக்காக வந்ததாக தெரிவித்ததையடுத்து 'நீங்கள் இந்த நாட்டின் பொக்கிஷங்கள், இந்த நேரத்தில் உங்கள் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தப்படக் கூடாது' என்று நீதிபதியால் ஆசி வழங்கப்பட்டு திரும்பவும் வடக்கின் யுத்த முனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இந்த மூன்று உதாரணங்களும் போதும் அரசுக்கும் – அரச படைகளுக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள உறவை புலப்படுத்த.

இதற்குள் மக்கள், ஜனநாயகம், சமாதானம், சமத்துவம் என்பவை குறித்து நாங்கள் சொல்வதற்கு என்ன இருக்கின்றது.

'சாத்தியமற்றவைகளை என்னிடம் கேளாதே.'

# அம்பாறை யாருக்கு?

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நடைபெற்று வரும் அபிவிருத்திச் செயற்பாடுகளும், ஏனைய நடவடிக்கைகளும் உண்மையில் அம்பாறை நகரத்தில் முஸ்லிம் - சிங்களத் தலைவர்களுக்கிடையே ஓர் பனிப் போரை ஏற்படுத்தியிருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய சிங்கள - முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னதான் தங்களுக்கிடையே சமாதானம் ஐக்கியம், பற்றிப் பேசினாலும் குத்து வெட்டுக்களும், குழிபறிப்புக்களும் அங்கு சர்வசாதாரணமான ஒன்று.

### *அம்பாறை யாருக்கு?*

4539,34 சதுர கிலோமீற்றர் பரபபளவைக் கொண்ட அம்பாறை மாவட்டம் இன்று முஸ்லிம் பிரதேசம் என்றும் சிங்களப் பிரதேசம் என்றும் இரண்டாகப் பிரிந்து இருக்கின்றது. இதில் அம்பாறை நகரம் இரண்டு பிரதேசங்களுக்கும் மத்தியில் இருப்பதாலும் இந்நகரம் சிவில் நடவடிக்கைகள் தொடர்பாகவும் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாகவும் முக்கியமாக இருப்பதாலும் அம்பாறை நகரைத் தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் விடயத்தில் முஸ்லிம் - சிங்கள அரசியல் சக்திகள் ஓரளவுக்கு வெளிப்படையாகவே மோதுகின்றன என்று சொல்வதும் பொருந்தும்.

### *தயாரத்தினபுரமும் அஷ்ரஃப்புரமும்*

முன்னைய ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் புனர்வாழ்வு அமைச்சராக இருந்த தயாரத்தின புனர்வாழ்வு என்ற பெயரில் சிங்கள மக்களைக் குடியேற்றி பல குடியேற்றக் கிராமங்களை உருவாக்கினார்.

தற்போதைய அரசின் புனர்வாழ்வு அமைச்சர் அதே புனர்வசாழ்வு என்ற பெயரில் பல ''அஷ்ரஃப் புரங்களை'' உருவாக்குக்கின்றார்.

இவ்வாறு ஏட்டிக்கு போட்டியாக நடந்து கொண்டிருக்கும் குடியேற்றங்கள் . புனர்வாழ்வு என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### *புனர்வாழ்வுக்கு ஓர் அலுவலகம்*

புனர்வாழ்வு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கென அமைச்சர் அஷ்ரஃப்பின் தனியான அலுவலகம் ஒன்று அம்பாறையில் ஆரம்பிக்கப்பட்டு, இன்னொரு கச்சேரியில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இவ்வலுவலகத்திற்கு முனாஸ் காரியப்பர் என்னும் முஸ்லிம் காங்கிரசின் முக்கிய உறுப்பினர் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். முன்பு தொழில்நுட்ப உதவியாளராக இருந்த இவரின் கீழ் தற்பொழுது பொறியியலாளர் ஒருவர் கணனி இயக்குனர் ஏராளமான உழியர்கள் என அலுவலக நடவடிக்கைள் பலமாகவே நடைபெற்று வருகின்றன. இவ் அலுவலகம் தான் அம்பாறை மாவட்டத்தில் செய்யப்படும் அனைத்து புனர்வாழ்வு வேலைகளுக்கும் பொறுப்பாக இருக்கிறன்றது. அகதிகளை எங்கு குடியேற்றுவது என்ற விடயங்கள் கூட இவ் அலுவலகப் பொறுப்பாளராலேயே தீர்மானிக்கப்படுகின்றது. புனர்வாழ்வுப் பணிகளுக்கென அனைத்துப் பணமும் அம்பாறை அரசாங்க அதிபருக்கே அனுப்பப்படுகின்றது. ஆனால் அப்பணத்தை எப்படி? எங்கு? எவ்வளவு செலவிடுவது என்பதெல்லாவற்றையும் புனர்வாழ்வு அமைச்சரின் அலுவலகமே தீர்மானிக்கிறது. ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அனுப்பப்படும் பணத்திற்கு முழுப்பொறுப்பு அரசாங்க அதிபரே. இதன் காரணத்தினால் தற்போதைய அரசாங்க அதிபர் புனர்வாழ்வு அமைச்சு காரியாலயத்தின் செயற்பாடுகளை வெளிப்படையாக வெறுப்பவராக இருந்தாலும், அமைச்சருக்கு எதிராக எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளார்.

புனர்வாழ்வு புனரமைப்புப் பணியின் போது மாதிரிக்கிராமங்கள் அமைப்பதே பிரதான செயற்பாடாக இருந்து வருகின்றது. அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் எல்லாம் இவற்றை தேசிய வீடமைப்பு அபிவிருத்தியே செய்துவருகின்றது. ஆனால் அம்பாறையில் மாத்திரம் இவற்றை அமைச்சரின் அலுவலகமே செய்து வருகின்றது. இதற்கான காரணமாக தேசிய வீடமைப்பு அதிகார சபை இவ்விடயத்தில் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது. உண்மையை விசாரித்ததில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையை விட புனர்வாழ்வு அமைச்சுக் காரியாலயத்தில் உள்ளவர்களே நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்று கூறப்பட்டது. இவர்களுடைய மட்டத்திலேயே அனைத்தும் முடிந்து விடுகின்றபடியால் தாங்கள் நினைத்தபடி கட்டி முடித்து விடுகின்றார்கள் என்று கூறப்படுகின்றது. இவ்வாறாக இது வரை எட்டு மாதிரிக்கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

### *சக்கிலியர்களுக்கு ஏது இடம்?*

இவ்வாறு மீளக் குடியமர்த்தப்பட்ட ஒரு மாதிரிக்கிராமம் தான் வளத்தாப்பிட்டி மாதிரிக் கிராமம். இக்கிராமத்தில் தற்போதுள்ள குடியேற்றப்பட்டுள்ளவர்கள் அனைவரும் முன்பு அம்பாறை நகரின் மத்தியில் தங்களுக்கென சொந்தமான அரசினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட நகர சுத்தித் தொழிலாளர்களுக்கான வதிவிடங்களில் இருந்தவர்கள். 1990ம் ஆண்டின்பின்பு அகதிகளாகி தற்போது வளத்தாப்பிட்டியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதில் .வேடிக்கை என்னவென்றால் இவர்கள் அனைவரினதும் முன்னைய குடியிருப்புக்கள் தற்போது சிங்களவர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் தற்போதும் இவர்கள் தொழில் புரிவது அம்பாறை நகரில்தான். ஒவ்வொருநாளும் வளத்தாப்பிட்டியில் இருந்து அம்பாறைக்கு வந்தே இவர்கள் தொழில் புரிய வேண்டியிருக்கிறது. இவர்கள் முன்பு குடியிருந்த இடங்கள் அனைத்தும் உருப்படியாக இருக்க அவ்விடங்களை சிங்கள மக்கள் ஆக்கிரமிக்க இடம் கொடுத்து விட்டு இவர்களை அன்னியப்படுத்தி வேறொரு இடத்தில் பலவந்தமாக குடியேற்றியதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது. இந்நகர சுத்தித் தொழிலாளர்கள் தாங்கள் அம்பாறையில் குடியிருப்பதையே விரும்புகின்றார்கள். இவ்விடயம் தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சின் அம்பாறைக் காரியாலயப் பொறுப்பாளர் முனாஸ் காரியப்பரிடம் கேட்டபோது, ''அவர்களுக்கென்ன அவர்கள் சந்தோசமாகத்தான் இருக்கின்றார்கள். அவர்கள் சக்கிலியர்கள் தானே வளத்தாப்பிட்டியிதான் அவர்களுக்கு நல்ல இடம்'' என்று கூறியதில் இருந்தே இவர்கள் அம்மக்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது புரிந்தது. இத்தனைக்கும் இத்தொழிலாளர்கள் தமிழர்களாய் இருப்பதுதான் காரணம் என்று வேறு சிலர் கூறினர்.

இந்த நடவடிக்கை ஒன்றே தற்போது அம்பாறை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு வரும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் எந்த இலசணத்தில்நடக்கின்றன என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்து விட்டது.

அம்பாறை நகரம் தென்கிழக்கு மாகாண சபையின் தலை நகரமா அல்லது திகாமடுல்ல மாவட்டத்தின் தலைநகரமா என்பதே அங்கு தற்போது நடைபெறும் செயற்பாடுகளுக்கு ஆதார சுருதியாக இருந்து கொண்டிருக்கின்றது.

**1971க்கும் 1981ம் இடையிலான சனத்தொகை அதிகரிப்பு.**

| | 1971 | 1981 | | |
|---|---|---|---|---|
| சிங்களவர் | 82,280 | 146,371 | – | 78%ஆல் அதிகரிப்பு. |
| முஸ்லிம்கள் | 127,308 | 161,754 | – | 27%ஆல் அதிகரிப்பு. |
| தமிழர் | 62,290 | 78,315 | – | 25.7%ஆல் அதிகரிப்பு. |

**குடியேற்ற வீதம் (சிங்களக் குடியேற்றம்)**

| | | |
|---|---|---|
| 1947 | 2,394 | |
| 1952 | 3,119 | 30%ஆல் அதிகரிப்பு |
| 1956 | 3,905 | 25%ஆல் அதிகரிப்பு |
| 1960 | 23,000 | 500%ஆல் அதிகரிப்பு |
| 1965 | 31,000 | 35%ஆல் அதிகரிப்பு |
| 1970 | 39,000 | 26%ஆல் அதிகரிப்பு |
| 1977 | 46,000 | 13%ஆல் அதிகரிப்பு |
| 1982 | 75,000 | 64%ஆல் அதிகரிப்பு |

**(வாக்காளர் வீதம்) - (100 முஸ்லிம்களுக்கு)**

| | |
|---|---|
| 1947 | 5 |
| 1952 | 7 |
| 1956 | 9 |
| 1960 | 44 |
| 1965 | 55 |
| 1970 | 62 |
| 1977 | 68 |
| 1982 | 86 |

இந்த அடிப்படையில் முஸ்லிம்களுடைய போராட்டம் நியாயமானதுதான்.

அடிப்படையில் தற்போது அம்பாறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முஸ்லிம் சிங்கள வாதங்கள் இப்பொழுது தான் புதிதாக ஆரம்பிக்கப்பட்டவை அல்ல.

1971ம் ஆண்டு தொடக்கமே ஆரம்பமான போராட்டம் இது. இவ்விடயம் தொடர்பாக சில விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

இதன் அடிப்படையில் முஸ்லிம்களுடைய போராட்டம் நியாயமானதுதான்.

சத்தியசேர்த்தி .

## ஊழல்..

இதற்கு E.R.O. வின் தலைமை பதில் சொல்லியே தீர வேண்டும் என அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் கோருவதோடு, இதனை ஒரு சரியான படிப்பினையாகக் கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து நிற்கின்றன.

S.M.P. யில் இருந்து அகற்றப்பட்ட தார்சி செபமாலை தற்போது மட்டக்களப்பிற்கு வரும் வெளிநாட்டு நிறுவனப் பிரதிநிதிகளின் பின்னால் திரிந்து, தான் ஓர் அரச சார்பற்ற அமைப்பை உருவாக்கியிருப்பதாகக் கூறி அதற்கு உதவி புரியும்படி கேட்டுத்திரிவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சம்பளம் பெற்றுக்கொண்டு வேலை செய்த போது பெரும் தொகைப்பணத்தை ஏப்பம் விட்ட தார்சி செபமாலை சொந்த நிறுவனம் தொடங்கினால் எப்படியிருக்கும் என்பதை நினைக்கும் போதே விடையும் கிடைத்து விடுகிறது.

''நாய் வாலை யாராலும் நிமிர்த்தவே முடியாது''

பிரதம ஆசிரியர்: சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: [illegible] தம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 593615

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்